Issued 22-3-2007

வெளியீடு 22-3-2007
773
04/07/07

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, டிசம்பர் 5, 2006—தொகுதி 18—எண் 2

Tuesday the 5th December, 2006 – Volume 18 – No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

...tive Assembly Secretariat, Chennai - 600 009

P06182
227439

[Price Rs. 3.00

5-12-2006

## உள்ளடக்கம்


பக்கங்கள்

**1. இரங்கற் குறிப்பு—**

முன்னாள் உறுப்பினர் மறைவு 5

**2. வினாக்கள்-விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 6-35

**3. அறிவிப்புகள்—**

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல் 35-36

(ஆ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டமுன்வடிவு, 2006 (ஆ.இ.) 73

(இ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 (ஆ.இ.) 75

**4. தகவல் கோரல்—**

முல்லை பெரியாறு அணையில் 142 அடி உயரத்திற்கு நீரைத் தமிழகம் தேக்கிக்கொள்வது தொடர்பாக அரசின் நடவடிக்கை 36-70

**5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—**

(அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 70-71

(ஆ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 71-72

(இ) இந்திய முத்திரை மற்றும் பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 72-73

(ஈ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டமுன்வடிவு, 2006 73-74

பக்கங்கள்

**6. அரசினர் தீர்மானம்—**

பேரவை விதிகள் *30, 130* மற்றும் *132* ஆகியவற்றைத் தளர்த்துதல் — 74-75

**7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—**

(அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, *2006* — 75-80

- * மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் — 74, 75, 76
- திரு. சி. ஞானசேகரன் — 76-78
- திரு. ஜி.கே. மணி — 78, 79
- திரு. என். நன்மாறன் — 84, 85

(ஆ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, *2006* — 80-87

- * மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் — 80, 81, 82, 83
- திரு. கே.பி. அன்பழகன் — 81-82
- திரு. தி. வேல்முருகன் — 83-84
- திரு. என். நன்மாறன் — 84-85
- * திரு. தி. இராமசாமி — 85

(இ) இந்திய முத்திரை மற்றும் பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, *2006* — 87-92

- * மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் — 87, 91
- திரு. சி. ஞானசேகரன் — 87, 88-90
- திரு. [illegible] — 90


227439
சென்னை-600 008




பக்கங்கள்

**7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**
—தொடர்ச்சி

(ஈ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டமுன்வடிவு, *2006* — 92-126

- * மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா — 92, 121-124
- திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் — 92, 93-96, 106, 107, 108-109
- திரு. ஜி.கே. மணி — 96-100
- திரு. சி.வி. சண்முகம் — 100-106
- திரு. என். நன்மாறன் — 110-111
- திரு. வை. சிவபுண்ணியம் — 111-114
- * திரு. மு. அப்பாவு — 114-118
- * திரு. எச். வசந்தகுமார் — 118, 119, 120
- திரு. கு. செல்வம் — 120-121

**8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** — 126-128


D
V24,31006
P06.18.2

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## கார்த்திகை 19, விய – திருவள்ளுவர் ஆண்டு 2037

## 2006 டிசம்பர் 5, செவ்வாய்க்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"அஞ்சாமை யல்லால் துணைவேண்டா எஞ்சாமை*
*எண்ணி யிடத்தாற் செயின்."*

ஒரு செயலுக்குரிய வழி முறைகளைக் குறையின்றிச் சிந்தித்துச் செய்யுமிடத்து, அஞ்சாமை ஒன்றைத் தவிர, வேறு துணை தேவையில்லை.

## 1. இரங்கற் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரங்கற் குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர் திரு. வி. மதனகோபால் அவர்கள், 25–11–2006 அன்று மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. வி. மதனகோபால் அவர்கள், வேடசந்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1952 முதல் 1957 வரை சிறப்பான முறையில் பணியாற்றியுள்ளார்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*

[2006 டிசம்பர் 5

## 2. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள். வினா எண் 1. திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

1—

### அனல் மின் திட்டம்

***1682—திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யூர் அனல் மின் திட்டத்தை அரசு நிறைவேற்ற முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். தேசிய அனல் மின் கழகம், செய்யூர் அனல் மின் திட்டத்தை நிறைவேற்ற உரிய முயற்சியை விரைவில் மேற்கொள்ளும்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யூர் அனல் மின் திட்டம் எப்பொழுது தொடங்கப்படும்? இந்தத் திட்டத்தின்மூலமாக, தமிழக மின்சார வாரியத்திற்கு, எத்தனை மெகாவாட் மின்சாரத்தை, என்ன விலையில் கொள்முதல் செய்ய இருக்கிறீர்கள்? அதேபோன்று, இந்த செய்யூர் அனல் மின் திட்டத்திற்குத் தேவையான எரிபொருள், குறிப்பாக நிலக்கரி, கேஸ், ஆயில் போன்ற எரிபொருள்களெல்லாம் எப்படி, எந்த வழியில் வரப்போகின்றன? இதுபோன்ற பூர்வாங்க வேலைகளெல்லாம் முடிந்துவிட்டனவா? நமது பங்கு எத்தனை மெகாவாட் மின்சாரம் என்பதையும், எந்தக் காலகட்டத்தில் இந்தப் பணி முடிவு பெறும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.



2006 டிசம்பர் 5]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய அனல் மின் கழகம், செய்யூரிலே 2,000 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யவேண்டுமென்று, 1997 ஆம் ஆண்டிலேயே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தபோது, முயற்சி மேற்கொண்டது. அப்போது அமைச்சராக இருந்த, மறைந்த ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள், இடத்தைத் தேர்வு செய்து, சுமார் 2,000 ஏக்கர் நிலம் அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, சாலைப் பணிகளெல்லாம்கூட செப்பனிடப்பட்டு, தார்ச்சாலைகள் அமைக்கப்பட்டன. அவர் மறைந்ததற்குப் பிறகு, அந்தத் திட்டத்தை அப்படியே கைவிட்டுவிட்டார்கள். மீண்டும் மத்திய அரசாங்கம், இப்போது அந்தத் திட்டத்தை எப்படியும் நிறைவேற்ற வேண்டும், இந்தியாவினுடைய மின் பற்றாக்குறையைக் கருத்திற்கொண்டு உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். 30 ஆம் தேதி, அனல் மின் கழகத்தினுடைய தலைவர், தமிழகத்திற்கு வந்து, மின் வாரியத்திலே, மின் வாரியத் தலைவர், செயலாளர் மற்றும் நான் உட்பட அனைவரும் கலந்து பேசியபோது, தமிழக அரசு இதற்குரிய உதவிகளைச் செய்தால், இந்தத் திட்டத்தை நாங்கள் ஏப்ரல் மாதத்திலேயே எடுத்துக் கொள்வதற்குத் தயாராக இருக்கிறோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்று தெரிவித்தார்கள். தலைவர் கலைஞர் அவர்களுடைய அனுமதியோடு நிச்சயமாக நாங்கள் அனைத்து உதவிகளையும் செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறேன்.

*முற்பகல் 9–35*

2,000 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்ற நேரத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரையிலே அனல் மின் கழகம் உற்பத்தி செய்கின்ற அந்த மின்சார உற்பத்தியில் நமக்கு குறிப்பிட்ட ஒரு சதவிகிதம்தான் மின்சாரத்தைக் கொடுப்பார்கள். ஆனால், செய்யூரிலே உற்பத்தி செய்கின்ற மின்சாரத்திலே 50 சதவிகிதம் மின்சாரம் தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்வதாக வாக்குறுதி தந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் இன்னொரு கேள்வியைக் கேட்டிருக்கிறார். அதற்குத் தேவையான fuel நிலக்கரியா, Gas அல்லது எதை அடிப்படையாக வைத்துக்கொண்டு மின்சாரம் தயாரிக்கப் போகிறார்கள் என்று கேட்டார். நிலக்கரியை அடிப்படையாக வைத்துத்தான் அனல் மின் நிலையம் அங்கே தொடங்கவிருக்கிறார்கள். அந்த நிலக்கரியைக் கொண்டு வருவதற்கு, சென்னையிலேயிருந்து கொண்டு போவதாக இருந்தாலும் அல்லது கடலூரிலிருந்து கொண்டு வருவதாக இருந்தாலும், அதிக தூரம் ஆகும், செலவு அதிகம் ஆகும்

[2006 டிசம்பர் 5

என்ற காரணத்தாலே, செய்யூரிலேயே ஒரு Mini Port அமைப்பதற்கு தமிழக அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சரோடு கலந்து பேசி, நம்முடைய Maritime Board-உடன் கலந்து பேசி, அங்கே ஒரு Mini Port அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்பதைப்பற்றி மின் வாரியம் ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்டத்திலே, செய்யூரிலே திறக்கப்பட இருக்கிற அனல் மின் நிலையம் 2,000 மெகாவாட் திறன் கொண்டதாக இருக்கும் என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். உள்ளபடியே நாங்களெல்லாம் மகிழ்ச்சியடைகிறோம். அதேசமயத்திலே, இங்கே 50 சதவிகிதம் மட்டும்தான் நம்முடைய மாநிலத்திற்கு மின்சாரம் கொடுக்கப்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதை உயர்த்தி நம்முடைய அரசு கேட்குமா? அதேபோன்று அங்கே பணியமர்த்துகிறபொழுது என்னுடைய தொகுதியிலே இருக்கிற கல்பாக்கத்திலேகூட இன்றைக்கு உள்ளூரிலே இருக்கிறவர்களுக்கு வேலை கிடைக்காமல், வெளி மாநிலத்திலே உள்ளவர்கள் அதிகமாக வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். இங்கே வேலைவாய்ப்புக் கொடுக்கிறபொழுது நம்முடைய மாநிலத்திலிருந்து, குறிப்பாக எங்களுடைய மாவட்டத்திலே இருக்கிறவர்களுக்கு அதிகமாக வேலைவாய்ப்புக் கொடுப்பதற்கு, நம்முடைய அரசு இப்பொழுதே அதற்கான ஒரு சாத்தியக்கூறு ஏற்படுத்துமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் தெரிவித்ததைப்போல 2,000 மெகாவாட்டிலே 1,000 மெகாவாட் மின்சாரம் தமிழகத்திற்குக் கொடுக்கிறோம் என்று சொல்லியிருப்பதே நம்முடைய அரசாங்கத்தின் பெரிய சாதனையாகும். ஏனென்றால், 33 சதவிகிதம்தான் மற்ற மாநிலங்களிலே உற்பத்தி செய்கின்ற மின்சாரத்திலே மற்ற மாநிலங்களுக்கு வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். நமக்கு 50 சதவிகிதம் வழங்குவதாக வாக்குறுதி தந்திருக்கிறார்கள்.

அங்கே அந்த மின் நிலையம் அமைக்கும்போது உள்ளூரிலே இருக்கின்றவர்களுக்கு வேலைவாய்ப்பு தரப்படுமா என்று கேட்டார்கள். நிச்சயமாக 90 சதவிகிதம் தொழிலாளர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்,



2006 டிசம்பர் 5]

குறிப்பாக அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களுக்குத்தான் வேலைவாய்ப்புக் கொடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்யூர் அனல் மின் நிலையம் பற்றி கூறுகின்றபொழுது 2,000 ஏக்கர் நிலம், அதற்குண்டான அனைத்து உள் கட்டமைப்பு வசதிகளையும் மாநில அரசும், மின்சார வாரியமும் நிறைவேற்றித் தரும் என்று கூறினார்கள். அதைப் பார்க்கின்றபோது, நாம் 2,000 ஏக்கர் நிலம் கொடுக்கின்ற சூழ்நிலையில் அவர்கள் generation, அதாவது உற்பத்தி செய்கின்ற மின்சாரத்தில் நாம் ஏன் கூடுதலாக, 60 சதவிகிதம் அல்லது 75 சதவிகிதம் பெறமுடியாத நிலை? அதேபோன்று அவர்கள் நமக்குக் கொடுக்கின்ற மின்சாரத்திற்கு, வழங்குகின்ற மின்சாரத்திற்கு ஒரு யூனிட் என்ன விலை என்று நிர்ணயித்திருக்கின்றார்கள்? அந்த விலையையும், மிகக் குறைந்த விலையில் நாம் பெற்றோமானால் நமக்குச் சாதகமாக இருக்கும். நாம் என்ன விலை கொடுத்து வாங்கப் போகிறோம் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே, நாம் நிலம் கொடுத்திருக்கிறோம். சுற்றுச்சூழல் அனுமதியைப் பெற்றுத் தருகிறோம் என்று வாக்குறுதி தந்திருக்கின்றோம். கடலிலேயிருந்து தண்ணீர் எடுத்துக்கொள்வதற்குத் தேவையான அனுமதியைப் பெற்றுத் தருகிறோம் என்று சொல்லியிருக்கின்றோம். இவற்றைத் தவிர, மின்சார வாரியமோ, தமிழக அரசாங்கமோ அந்தத் திட்டத்திற்காக எந்த நிதி வசதியையும் செய்யப்போவதில்லை. 2,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதென்றால் 8,000 கோடி ரூபாய் செலவாகும். அந்த 8,000 கோடி ரூபாயையும், தேசிய அனல் மின் கழகம்தான் முதலீடு செய்யப்போகிறதே தவிர, தமிழ்நாடு அரசோ, மின் வாரியமோ எந்த முதலீடும் அதிலே செய்யப்போவதில்லை. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் திரும்பத் திரும்ப இன்னும் அதிகமான மின்சாரம் நம்முடைய மாநிலத்திற்கு கேட்கக்கூடாதா என்று கேட்கிறார். 50 சதவிகிதம் என்பதே அதிகமான அளவுதான். அதை ஒத்துக்கொண்டதற்காக நாம் அவர்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். ஒரு யூனிட் மின்சாரம் என்ன விலைக்கு வாங்கப் போகிறீர்கள் என்று கேட்டிருக்கிறார்கள். இன்னும் வேலையே தொடங்கப்படவில்லை. வேலை தொடங்கப்பட்டு

[2006 டிசம்பர் 5

அது முடிவடைவதற்கு மூன்று ஆண்டுகள் ஆகும். அதற்கிடையிலே ஒரு யூனிட் மின்சாரத்திற்கு விலை எவ்வளவு நிர்ணயிப்பது என்பது பற்றி மின்வாரியமும், அனல் மின் கழகமும் சேர்ந்து விவாதித்து முடிவு எடுப்பார்கள்.

முற்பகல் 9–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 2, மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**2—**

### புதிய ஊராட்சி

***1582—மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சங்ககிரி ஒன்றியம், தேவண்ணகவுண்டனூர் ஊராட்சியைப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சேலம் மாவட்டம், சங்ககிரி ஒன்றியம், தேவண்ணகவுண்டனூர் ஊராட்சியினைப் பிரிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள்மூலமாக ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவது, தேவண்ணகவுண்டனூர் ஊராட்சி என்பது தமிழகத்திலே இருக்கிற ஒரு பெரிய ஊராட்சி. இந்த



2006 டிசம்பர் 5]

ஊராட்சி 47 குக்கிராமங்களையும், 13 ஆயிரம் மக்கள் தொகையையும், 10,042 வாக்காளர்களையும் கொண்டது. வாக்குச் சாவடிகளின் எண்ணிக்கை 17. குடும்ப அட்டைகள் இந்தக் கிராமத்திற்குட்பட்டவை 3,253. மொத்த நிலப்பரப்பு 46.60 சதுர கிலோ மீட்டர்.

தேவண்ணகவுண்டனூர் பகுதி 16 குக்கிராமங்களையும், மலங்காடு என்ற பகுதி 14 குக்கிராமங்களையும், மஞ்சக்கல்பட்டி என்ற பகுதி 17 குக்கிராமங்களையும் கொண்டிருக்கிறது. ஆகவே, மலங்காடு பகுதியிலே தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மன்ற உறுப்பினர் தன்னுடைய குறையைச் சொல்ல, பகுதியினுடைய பிரச்சினையைப் பற்றிப் பேச, தேவண்ணகவுண்டனூர் ஊராட்சி மன்றத்திற்கு வரவேண்டுமென்றால், அவர் 22 கிலோ மீட்டர் பயணம் செய்ய வேண்டியிருக்கிறது. ஒன்றியக் குழு கவுன்சிலர்கள் இரண்டு பேர் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு கிராமம்; இரண்டு கிராம நிர்வாக அலுவலர்களைக் கொண்ட ஒரு கிராமம். ஆகவே, அந்தப் பகுதியினுடைய நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கிற அந்த மக்களுடைய உணர்வை அறிந்து விரைவிலே, தேவண்ணகவுண்டனூரை மூன்றாகப் பிரிக்க நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரிமை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முன்னுரிமை வழங்கி அதனைப் பிரிக்க முன்வருவார்களா என்பதை உங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கக்கூடிய அந்தக் கருத்தை அரசு முறையாகப் பரிசீலிக்கவிருக்கிறது. இருந்தாலும், இப்போது தொகுதி சீரமைப்புப் பணி நடந்து கொண்டிருக்கிறது. அந்தப் பணிகள் எல்லாம் முடிவடைகிறவரையிலே ஊராட்சியினுடைய அமைப்புகளை, எல்லைகளைச் சேர்க்கவோ, பிரிக்கவோ அல்லது மாற்றம் செய்யவோகூடாது எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு அரசு ஆணையும் வழங்கியிருக்கிறது. அதுமட்டுமல்ல, என்னுடைய மானியக் கோரிக்கையிலேகூட நான் தெரிவித்த நேரத்தில், இந்த எல்லைகளைப் பிரிப்பது, உயர்த்துவது அல்லது மாற்றுவது இந்தப் பிரச்சினைக்கு ஒரு நிபுணர் குழு அமைக்கப்படவிருக்கிறது என்பதை நான் தெரிவித்திருக்கிறேன். எனவே, மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் அமைக்கப்படவிருக்கக்கூடிய அந்தக் குழு அமைக்கப்பட்டு, அது தரக்கூடிய பரிந்துரைகளை ஏற்று இந்த அரசு செயல்படுத்தவிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

[2006 டிசம்பர் 5

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல சட்டமன்றத் தொகுதிகளின் எல்லைகள் மறு சீரமைப்பு முடிந்தபிறகு— தேவண்ணகவுண்டனூரைப்போல தமிழ்நாட்டில் பல்வேறு ஊராட்சிகள் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டிருக்கிற வாக்காளர்களைக் கொண்ட ஊராட்சிகளாகவும், அதைப்போல வெறும் ஆயிரம் வாக்காளர்களைக் கொண்ட ஊராட்சிகளாகவும் இப்படி பெரும் ஏற்றத்தாழ்வோடு இருக்கின்றன. ஆகவே, சட்டமன்றத் தொகுதிகளைச் சீரமைக்க குழு அமைத்ததைப்போல, இந்த ஊராட்சி எல்லைகளை மறு சீரமைப்புச் செய்வதற்கு ஒரு குழு அமைத்து அதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுமா, அடுத்து உள்ளாட்சி மன்றத் தேர்தலுக்குள் இந்தப் பணிகள் நிறைவேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9–45*

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே பதில் தெரிவித்த நேரத்திலேகூட குழு அமைக்கப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்திருக்கிறேன். எனவே, அந்தக் குழு அமைக்கப்பட்டதற்குப் பிறகு, விரைவாக அந்தப் பணிகளையெல்லாம் நிறைவேற்ற இந்த அரசு முன்வரும். எனவே, நிச்சயமாக உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அடிப்படையிலே, அடுத்த உள்ளாட்சித் தேர்தலுக்கு முன்பு அந்தப் பணிகள் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்ற உறுதியையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பெரிய ஊராட்சிகளையெல்லாம் நிர்வாக வசதிக்காக, மக்கள் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்ப்பதற்காக ஒரு நிபுணர் குழுவை அமைத்து பிரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்ற நல்ல செய்தியை இந்த மாமன்றத்திலே அறிவித்திருக்கிறார்கள். அதை மனப்பூர்வமாக வரவேற்கிறோம். இப்படி பெரிய ஊராட்சிகள் சமச்சீர் அடிப்படையிலே, மக்கள் தொகை அல்லது வாக்காளர் எண்ணிக்கையினை அடிப்படையாகக்கொண்டு பிரிக்கின்ற அதே வேளையில்—ஊராட்சி ஒன்றியங்களும், பெரிய அளவிலே இருக்கின்றன. அவை எல்லாம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு உட்பட்டது.



2006 டிசம்பர் 5]

14 ஊராட்சிகள், 15 ஊராட்சிகளைக் கொண்ட ஒன்றியங்களும் இருக்கின்றன. அதைப்போல 30–க்கு மேற்பட்ட ஊராட்சிகளைக் கொண்ட ஊராட்சி ஒன்றியங்களும் இருக்கின்றன. ஒரு சட்டமன்றத் தொகுதியில் ஏறக்குறைய ஒரு ஊராட்சி ஒன்றியம் அல்லது 1¼ ஊராட்சி ஒன்றியம் வரக்கூடிய அளவிலே இருக்கிறது. ஆகவே, அதையெல்லாம் மையமாக வைத்து—ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள், நகராட்சிகள் ஆகியவற்றை வாக்காளர் எண்ணிக்கையின் அடிப்படையில் சமச்சீராகப் பிரிப்பதற்கு இந்த நிபுணர் குழு பயன்படுமா? அதை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குழுக்கள் அமைக்கப்படுகின்ற நேரத்திலேகூட, மாவட்ட அளவிலே, மாநில அளவிலே அமைக்கப்படுகின்ற நேரத்தில், அந்தந்தத் தொகுதிக்கு உட்பட்டு இருக்கக்கூடிய சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள்கூட அந்தக் குழுவிலே இடம்பெற இருக்கிறார்கள். எனவே, நிச்சயமாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த அந்தக் கருத்தும், அந்தக் குழுவிலே பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 3, திரு. வை. சிவபுண்ணியம். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

3—

## விவசாய உற்பத்தி

***3227—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பிரதேசவாரியான மண் வளத்திற்கேற்ப விவசாய உற்பத்தி செய்திடும் புதிய திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த வகையில் நிறைவேற்றப்பட உள்ளது?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழகத்தில் பிரதேசவாரியான மண் வளத்திற்கேற்ப விவசாய உற்பத்தி செய்திடும் புதிய திட்டம் அரசிடம் தற்பொழுது இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

[2006 டிசம்பர் 5

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பிரதேசவாரியான மண் வளத்திற்கேற்ப உற்பத்தி செய்யப்படுவதன்மூலமாகத்தான் நம்முடைய உணவு உற்பத்தியிலே பெருமளவிலே தன்னிறைவு பெறுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. பல்வேறு மாவட்டங்களிலே, ஒவ்வொரு இடத்திற்கேற்ப மண் வளத்தினுடைய தன்மைகளும் மாறிக்கொண்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக எங்களுடைய காவிரி டெல்டா பாசனப் பகுதியில் ஒரேவிதமான முறையிலே அதிகமான அளவில் அரிசி உற்பத்தி மட்டுமே செய்யப்படுகிறது. வேறு சில மாவட்டங்களில் பருத்தி உற்பத்தி அதிகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதைவிடக் குறிப்பாக இப்பொழுது இருக்கிற பிரச்சினைகளிலே உணவு தானியம் என்று சொல்கிறபொழுது, அத்தியாவசிய உணவுப் பொருட்கள் உற்பத்தி என்ற முறையிலே பல வெளி மாநிலங்களிலிருந்து பல்வேறு உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. ஆகவே, அவற்றையெல்லாம் தன்னிறைவு செய்வதற்குரிய வாய்ப்புகள், தட்ப வெப்ப சூழ்நிலைகள் நமது தமிழகத்திலே இருப்பதாக வேளாண் துறையில் வேறு ஒரு முறையிலே சொல்லப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்தினுடைய மண் வளத்திற்கேற்ப புதிய நிலைமையிலே தட்ப வெப்ப நிலைகளை உணர்ந்து, அதன்மூலமாக நமது உற்பத்தியைப் பெருக்குவதற்கும், வேளாண் தொழிலை நவீன முறையிலே அபிவிருத்தி செய்வதற்கும் ஒரு புதிய திட்டத்தின்மூலமாக நிறைவேற்றுவதற்கான முயற்சியை அரசு விரைவாக மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய வினா, நில புலன் ஆய்வு மையம் பற்றியது என்று நான் கருதுகின்றேன். அது தமிழகத்திலே 4 இடங்களில் இப்பொழுது செயல்பட்டு வருகிறது 1. கோவை, 2. வேலூர், 3. தஞ்சாவூர், 4. திருநெல்வேலி. அந்த இடங்களிலே நிலத்தினுடைய தன்மை என்ன என்பதை வேளாண்மைத் துறை ஆய்வு செய்து, ஆலோசனைகள் வழங்கி வருகின்றது. இன்னொன்று மண் ஆய்வு செய்வது, வேளாண்மைத் துறையிலே தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 19 மண் பரிசோதனை நிலையங்கள் மற்றும் 16 நடமாடும் மண் ஆய்வுக் கூடங்கள் மூலம் விவசாயிகளின் விளை நிலங்களிலிருந்து பெறப்படும் மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, அந்த நிலத்தின் மண் வளத்திற்கேற்பவும், பயிருக்கு ஏற்பவும், உர சிபாரிசையும் ஒருங்கிணைத்து, ஊட்டச் சத்து நிர்வாக அடிப்படையில் வழங்கப்பட்டுப் வருகிறது. வருடத்திற்கு 6.5 இலட்சம் மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, பரிந்துரைகள் செய்யப்பட்டு வருகின்றன



2006 டிசம்பர் 5]

2005–2006 ஆம் ஆண்டு வரை, 2.70 இலட்சம் மண்வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து, மண்வள அட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளன. ஒரு மண் பரிசோதனைக்கு, பேரூட்டச் சத்து ஆய்வுக்கு ரூ.5-ம், நுண்ணூட்டச் சத்து ஆய்வுக்கு ரூ.5-ம் இப்போது வசூலிக்கப்பட்டு, விவசாயிகள் நிலங்களிலே மண் ஆய்வு செய்யப்பட்டு, ஆலோசனையும் வழங்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 9–50

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண் வளத்திற்கு ஏற்ப ஆய்வுகள் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கி இருக்கிறார்கள். குறிப்பாக, மண் வளத்திற்கேற்ப ஆய்வுகள், உற்பத்தி என்ற முறையில், நம்முடைய வேளாண் துறை ஈடுபடுகிறது என்பதிலே எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், நாம் பசுமைப் புரட்சி என்ற அடிப்படையிலே, ஒரு கால கட்டத்தில் தொடங்கி, வேகமான உற்பத்தி என்ற முயற்சிகள் எடுப்பதற்காக பல்வேறுவிதமான இரசாயன உரங்கள், பூச்சி மருந்துகள் இவற்றையெல்லாம் பயன்படுத்தி, உற்பத்தியை அதிகப்படுத்தி, அதன்மீது சாதனை படைத்த வரலாறுகள் உண்டு. இது இந்திய அளவிலும், தேசிய அளவிலும், உலக அளவிலும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இப்போது புதிதாக எழுந்திருக்கிற நிலைமைகள், இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் என்பதே. அது மனித இனத்திற்கு, உயிரைப் பறிக்கக்கூடிய அளவிலே இருக்கிறது; உணவுப் பொருள்களிலே கலந்துவிடுகிறது என்கிற நிலைமைகள் ஏற்பட்டு, இப்போது இயற்கை உரத்தின் மூலமாக சாகுபடி செய்கிற முறைகளைக் கொண்டு வரலாம் என்கிற ஒரு புதிய யுக்தி கையாளப்படுகிறது. அப்படிப் பார்க்கிறபோது, நம்முடைய உற்பத்தியினுடைய அளவு குறையும் என்ற ஒரு கவலை இருக்கிறது. ஆனால், இதையெல்லாம் சரிசெய்வதன்மூலமாக, எப்படி நம்முடைய உணவு உற்பத்தியை தன்னிறைவு செய்யப் போகிறோம் என்பது எதிர்கால கேள்விக்குறியாக இருக்கிறது. இது தேசிய அளவிலே எடுக்கப்பட வேண்டிய பிரச்சினை என்றாலும், நம்முடைய மாநிலம் விரைவாக, தொலைநோக்குப் பார்வையோடு, சிந்தித்துச் செயலாற்றுவதற்குரிய முயற்சியை நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் எடுப்பார்கள் என்ற காரணத்தாலே இதைப்பற்றி தீவிரமாகச் சிந்தித்து, அதற்கு முன்னுதாரணமாக நம்முடைய மாநிலத்தைத் திகழச் செய்வதற்குரிய முயற்சியை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப்போது மரபணு விதைகள் தமிழகத்திலே கோவை, ஈரோடு மாவட்டங்களிலே (மணியடிக்கப்பெற்றது) அதை

[2006 டிசம்பர் 5

உற்பத்தி செய்வதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு, அது அழிக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், நீங்கள் கேள்வியைவிட்டு வெளியே போகிறீர்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** அப்படிப்பட்ட பாதிப்புகள் வருவதைத் தமிழகத்திலே தடுப்பதற்கான முயற்சியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இறுதியாக மரபணு விதைகளைப் பற்றிச் சொன்னார்; அதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் தருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடு) சரி, உட்காருங்கள்.

வினா எண் 4, திரு. எம். பன்னீர்செல்வம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**4—**

**தூர் வாரும் பணி**

***2279—திரு. எம். பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதியிலுள்ள பெருந்தோட்டம் ஏரி மற்றும் திருவாலி ஏரி ஆகியவற்றைத் தூர்வார அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சீர்காழி தொகுதியிலுள்ள பெருந்தோட்டம் ஏரியானது கிட்டத்தட்ட 137 ஏக்கர் பரப்பளவைக் கொண்டது, 2,000 ஏக்கருக்கும் மேற்பட்ட நன்செய் நிலம் பாசனம் பெறுகிறது. அதேபோன்று, திருவாலி ஏரியும் 130 ஏக்கர் பரப்பளவைக் கொண்டது, 5,000–க்கும் மேற்பட்ட



2006 டிசம்பர் 5]

ஏக்கர் பாசனத்தைப் பெறுகிறது. இந்த இரண்டு ஏரிகளிலும் நெய்வேலி காட்டாமணக்கும் மற்றும் காடுகளும் வளர்ந்து மற்றும் மண்ணும் தூர்ந்து பாசனத்திற்கு இடையூறாக இருக்கிறது. தூர் வாரும் பணி எடுத்துக்கொள்ளப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எப்போது எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது; எவ்வளவு நிதி ஒதுக்க இருக்கிறார்கள் என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பெருந்தோட்டம், திருவாலி ஏரி ஆகிய இரண்டு ஏரிகளையும் தூர் வாருவதற்கு, அந்தத் தொகுதியினுடைய எம்.பி.–ஆக இருக்கக்கூடிய மணிசங்கர் அய்யர் அவர்கள், பெட்ரோலியத் துறை அமைச்சராக இருந்தபோது, பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷனிலிருந்து நிதி வாங்கித் தருகிறேன் என்று தெரிவித்தார்கள். பொதுப் பணித் துறைமூலம் ஒரு எஸ்டிமேட் போட்டு அனுப்புங்கள் என்று கேட்டார்கள். ஏரி ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய் வீதம் பொதுப் பணித் துறை ஒரு எஸ்டிமேட்டைப் போட்டு, 15–10–2005–லேயே அனுப்பியது. ஆனால், இதுவரையிலே அங்கிருந்து எந்தப் பதிலும் வரவில்லை. இருந்தாலும், சுனாமியால் பாதிக்கப்பட்டது நட்டுக்கண்ணியார், வெள்ளப்பள்ளம், பெரும்வெள்ள வடிகால் ஏரிகள். அந்தப் பகுதிகளில் கரை எல்லாம் உடைந்து போய் விட்டது. எனவே, அந்தப் பகுதிகளைச் செப்பனிடுவதற்கு, இந்த இரண்டு ஏரிகளில் இருக்கின்ற களிமண்ணை எடுத்துப் போடலாம் என்று அரசு யோசித்து, அந்த இரண்டு ஏரிகளில் இருக்கின்ற மண்ணை எடுத்து, நட்டுக்கண்ணியார், பெரும்பள்ளம், பெரும்வெள்ள வடிகால்களைச் செப்பனிடுவதற்கு ஒரு estimate போடப்பட்டு, tender விடப்பட்டு, Tender Award Committee–க்கு வந்திருக்கிறது. இந்த மாதத்தில் Tender Award Committee பரிசீலனை முடிந்தவுடன், பணி எடுத்துக்கொள்ளப்படும்.

*முற்பகல் 9–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகக் கடற்கரை ஆயிரம் கி.மீ. நீளம் கொண்டதாகும். எண்ணற்ற முகத்துவாரங்கள் –estuaries– அதாவது, கடல் நீரும், ஆற்று நீரும் கலக்கின்ற இடங்கள் தூர் வாரப்படாமல், முகத்துவாரம் அடைபட்டுக் கிடக்கின்ற காரணத்தால், கடலிலே மீன் குஞ்சுகள் உற்பத்தி

[2006 டிசம்பர் 5

பாதிக்கப்படுகிறது. இது ஒன்று. இரண்டாவதாக, மீனவர்கள், முகத்துவாரங்களை ஆழப்படுத்துவதன்மூலம் தங்களுடைய நாட்டுப் படகுகளையும், மற்ற கட்டுமரங்களையும் முகத்துவாரம் வழியாக கடலில் எடுத்துச் செல்ல முடியும். மூன்றாவதாக, முகத்துவாரங்களை ஆழப்படுத்துவதன்மூலம், கடல் அரிப்பை நிச்சயமாகத் தடுக்க முடியும். எனவே, இந்த மூன்று நன்மைகள் முகத்துவாரங்களை ஆழப்படுத்துவதன்மூலம் ஏற்படும் என்கின்ற சூழ்நிலையில், இதற்காக தனியாக ஒரு Dredging Corporation–ஐ ஏற்படுத்தி, கடற்கரையை ஒட்டியுள்ள முகத்துவாரங்களை ஆழப்படுத்துவதற்கு, தூர் வாருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி ஏரியைப் பற்றியது. குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தில் இருப்பதைப் பற்றியது. ஆற்று முகத்துவாரங்களில் தூர் வாரினால், மீன் குஞ்சுகளுக்கு என்ன நன்மை ஏற்படும் என்று இவ்வளவு அக்கறையோடு இருக்கின்ற ஜெயக்குமார் அவர்கள் ஒரு கேள்வியைப் போட்டால், முழு விவரத்தையும் நான் தரத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**5—**

### பேருந்து வசதி

***1562—திரு. கே.வீ. ராமநாதன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பவானி தொகுதி, கவுந்தபாடி-ஈரோடு வரை நகரப் பேருந்தும், வளையகாரன்பாளையம், பெரியபுலியூர், தயிர்பாளையம் வழியாக புதிதாக வழித்தடமும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ)* மற்றும் *(ஆ)* கவுந்தபாடி–ஈரோடு வழி வளையகாரன்பாளையம், பெரியபுலியூர், தயிர்பாளையம் வழியாக இயக்கப்பட்ட தனியார் நகரப்



2006 டிசம்பர் 5]

பேருந்து நிறுத்தப்பட்டுவிட்டதால், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தால் தற்போது 4 தனி நடைகள் நகரப் பேருந்து இயக்கப்படுகிறது.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஈரோட்டிலிருந்து கிராமப்புறங்களுக்கு, தயிர்பாளையம், வளையகாரன்பாளையம், பெரியபுலியூர் வழியாக ஒரு தனியார் பேருந்து 1975–லிருந்து இயக்கப்பட்டு வந்தது. அந்தப் பேருந்து புறநகர்ப் பேருந்தாக மாற்றப்பட்ட பின்பு, அந்தப் பகுதிகளுக்கு அரசுப் பேருந்து மூன்று முறைகள் சென்று வருகிறது. அந்தப் பகுதி கிராமப் பகுதியாக இருக்கின்றபடியால், ஈரோடு – கவுந்தபாடி வழியாக அந்தப் பகுதிக்குச் செல்கின்ற பள்ளி மாணவர்களும், அதேபோன்று வேலைக்குச் செல்பவர்கள், நோயாளிகள் எல்லாம் சென்று வருவதற்கு மிகவும் சிரமமாக இருக்கின்றது. ஆகவே, அந்த வழித் தடத்தில் அரசுப் பேருந்து இயக்குவதை புதிதாக இன்னும் அதிகப்படுத்தி, அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்கள் வெளியிலே சென்று வருவதற்கு அமைச்சரவர்கள் தகுந்த நடவடிக்கையை எடுப்பார்களா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஆய்வு செய்யப்பட்டு, நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் சட்டமன்றத் தொகுதியில், கரூரிலிருந்து சேலம், கரூர், நாமக்கல் செல்லும் பேருந்துகள் தளவாய்பாளையம், தோட்டக்குறிச்சி வழியாக அனுமதி பெற்று, தற்சமயம் தேசிய நெடுஞ்சாலையில் சென்றுவிடுகின்றன. அப்பகுதி மக்களும், நானும் பல்வேறுமுறை அதிகாரிகளிடம் கோரிக்கை வைத்து, இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நடவடிக்கை எடுக்கப்படுமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்து உள்ளே வராமல் பை–பாஸ் வழியே போய்விடுகிறது என்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும். ஏற்கெனவே உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும், பேருந்துகள், பேருந்து நிலையத்திலேயே நிரம்பிவிட்டால், நேரடியாகச் சென்றுவிடுகின்ற வழக்கம் இருந்துகொண்டிருக்கிறது. இருந்தாலும், தனி

நடையாக தளவாய்பாளையம் செல்ல முடியுமா, அந்த வழியில் செல்ல முடியுமா என்று ஆய்வு செய்யலாம். எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிச்சயம் பரிசீலிக்கப்படும்.

முற்பகல் 10–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. கணேசன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**6—**

**கட்டட வசதி**

***602—திரு. ஆர்.டி. கணேசன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி தொகுதி, சின்னமனூர் நகராட்சியில் சார்பதிவாளர் அலுவலகம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தேனி தொகுதி, சின்னமனூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி தொகுதி, சின்னமனூர் நகராட்சியில் அமைந்துள்ள சார்பதிவாளர் அலுவலகம், 1927 அக்டோபர் 1-ல் தொடங்கப்பட்டு, மாதம் ஒன்றுக்கு 550 முதல் 600 பத்திரங்கள் வரை, 17 வருவாய்க் கிராமங்களை உள்ளடக்கிப் பத்திரப் பதிவு நடைபெற்று வருகிறது. அங்கிருக்கின்ற கட்டடம் மிகவும் பழுதான சூழ்நிலையில் இருப்பதாலும், பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதாலும், புதிய அலுவலகம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற நிதியாண்டில் நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி, மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**7—**

**நீதிமன்ற வளாகம்**

***5636—திரு. கே.பி. இராமசுவாமி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராசிபுரம் நீதிமன்றத்திற்குப் புதிய நீதிமன்ற வளாகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம், அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. கே.பி. இராமசுவாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான ராசிபுரம் பகுதியிலே, 1981-லே அந்தக் கட்டடம் கட்டுவதற்காக 1.85 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூடியவிரைவிலே அங்கே உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றக் கட்டடம் கட்டித்தர முன்வருவார்களா என்பதை உங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை, வருகிற நிதி ஆண்டிலே அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என். பெரியண்ணன்.

**திரு. பி.என். பெரியண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரம் பகுதியிலுள்ள முன்சீப் கோர்ட்டுக்கு அரசாங்கத்திடம் 10 ஆண்டுகளுக்கு முன்பே இடம் சமர்ப்பிக்கப்பட்டும்,

[2006 டிசம்பர் 5

அங்கு நீதிமன்றக் கட்டடம் கட்டப்படாமல், தனியார் அலுவலகத்தில் நடைபெற்றுவருவதால், அங்கு நீதிமன்றக் கட்டடம் அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகங்கள் கட்டுவதற்கு தமிழக அரசு, மத்திய அரசினுடைய 50 சதவிகிதப் பங்கீட்டை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் இரண்டுமுறை நினைவூட்டல் கடிதம் மத்திய அரசுக்கு எழுதியிருக்கின்றார்கள். வெகு விரைவிலே அந்த நிதி கிடைத்தவுடனே, மாநில அரசினுடைய நிதி 50 சதவிகிதம் அளிக்கப்பட்டு, பல புதிய நீதிமன்ற வளாகங்கள் தமிழகத்திலே கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஏழு ஆண்டுகளாகவே மத்திய அரசால் அனுப்பப்படுகிற, 50 சதவிகிதப் பங்கீடு வருகிறது, வருகிறது என்று சட்டத் துறை அமைச்சர்கள் தொடர்ந்து இந்த அவையிலே சொல்லிக்கொண்டிருப்பதைத்தான் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதிலே தலையிட்டு—நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்தவர் அங்கே அமைச்சராக இருக்கிற காரணத்தினாலே—பல ஊர்களில், நீதிமன்றங்களில் எங்களுடைய மாவட்டத்திலேயே 7 இடங்களில் தேவைப்படுகின்றன. அதேபோல, தமிழகம் முழுவதிலும்—பல இடங்களில் இந்த 50 சதவிகிதம் மத்திய அரசு கொடுக்கவேண்டியதை கொடுக்காமல் இருக்கின்ற காரணத்தினாலே, இதே பதிலை சட்டத் துறை அமைச்சர் சொல்லி, கட்டடங்கள் வராமல் இருந்துகொண்டிருக்கின்ற காரணத்தினாலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலையிட்டு—எப்படியாவது வரக்கூடிய அந்த 50 சதவிகிதத்தை மத்திய அரசிடமிருந்து பெற்று, எல்லா நீதிமன்றங்களையும் கட்டுவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஒரே பதிலைத் தொடர்ந்து சொல்வதாக இங்கே தெரிவித்தார்கள். ஆனால், நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள், அப்படியில்லாமல் மத்திய அரசினுடைய நிதியை எதிர்பார்க்காமல், இந்த மாதம் தமிழகத்திலே மிகவும் பின்தங்கியிருக்கிற



2006 டிசம்பர் 5]

பெரம்பலூர் மாவட்டத்திற்கு, மாவட்ட ஒருங்கிணைந்த வளாகத் திட்டத்திற்காக, ரூ. 8¾ கோடியை தமிழக அரசு நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள் என்ற ஒரு நல்ல செய்தியை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அரசு எதிர்பார்த்துக் கொண்டிருப்பதற்குக் காரணம், தமிழகத்திலே பல புதிய நீதிமன்ற வளாகங்கள் கட்டுவதற்கு கோரிக்கைகள் இருக்கின்றன. அந்த புதிய நீதிமன்ற வளாகங்கள் கட்டுவதற்கு ஏற்கெனவே ஒரு திட்ட மதிப்பீடு (Perceptive Plan) தொலைநோக்குத் திட்டம் ரூ. 200 கோடிக்கு மேலாக, அதிலே செலவிட வேண்டியிருக்கிறது. மாநில அரசு தயாராக இருக்கிறது. இது தமிழகத்திற்கு மட்டுமல்ல; இந்தியாவிலே இருக்கின்ற அத்தனை மாநிலங்களும், 1993ஆம் ஆண்டிலிருந்து இதே திட்டத்தைத்தான் தொடர்ந்து கடைபிடித்து வருகின்றன. அதை எதிர்பார்க்காமல் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் தாயுள்ளத்தோடு பின்தங்கி இருக்கிற மாவட்டத்திற்கு 8¾ கோடி ரூபாய் வழங்கியிருக்கிறார்கள்.

முற்பகல் 10–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை நீதிமன்றம் நூற்றாண்டு பழமையுடைய நீதிமன்றம். அந்த நீதிமன்றத்திலிருந்து கட்டடம் கட்டுவதற்காக ஒரு கருத்துரு தயாரிக்கப்பட்டு, சென்னை உயர் நீதிமன்ற கட்டுமானப் பிரிவில் அந்தக் கருத்துரு தற்போது உள்ளது. அது ஏற்றுக்கொள்ளப்பட்டு அதற்குரிய நிதியொதுக்கப்பட்டு, குழித்துறை நீதிமன்ற வளாகம் கட்டித் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரி இருப்பதைப்போல, மிக அத்தியாவசியமான, பழுதடைந்திருக்கிற நீதிமன்றங்களைக் கட்டுவதற்கு, மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்தாலோசித்து, வருகின்ற ஆண்டுகளிலே தொடர்ந்து ஒவ்வொரு நீதிமன்றமாக, புதிய வளாகங்கள் கட்டுவதற்கு உரிய நடவடிக்கையை அரசு எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 8, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, மாண்புமிகு சுற்றலாத் துறை அமைச்சர் அவர்கள்.

[2006 டிசம்பர் 5

8—

**சுற்றுலாத்தலம்**

***6041—செல்வி கே. பாலபாரதி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்லில் உள்ள சிறுமலை சுற்றுலாத்தலமாக அறிவிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல்லில் உள்ள சிறுமலையை சுற்றுலாத்தலமாக அறிவித்திட எவ்விதச் செயற்குறிப்பும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்லில் உள்ள சிறுமலை இயற்கைச்சூழல் நிறைந்த ஒரு சிறு குன்று போன்ற ஒரு பகுதி. அங்கு 1999–2000–ல் திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபோது சுற்றுலாத்தலமாக அறிவித்து கோடை விழாக்கள் இரண்டு முறை நடத்தப்பட்டன. ஆனால், அதற்கு அடுத்தகட்டமாக அதிகாரபூர்வ அறிவிப்பும், நிதியொதுக்கீடும் இல்லாததன் காரணமாக சிறுமலை சுற்றுலாத்தலமாக உள்ளதா, இல்லையா என்ற சந்தேகம் தொடர்ந்து மாவட்ட நிர்வாகத்திற்கும் இருந்து வருகிறது. ஆகவேதான், இந்தக் கேள்வி எழுப்பப்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இயற்கைச்சூழல் நிறைந்த, மூலிகைகள் நிறைந்த, அந்தச் சிறுமலைப் பகுதியைச் சுற்றுலாத்தலமாக அறிவிக்கிறபொழுது, திண்டுக்கல் நகரத்தினுடைய மத்திய தர மக்களுக்கும், தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய மக்களுக்கும் அது மிகச் சிறந்த மூலிகைக் காற்று நிறைந்த சுற்றுலாப் பகுதியாக விளங்கும். ஆகவே, அதுகுறித்து எதிர்காலத்தில் அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த ஆண்டு சுற்றுலாத் துறையின் சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு, 60 இலட்சம் ரூபாய் அந்த



2006 டிசம்பர் 5]

மாவட்டத்திற்கு முக்கியமான சுற்றுலா இடங்களில் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திண்டுக்கல் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் இந்த ஆண்டு அதிகமான பயணிகள் வருகை தந்திருக்கிறார்கள். உள்நாட்டுப் பயணிகளுடைய எண்ணிக்கையைப் பொறுத்தமட்டில் 18 இலட்சத்து 405 பேர்களும், வெளிநாட்டுப் பயணிகளுடைய எண்ணிக்கையைப் பொறுத்தமட்டில் 4,034 பேர்களும் வருகை தந்திருக்கிறார்கள். எனவே, நிச்சயமாக சிறுமலையைப் பொறுத்தமட்டில் சுற்றுலாத் துறையின் சார்பாக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படும் என்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கு தோட்டக்கலைத் துறையிடம் இருக்கக்கூடிய 600 ஏக்கர் நிலப்பரப்பில் செயற்கை ஏரியும், ஒரு நல்ல பூங்காவும் அமைக்கப்பெற்றால் அது மிகச் சிறந்த சுற்றுலாத்தலமாக மாறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இந்த இரண்டு தேவைகளும் எதிர்காலத்தில் நிறைவேற்றப்படுமா என்பதனை மாண்புமிகு அமைச்சர்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் துறையோடு கலந்து பேசி நிச்சயமாக நிறைவேற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்போரூர் தொகுதியிலுள்ள முட்டுக்காடு படகு குழாம் ஒரு சுற்றுலாத்தலம் ஆகும். ஆனால், அங்கு தேவையான படகு வசதி மிகவும் குறைவாக உள்ளது. மேலும், அங்கு வந்து செல்லும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான கழிப்பிட வசதி, தங்கும் வசதி மற்றும் விளையாட்டுத் திடல் போன்றவை இல்லை. எனவே, அமைச்சர் அவர்கள் அதற்குத் தகுந்த ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[2006 டிசம்பர் 5

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்போரூர் பகுதிகளில் படகு வசதிகளை மேம்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களும் தமிழகத்தினுடைய சுற்றுலாத் துறையை மேம்படுத்த வேண்டுமென்று கட்டளையிட்டிருக்கிறார்கள். நிச்சயமாக வருங்காலத்தில் படகுகள் அதிகப்படுத்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**9—**

## நலத் திட்டங்கள்

***5274—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு கொண்டு வரும் நலத் திட்டங்களை விவசாயிகள் தெரிந்துகொள்ள செய்தித் துறைமூலம் கார்ட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நம்முடைய முத்தமிழறிஞர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசு, சமுதாயத்தின் அனைத்துத் தரப்பு மக்களுக்கான திட்டங்களைத் தீட்டி இப்பொழுது செயல்படுத்திக்கொண்டு வருகிறது என்பது அனைவரும் அறிந்த ஒன்று. அதிலும் குறிப்பாக, எப்போதும் விவசாயிகளுக்கு முன்னுரிமை தந்து, அவர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறார்கள். எனவே, விவசாயிகளுக்காகத் தீட்டப்படுகின்ற திட்டங்கள், அவற்றை அவர்கள் தெரிந்துகொண்டு முழுமையாக நுகர வேண்டும் என்கிற விழிப்புணர்வை உண்டாக்குகின்ற வகையில், 'உங்கள் அரசு, உங்கள் வாசலிலே' என்ற உயரிய நோக்கத்தோடு, இந்தச் செய்தித் துறை,



2006 டிசம்பர் 5]

அவர்களுக்கு விளக்குவதற்காக வீடியோ செய்தி மூலமாகவும், 35 மில்லிமீட்டர் வண்ண பிலிம் செய்தி மலராகவும் கீழ்க்கண்ட தலைப்புகளில் தயாரித்து வெளியிட்டுள்ளது:

வீடியோ விளக்கப் படங்கள். 'வளம் தரும் திசையில் வளமாகும் தமிழகம்; 'காடு செழித்தால் நாடு செழிக்கும்; வளமை காண்போம் வறுமையை விரட்டுவோம்; நல்லாட்சியில் பசுமைப் புரட்சி; உழவரைப் பாதுகாக்கும் உன்னதத் திட்டம்'. இவை வீடியோ விளக்கப் படங்கள்.

35 மில்லிமீட்டர் செய்தி மலர்கள். 'வளம் தரும் திசையில் வளமாகும் தமிழகம்; வளமை காண்போம் வறுமையை விரட்டுவோம்; நல்லாட்சியில் பசுமைப் புரட்சி'.

இவைமட்டுமல்லாமல், அந்தந்தத் துறைகள் செய்கின்ற சாதனைகளை அவர்கள் விளக்கி நுகர்வோருக்குக் கொண்டுச் செல்ல வேண்டுமென்று எங்களை நாடுகின்ற நேரத்தில் அவர்களிடமிருந்து நிதியைப் பெற்று, அதற்கான செய்தி மலர்கள், வீடியோ காட்சிகளைத் தயாரித்துத் தருகிறோம். அந்த வகையிலே வேளாண்மைத் துறையிலிருந்து கிடைக்கப் பெற்ற நிதியின்மூலம் 'மண் ஆய்வு; பொழுது விடிஞ்சாச்சு; விடியலை நோக்கி; காற்றுக்கு நேரமில்லை; பருத்தி; வேளாண்மை உரம்' போன்ற செய்தி மலர்களை, விவசாயிகளுக்கு, அவர்கள் இருக்கின்ற அந்தப் பகுதிகளுக்கே சென்று, அவர்களுக்கு அவற்றைக் காட்டி, அவர்களிடம் அந்த விழிப்புணர்வையும் உண்டாக்கி, அதற்கான திட்டங்களின்மூலம் முழுமையாக அவர்கள் பலன் பெறவும், இந்தச் செய்தித் துறை முனைப்பாக, தலைவர் கலைஞருடைய வழிகாட்டுதலின்பேரில் செயல்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் ஐயா அவர்களுடைய தலைமையில் நல்ல பல அரிய சாதனைகளையும், நலத் திட்டங்களையும் அறிவித்திருப்பதைச் சுட்டிக்காட்டினார்கள். அதனை நான் வரவேற்கின்றேன். ஆனாலும், விவசாயிகள் காலையிலே பத்திரிகைகள் படிப்பதற்குக் காலம் அவர்களுக்கு உரியதாக இல்லை. பழையபடி தமிழக அரசின் மூலமாக, செய்தித் துறையின்மூலமாக, செய்தித் திரைப்படமாகத் தயாரித்து, அரசு நலத் திட்டங்களை அறிவித்தால், மக்களுக்கு, குறிப்பாக, கிராமத்திலேயிருக்கின்ற விவசாயிகளுக்கு அது நல்ல முறையிலே போய்ச் சேரும்; அரிய நலத் திட்டங்களை மக்கள் அறிவார்கள். குறிப்பாக, 7 ஆயிரம் கோடி ரூபாய் டாக்டர் கலைஞர் ஐயா அவர்கள் தலைமையில் அமைந்துள்ள அரசில் விவசாயிகளுக்கு நீங்கள் கடன்களைத் தள்ளுபடி

செய்திருக்கின்றீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, பயிர்க் கடன் வட்டி விகிதம் 7 விழுக்காடாகக் குறைத்திருக்கின்றீர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) ஆயிரம் கோடி ரூபாய் விவசாயக் கடன்களுக்கு ஒதுக்கீடு செய்திருக்கின்றீர்கள்; விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் பாதுகாப்பும் மற்றும் பல நல்ல திட்டங்களை இயற்றியிருக்கின்றீர்கள்; விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியிருக்கின்றீர்கள். விவசாயிகளுக்கு மானியத்தில் விதைகள் வழங்கியிருக்கின்றீர்கள். (குறுக்கீடுகள்)

இப்படி பல நல்ல திட்டங்களை அறிவித்த தாங்கள், ஏன் பழையபடி செய்தித் துறை மூலமாக திரைப்படமாகத் தயாரித்து, கிராமங்களிலே இருக்கின்ற விவசாயிகளுக்கு நீங்கள் தெரியப்படுத்த முன்வரக் கூடாது என்பதை இந்த நேரத்தில் கேட்டு... (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா தி.மு.க. ஆட்சியிலே விவசாயிகளுக்கு ஒன்றும் செய்யவில்லை. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒன்றும் செய்யவில்லை, (குறுக்கீடுகள்) அதனால்தான் அவர்கள் பேசுகிறார்கள். (குறுக்கீடுகள்) அதைப்பற்றி எனக்குக் கவலையும் இல்லை. (குறுக்கீடுகள்) ஆகவே ஒன்றுமே செய்யவில்லை. சும்மா கத்தட்டும். (குறுக்கீடுகள்) அதனால் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏன் மீண்டும் அரசு பரிசீலிக்கக் கூடாது என்பதை இந்த நேரத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–15

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசினுடைய திட்டங்களை அவர் படிப்படியாக சொல்லி வந்ததிலிருந்தே எல்லோர் மனதிலும் ஆழமாகப் பதிந்து இருக்கின்றது என்பது தெரிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த வாரம் 28, 29 ஆகிய தேதிகளில் சேலத்திலே, நாமக்கல், கிருஷ்ணகிரி, தருமபுரி ஆகிய மண்டலங்களைச் சேர்ந்த செய்தி–மக்கள் தொடர்புத் துறை அலுவலர்களையும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலே கூட்டி வைத்து ஆய்வு செய்து, அவர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டு இருக்கின்றன.

அதேபோல கோயம்புத்தூரில் நடைபெற்ற அந்த ஆய்வுக் கூட்டத்திலும் மாண்புமிகு உறுப்பினர் கோவை தங்கம் அவர்கள் வந்து கலந்து கொண்டார்கள். எனவே, தாங்கள் கூறிய அந்தக் கருத்துகள்





அடிப்படையிலே, ஏற்கெனவே கிராமம் கிராமமாகச் சென்று வீடியோ திரைப்படம் மூலம் அரசின் பல்துறை விளக்கச் சாதனைகள் எடுத்துக்காட்டப்பட்டு வருகின்றன என்பது மட்டுமல்ல. எங்கெல்லாம் வெகுமக்கள் கூடுகிறார்களோ,—அதிகமான மக்கள் கூடுகின்ற இடம்—அண்மையிலே திருவண்ணாமலை மாவட்டத்திலே, கார்த்திகை தீபத் திருவிழா நடைபெற்றது. அங்கே செய்தித் துறையின்மூலம் கண்காட்சி நடைபெற்றது. பல்வேறு துறைகளில் நடைபெற்ற சாதனைகளை விளக்கி, பல்துறை சாதனை விளக்கக் கண்காட்சி நடைபெற்றது. அதில் குறிப்பாக வேளாண்மைத் துறையின் சார்பில் வைக்கப்பட்டிருந்த அந்தக் கண்காட்சி அரங்கிற்கு வந்து போனவர்கள், பலர் நல்ல விழிப்புணர்வோடு சென்றார்கள். இன்றைக்கு எரிவாயு, டீசல், பெட்ரோல் தட்டுப்பாடு அதிகமாக இருக்கின்ற இந்தக் காலக்கட்டத்திலே, ஜெட்ரோபா பயிரிட்டால் Bio-diesel கிடைக்கும். அதை எவ்வாறு பயிரிடலாம்; அதற்குரிய பக்குவமான நிலம் என்ன; அதைப் பெறுவதற்குரிய வழி என்ன என்பதையெல்லாம் அவர்கள் தெரிந்துகொண்டு மகிழ்ச்சியோடு சென்றார்கள். இவையெல்லாம் செய்தித் துறையினுடைய ஒளிபரப்பின்மூலமாகக் கிடைத்த வெற்றி என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 10 (குறுக்கீடு) திரு. கோவை தங்கம், அமைச்சர் ரொம்பத் தெளிவாகச் சொல்லிவிட்டார். நீங்களும் சொல்ல வேண்டிய எல்லாக் கருத்துகளையும் சொல்லிவிட்டீர்கள். இன்னும் என்ன இருக்கிறது? (குறுக்கீடு) சரி, என்ன சொல்லுங்கள், சொல்லுங்கள். கேள்வி மட்டும் கேட்க வேண்டும், கேள்வி மட்டும் கேட்க வேண்டும்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய நலத் திட்டங்கள் விவசாயிகளுக்குப் போய்ச் சேருமா? அரசு, விவசாயிகளுக்கு திரைப்படம்மூலம் தெரியப்படுத்துமா என்பதுதான் என்னுடைய கேள்வி? ஆகவே, அரசு செய்கின்ற நலத் திட்டங்களைத் தெரியப்படுத்தாமல் எப்படிக் கேள்வி கேட்க முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சரி, கேள்வி மட்டும் கேளுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** ஆகவே, அரசினுடைய நலத் திட்டங்கள் என்றால்—ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்குகின்றீர்கள், கலர் டி.வி. இலவசமாக வழங்குகின்றீர்கள்; Gas அடுப்பு இலவசமாக வழங்குகின்றீர்கள், இப்படிப்பட்ட நலத் திட்டங்களை, 6 மாதத்தில் இன்னும் நல்ல பல பணிகளைச் செய்ததை நாங்கள் எப்படிச் சொல்லாமல் இருக்க முடியும்? இப்படித்தான் பெருந்தலைவர் காமராஜ்

[2006 டிசம்பர் 5

அவர்களுடைய ஆட்சியில், அணைகளைக் கட்டினோம்; பள்ளிக்கூடங்களைத் திறந்தார்; மாணவர்களுக்குச் சத்துணவு வழங்கினார்; ஆனால், மக்களுக்கு எங்களுடைய பணிகள் போய்ச் சேரவில்லை. ஆகவே, அன்று முதல் இன்று வரை நாங்கள் ஆட்சியில் இல்லாமல் இருக்கின்றோம். ஆகவேதான் மாண்புமிகு தமிழக முதல்வர் ஐயா அவர்களுடைய தலைமையில் சீரும் சிறப்புமாக நடைபெறுகின்ற இந்த ஆட்சியில், விவசாயிகளுக்கு, மக்களுக்கு பல நல்ல அரிய திட்டங்கள் போய்ச் சேரவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, வால்பாறைக்கு 5 ஆண்டு காலம் கல்லூரி கேட்டேன், கிடைக்கவில்லை. ஆனால் தளபதி, அண்ணன் ஸ்டாலின் அவர்கள் தலைமையிலே 6 அமைச்சர்கள் வந்து கல்லூரியைத் திறந்து வைத்திருக்கின்றார்கள். இது சாதனை அல்லவா? இது நலத் திட்டம் அல்லவா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோவை தங்கம், கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** டாக்டர் கலைஞர் ஐயா அவர்கள் தலைமையிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி மாத்திரம்.

**திரு. கோவை தங்கம்:** 100 நாட்களிலே என்னுடைய வால்பாறை தொகுதியிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒரு கல்லூரி வழங்கி இருக்கின்றார், இது சாதனை அல்லவா? (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குச் சம்பந்தமாகக் கேளுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** வால்பாறை தொகுதிக்கு இதுவரை ஒரு அமைச்சர்கூட வந்து அங்கே நலத் திட்டத்தைத் தொடங்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி.

**திரு. கோவை தங்கம்:** தளபதி, அண்ணன் உள்ளாட்சித் துறை அமைச்சர் ஸ்டாலின் அவர்கள் தலைமையில்...



2006 டிசம்பர் 5]

(திரு. டி. ஜெயக்குமார், திரு. செ.ம.வேலுசாமி, திரு. கு. பாண்டுரங்கன், திரு. செந்தமிழன், திரு. இரா. விசுவநாதன், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் ஆகியோர் எழுந்து நின்றனர்) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள்... (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள், (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள் (கூச்சல்—குழப்பம்) உட்காருங்கள் சார். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். கோவை தங்கம் உட்காருங்கள். உட்காருங்கள் நீங்கள். (கூச்சல்—குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள், அமைச்சர் பதில் சொல்லுங்கள் (குறுக்கீடுகள்) அமைச்சர் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோவை தங்கம் அவர்கள் கேட்ட கேள்விக்கு பதில் சொல்வதற்கு முன்பு நான் ஏற்கெனவே இந்த அவையில் பேரவைத் துணைத் தலைவராக இருந்து பணியாற்றியவன் என்ற முறையிலே ஓர் அன்பான வேண்டுகோள். (குறுக்கீடுகள்)

முற்பகல் 10–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள், அமைதியாக இருங்கள். சொல்லுங்கள். நீங்கள் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) கொஞ்சம் அமைதியாக இருங்கள் நான் சொல்லிவிடுகிறேன். அவர்களே, நான் ஏற்கெனவே இந்தப் பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இந்தப் பேரவையினுடைய துணைத் தலைவராக இருந்து பணியாற்றிய காரணத்தால்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செ.ம. வேலுசாமி உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** எல்லா உறுப்பினர்களுக்கும் பொதுவான ஒரு வேண்டுகோள். கேள்வி நேரத்திலே உங்கள் கேள்விகளைக் கேளுங்கள். அடுத்தவர்களை குறை சொல்லி, குற்றஞ்சாட்டி பேசக்கூடாது என்பது பொதுவாக எல்லோருக்கும் ஒன்று. அதைத்தான் இப்போதும் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

[2006 டிசம்பர் 5

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ.ம. வேலுசாமி, ஏற்கெனவே சொல்லிவிட்டேனல்லவா, உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** அடுத்தது, அவர் கேட்கின்ற கேள்வி, திரைப்படமாகத் தயாரித்து, காண்பிக்க முடியுமா என்பது. திரைப்படமாகத் தயாரித்தால் திரையரங்குகளுக்குத்தான் அவர்கள் வந்து பார்க்க முடியும். அந்தக் குறையைப் போக்கவேதான் வீடியோ படமாகவும், வீடியோ செய்தி மலராகவும் தயாரித்து, அவர்கள் இருக்கின்ற இடத்திற்கே சென்று செய்தித் துறை ஒளிபரப்புகிறது என்பதை உங்கள் மேலான கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 10, மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு, மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அமைதியாக இருங்கள். சத்தம் போடாதீர்கள். அமைதியாக இருங்கள்.

**10—**

## புதிய கட்டடங்கள்

***1161—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கஸ்தூரிரெங்கபுரம் அரசு உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடங்கள் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கஸ்தூரிரெங்கபுரம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்ட இடவசதி இல்லை. பழைய ஓட்டுக் கட்டடம் மற்றும் ஆஸ்பெஸ்டாஸ் கட்டடத்தை இடித்த பின்பு அவ்விடத்தில் புதிய இரண்டு வகுப்பறைக் கட்டடங்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேலுசாமி, உட்காருங்கள், உட்காருங்கள்.



2006 டிசம்பர் 5]

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997 ஆம் ஆண்டிலே டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற நல்ல ஆட்சியில் கல்வி அமைச்சராக இருந்த பேராசிரியர் அவர்களால் திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கஸ்தூரிரெங்கபுரத்தில் இயங்கி வந்த நடுநிலைப் பள்ளியானது உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டு அந்தப் பள்ளிக்கு சட்டமன்ற உறுப்பினருடைய நிதியிலிருந்து 2 இலட்சம் ரூபாயும், நாடாளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து 5 இலட்சம் ரூபாயும், இரண்டு வகுப்பறைகளும், சர்வ சிக்ஷா அபியான்–'அனைவருக்கும் கல்வி' என்ற திட்டத்தில் 2 வகுப்பறைகளும், ஆக மொத்தம் 4 வகுப்பறைகள் மட்டும் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன. ஏற்கெனவே அறிவியல் ஆய்வுக்கூடமானது ஒரு பழுதடைந்த கட்டடத்திலும், தலைமையாசிரியருடைய அறையானது பழுதடைந்த ஒரு மிக மோசமான கட்டடத்திலும், ஆஸ்பெஸ்டாஸ் போடப்பட்ட ஒரு வகுப்பறையும் மிகவும் பழுதான நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன. மேற்படி 3 பகுதிகளில் உள்ள பழுதுகளையும் உடனடியாக நீக்கித்தர வேண்டுமென்று பொதுப் பணித் துறை கட்டடப் பிரிவுக்கு பலமுறை தகவல் கொடுத்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கிறது. தற்போது அனைவருக்கும் கல்வித் திட்டத்தில் புதிதாக 3 வகுப்பறைகள் கட்டித் தருவதாக நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கூறியதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, ஏற்கெனவே பழுதடைந்த நிலையில் இருக்கிற கட்டடங்களில் உள்ள பழுதுகளை உடனடியாக பொதுப் பணித் துறை கட்டடப் பிரிவு மூலம் நீக்கிவிட வேண்டுமென்றும், அதற்கு நீங்கள் உறுதியளிக்க வேண்டுமென்றும் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று இதை நீக்கி விட்டாலும் அருகில் இருக்கின்ற ஆரம்பப் பள்ளியில் ஓரளவுக்கு கட்டடங்கள் இருக்கின்றன. அந்த இடத்தில் இந்த வகுப்பறைகளையும், ஆய்வுக்கூடத்தையும் வைத்து புதிய கட்டடம் கட்டும் வரை நாங்கள் சமாளித்துக் கொள்வோம். ஆகவே, தற்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாகச் செய்ய வேண்டிய பணி, பழுதடைந்த நிலையில் இருக்கின்ற 3 கட்டடங்களையும் அப்புறப்படுத்தி விரைவாகப் புதிய கட்டடங்கள் கட்டித் தர வேண்டும்; தருவார்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழுதடைந்த கட்டடங்களை உடனடியாக அப்புறப்படுத்துவதற்கு பொதுப் பணித் துறையினுடைய செயற் பொறியாளரிடத்திலே கலந்து பேசியிருக்கிறோம். அவர்களும் விரைவில்

[2006 டிசம்பர் 5

அந்தக் கட்டடத்தை அப்புறப்படுத்தித் தருவதாக உறுதியளித்திருக்கிறார்கள். எனவே, அந்தக் கட்டடங்கள் அங்கே அப்புறப்படுத்தப்பட்டவுடன் அங்கே அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் உடனடியாக 2 வகுப்பறைகள் கட்டித் தரப்படும் என்ற உறுதியை நான் மாண்புமிகு உறுப்பினருக்கு அளிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயம் அரசு மேல்நிலைப் பள்ளியின் காம்பவுண்டு சுவர் பல ஆண்டுகளுக்கு முன்னால் இடிந்து விழுந்த காரணத்தால், சமூக விரோதிகள் இரவு நேரங்களில் உள்ளே சென்று, அங்கே சூதாட்டம் போன்ற பழக்கங்களிலே ஈடுபட்டு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அங்கே கழிப்பறைகளாகப் பயன்படுத்திக் கொண்டு இருக்கிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. மிகப் பெரிய காம்பவுண்டு சுவர்; அது பல ஆண்டுகளாக நிலுவையில் இருக்கிறது. எங்கள் அண்ணன் தங்கம் கல்லூரி கேட்டார்கள் கொடுத்தீர்கள். நான் கட்டட காம்பவுண்டு சுவர்தான் கேட்கிறேன். எனவே, கண்டிப்பாக அங்கே படிக்கிற குழந்தைகள் நலனைக் கருதி. அங்கே சுகாதாரத்தைக் கருத்திலே கொண்டு, காங்கேயம் அரசு மேல்நிலைப் பள்ளியிலே காம்பவுண்டு சுவர் கட்டுகிற பணியினை அமைச்சர் அரசின்மூலமாகச் செய்து கொடுப்பாரா? அது மிகப் பெரிய காம்பவுண்டு சுவர். அது பல ஆண்டுகளாக நிலுவையில் இருக்கிற பிரச்சினை. எனவே, கருணைகூர்ந்து, இன்றைக்கு இந்த ஏழைக் குழந்தைகளுக்காக, அரசுப் பள்ளிகளிலே, மேல்நிலைப் பள்ளிகளிலே படிக்கின்ற குழந்தைகளுடைய நலனுக்காக, பாதுகாப்பிற்காக, சுகாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு காம்பவுண்டு சுவர் கட்டித்தர வேண்டும் என்ற கோரிக்கையை அரசுக்கு வைத்து, அதைச் செய்து கொடுப்பாரா என்று தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளுக்குக் காம்பவுண்டு சுவர் கட்டவேண்டும் என்ற கோரிக்கை, பல பள்ளிகளிலிருந்தும், பல சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்தும் அரசுக்கு வரப்பெற்றன. எனவே, இந்த வருடம் நபார்டு திட்டத்தின்கீழே ஏற்றுக்கொள்ளக்கூடிய பணிகளிலே இதுவரை வகுப்பறைகளுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டு வந்த அந்த அனுமதி, இந்த



2006 டிசம்பர் 5]

வருடத்திலிருந்து நபார்டு 8–வது திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளக்கூடிய பள்ளிகளுக்குக் காம்பவுண்டு சுவரும் கட்டித் தருவதற்கு நபார்டு நிதியுதவியைக் கோரினோம். அவர்களும் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்த நபார்டினுடைய உதவியிலே பல பள்ளிகளுக்கு இந்த ஆண்டு முதல் காம்பவுண்டு சுவர் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்துகூட அதைக் கட்டுவதற்கு அவர்கள் ஆவன செய்யக்கூடும். இருந்தாலும்கூட, அவர்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பியிருக்கக்கூடிய காரணத்தாலே, safety என்ற அடிப்படையிலே தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து காம்பவுண்டுச் சுவரை அவர் எழுப்ப முடியும். இருந்தாலும் நபார்டு திட்டத்தின்கீழே இந்த முறை அதை எடுத்துக்கொள்வதற்கு அரசு நிச்சயமாக உறுதி அளிக்கும். மாண்புமிகு நம்முடைய உறுப்பினர் விடியல் சேகர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்வது, நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய இந்தப் பொன்னான ஆட்சியிலே உங்களுடைய காம்பவுண்டுச் சுவரும் விடியலைக் காணும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. அறிவிப்புகள்

### (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை (குறுக்கீடுகள்) உட்காருங்கள் முதலில். (குறுக்கீடுகள்) முதலில் நான் சொல்லிவிடுகிறேன், உட்காருங்கள். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)–ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் மூன்றாவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கின்றேன்.

1. திரு. ப. ரங்கநாதன்
2. திரு. துரை சந்திரசேகரன்

3. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

4. திரு. தி. வேல்முருகன்

5. செல்வி கே. பாலபாரதி

6. திரு. வை. சிவபுண்ணியம்.

## 4. தகவல் கோரல்

### முல்லை பெரியாறு அணையில் 142 அடி உயரத்திற்கு நீரைத் தமிழகம் தேக்கிக்கொள்வது தொடர்பாக அரசின் நடவடிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் முல்லை பெரியாறு பிரச்சினையைப் பொறுத்தவரையில், தமிழக மக்களை மிகவும் கவலை பற்றிக்கொண்டுள்ளது. தினந்தோறும் மக்கள் தங்களுடைய உரிமையைக் காப்பதற்கு தமிழக எல்லைகளில், கேரளா செல்கின்ற தமிழக எல்லைகளில் எங்களின் உரிமையை அரசு மெத்தனப் போக்கோடு அணுகுகின்றது என்பதனைச் சுட்டிக்காட்டி, வழிமறித்து உட்காருவது போன்ற ஒரு பதற்றமான சூழ்நிலை தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லி சென்று பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டிருக்கிறார்கள். பேச்சுவார்த்தையில் கலந்துரையாடப்பட்ட கருத்தின் அடிப்படையில் என்ன பேசினார்கள்; மத்திய அரசு என்ன வாக்குறுதி தந்தது; கேரள அரசினுடைய நிலை என்ன என்பதனை சபைக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்று நான் இங்கு கேட்டுக்கொள்கின்றேன். ஆகவே, இன்றைய சபையின் அலுவல்களை ஒத்திவைத்து அனைத்துக் கட்சிகளைச் சார்ந்த தலைவர்களுக்கும் பேசுவதற்கு வாய்ப்பளித்து, அதற்குப் பின்னால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முல்லை பெரியாறு பிரச்சினையில் அரசு எடுத்திருக்கின்ற நடவடிக்கைகள் என்ன என்பதனை அறிய விரும்புகிறேன் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், நீங்கள் வேண்டுகோள் கொடுத்திருக்கிறீர்கள். அது ஆய்வில் இருக்கிறது. பார்த்து செய்வோம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதையெல்லாம் உடனே எடுக்க வேண்டும் என்று ஒன்றும் கட்டாயம்





இல்லை. (குறுக்கீடுகள்) கட்டாயம் இல்லை. (குறுக்கீடுகள்) அது ஆய்வில்தான் இருக்கிறது. (குறுக்கீடுகள்) நீங்கள் என்னிடம் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) ஆய்வுக்குப் பின்னால்தான் எடுத்துக்கொள்ளப்படும். பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடுகள்) இன்றைக்குத் தான் நீங்கள் கொடுத்தீர்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மற்றவர்கள் ஏன் எழுந்து நிற்கிறீர்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசிக்கொண்டிருக்கிறார். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. சி.வி. சண்முகம்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சண்முகம், தேவையில்லாத வார்த்தைகளை சபையில் பேசுகிறீர்கள். நீங்கள் சொன்ன அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) உட்காருகிறீர்களா, இல்லை நடவடிக்கை எடுக்க வேண்டுமா உங்கள்மேலே? (குறுக்கீடுகள்) இன்றைக்குத்தான் நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். அது ஆய்விலே இருக்கிறது; நான் எடுத்துக்கொள்கிறேன் என்று சொன்னால், அதற்குள்ளே இப்போது, உடனே எடுக்க வேண்டுமென்று சொன்னால் என்ன அர்த்தம்? (கூச்சல்-குழப்பம்) கத்தாதீர்கள். உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள்.

முற்பகல் 10–30

**திரு. டி. ஜெயக்குமார்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜெயக்குமார், உட்காருங்கள். கத்தக் கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அடுத்த சப்ஜெக்ட்டுக்குப் போங்கள். (குறுக்கீடுகள்) சண்முகம் You are exceeding the limit. Sit down. (குறுக்கீடுகள்) உட்காருங்கள் முதலிலே. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர், என்ன இதுதான் உங்கள் பண்பா? நீங்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே பின்னாலேயிருந்து பேசுகிறார்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை. நான் கூறுகிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நான் பேசுகிறேன். சண்முகத்திடம் நீங்கள் பேச வேண்டாம், நான் பேசுகிறேன். அனுமதி கொடுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையினுடைய முக்கியத்துவத்தை இன்றைக்குத் தமிழக மக்கள்...

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2006 டிசம்பர் 5

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அடுத்த சப்ஜெக்ட்டுக்குள்ளே போகலாம்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** போக முடியாது. இன்றைக்கு இருக்கிற...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் டென்ஷன் ஆகாதீர்கள். இன்றைக்குத்தான் நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். இன்றைக்கு உடனே எடுக்க முடியாது. ஆய்விலேதான் இருக்கிறது. (குறுக்கீடுகள்) இன்றைக்குத்தான் கொடுத்திருக்கிறீர்கள். இன்றைக்குக் கொடுத்த சப்ஜெக்ட்டை உடனே எடுக்க முடியாது. நான் ஆய்வு செய்துதான் எடுக்க முடியும். (குறுக்கீடுகள்) No. (குறுக்கீடுகள்) No, No, No, முடியாது. (குறுக்கீடுகள்) ஏற்றுக்கொள்ள முடியாது. நீங்கள் இன்றைக்குக் காலையிலேதான் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) காலையிலே 9–00 மணிக்கு, சபை கூடுவதற்கு முன்னாலே 9–00 மணிக்குத்தான் கொடுத்திருக்கிறீர்கள். அது ஆய்விலே இருக்கிறது.

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் எழுந்து நின்று கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்)*

அதை ஆய்வு செய்து, அதற்குள்ள விவரங்களைச் சேகரித்துத்தான் சொல்ல முடியும். நீங்கள் நினைத்தவுடனே பதில் சொல்லக்கூடிய அளவிலே இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சர்வாதிகாரம் இல்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுத்த கோரிக்கை (குறுக்கீடுகள்) இன்றைக்குக் காலையிலேதான் கொடுத்திருக்கிறீர்கள். ஆய்விலே இருக்கிறது. ஆய்வு செய்து அதற்குப் பின்னாலே எடுத்துத்தான் சொல்வோம். நீங்கள் நினைத்த உடனேயெல்லாம் எடுக்க முடியாது. அது அப்படி எடுக்க முடியாது. (குறுக்கீடுகள்) அப்படி விதியிலே இல்லை. அப்படி விதியில்லை. நீங்கள் கொடுத்த உடனே எடுக்க வேண்டுமென்று விதியிலே இல்லை. (குறுக்கீடுகள்) கிடையாது. நீங்கள் கொடுத்த உடனே எடுக்க வேண்டுமென்று விதியிலே ஒன்றும் இல்லை. நான் ஆய்வு செய்துதான் எடுப்பேன். உட்காருங்கள்.

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் எழுந்து நின்று தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)*



2006 டிசம்பர் 5] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு உறுப்பினர் சுதர்சனம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் சுதர்சனம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் சுதர்சனம் பேசுங்கள். (குறுக்கீடுகள்) செங்கோட்டையன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதிக்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர் சுதர்சனம் பேசுங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருகிறீர்களா? எல்லோரும் உட்காருங்கள் முதலிலே. எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) கையை நீட்டிப் பேசினால் நடவடிக்கை எடுப்பேன். உட்காருங்கள். உட்காருங்கள் முதலிலே. (குறுக்கீடுகள்) உட்காருங்கள் முதலிலே. உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்) நீங்கள் அந்த சப்ஜெக்ட்டை இன்றைக்கு எடுப்பேன் என்று எதிர்பார்க்க வேண்டாம். (குறுக்கீடுகள்) ஆய்விலே இருக்கிறது. அதை ஆய்வு செய்து பின்னாலேதான் எடுக்க முடியும். சுதர்சனம் நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** தலைவர் அவர்களே, ஆய்விலே எடுங்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதாவது, அவை மரபு என்பது, பேரவைத் தலைவர் எழுந்து நின்றால் உறுப்பினர்கள் உட்கார வேண்டும். அதுதான் மரபு. அந்த மரபுகூடத் தெரியாமல் சும்மா நின்றுகொண்டேயிருந்தால் நான் என்ன செய்வது? மாண்புமிகு உறுப்பினர் சுதர்சனம் நீங்கள் பேசுங்கள். சுதர்சனம் உங்கள் கருத்தைச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) சுதர்சனம் உங்கள் கருத்தைச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) செங்கோட்டையனை நான் பேச அனுமதிக்கவில்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் செங்கோட்டையனை நான் பேச அனுமதிக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சுதர்சனம் நீங்கள் பேசுங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுதர்சனம் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருகிறீர்களா, நடவடிக்கை எடுக்க வேண்டுமா? உட்காருகிறீர்களா, நடவடிக்கை எடுக்க வேண்டுமா? (குறுக்கீடுகள்) நான் சுதர்சனத்தைப் பேசச் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) நான் சுதர்சனத்தைப் பேசச் சொல்லியிருக்கிறேன்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுதர்சனம் பேசுங்கள். (குறுக்கீடுகள்) சுதர்சனம் பேசுங்கள். (குறுக்கீடுகள்) சுதர்சனத்தைத்தான் நான் பேசச்

சொல்லியிருக்கிறேன். நீங்கள் உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) செங்கோட்டையன், நீங்கள் உட்காருங்கள். நான் சுதர்சனத்தைப் பேசச் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) அதற்குப்பிறகு பார்க்கலாம், நீங்கள் உட்காருங்கள். முதலிலே நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) No, அவர் பேசட்டும். நீங்கள் பேசுங்கள் திரு. சுதர்சனம்.

*முற்பகல் 10–35*

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியாது, முடியாது. திரு. செங்கோட்டையன், திரு. சுதர்சனம் பேசியதற்குப் பிறகு உங்களை அனுமதிக்கிறேன். அவருக்கு நான் அனுமதி கொடுத்திருக்கிறேன். உட்காருங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லை பெரியாறு அணை பிரச்சினை, எல்லோருக்கும், தமிழகத்திலே இருக்கின்ற அத்தனை மக்களுக்கும் பொதுவான பிரச்சினை. இந்த அரசு அதற்காக எதையும் செய்யவில்லை என்று பின்னாலேயிருந்து விரும்பத்தகாத வார்த்தைகளை மன்ற உறுப்பினர்கள் இந்தப் பிரச்சினையிலே எழுப்புவது... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், உட்காருங்கள். அவர் பேசட்டும். நீங்கள் உட்காருங்கள். அவர் பேசட்டும், உட்காருங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** இந்த உயிர்நாடிப் பிரச்சினையிலே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Mr. கொறடா, நீங்கள் உட்காருங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** தமிழக மக்களுடைய இந்த உயிர்நாடிப் பிரச்சினையிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதோ பாருங்கள் செங்கோட்டையன்...

**திரு. டி. சுதர்சனம்:** அரசியல் தலைவர்கள் தலையிட்டு, அதனாலே கேரள மக்களுக்கும் தமிழக மக்களுக்கும் ஓர் இணக்கமான சூழ்நிலை இருப்பதைக் கெடுக்க நினைப்பது மிகவும் கேவலமான ஒன்றாகும். (குறுக்கீடுகள்) ஏனென்று சொன்னால், முல்லை பெரியாறு அணை பிரச்சினை என்பது நம்முடைய உரிமை. அந்த உரிமையைக் கேட்பது





நமது கடமை. நம்முடைய முதலமைச்சர் அவர்கள், அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, இங்கே நம்முடைய... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அக்ரி கிருஷ்ணமூர்த்தி, திரு. சண்முகம், இரண்டுபேரும் உட்காருங்கள். ஓர் உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது நீங்கள் நின்றுகொண்டிருப்பது முறையல்ல. உட்காருங்கள். திரு. ஜெயக்குமார், உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) முடியாது. (கூச்சல்–குழப்பம்) உட்காருங்கள் முதலில். நீங்கள் உட்காருங்கள் முதலில். (கூச்சல்–குழப்பம்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன், உட்காருங்கள் நீங்கள். ஓர் உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது இன்னோர் உறுப்பினர் எழுந்து நிற்பது முறையல்ல. அவை மரபல்ல, அவை நாகரீகமல்ல. உட்காருங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** முல்லை பெரியாறு அணை பிரச்சினை பற்றி இங்கே அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்து ஆலோசனை நடத்தினார்கள். அந்த ஆலோசனைக் கூட்டத்திலே, முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சர், இந்நாள் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் கலந்துகொண்டு ஆலோசனை வழங்கினார்கள். அதற்குப் பின்னாலே, அங்கே உச்ச நீதிமன்றம் இரு மாநில முதலமைச்சர்களும் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று ஆலோசனை வழங்கியதன்படி, இரண்டு மாநில முதலமைச்சர்களும் பேசியிருக்கின்றார்கள். பேசி, அதிலே, பத்திரிகையிலே முதலமைச்சர் என்ன பேசினார் என்பதை விளம்பரமாக... (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சண்முகம், உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய பேச்சு, கேரள மக்களுக்கும், தமிழகத்திலே வாழ்கின்ற கேரள மக்களுக்கும், கேரளத்திலே வாழ்கின்ற தமிழக மக்களுக்கும் எந்தவிதமான இன்னல்களும், இடையூறுகளும், துன்பங்களும், துயரங்களும் வரக் கூடாது என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில், நம்முடைய வாழ்வாதாரப் பிரச்சினையான முல்லை பெரியாறு அணை பிரச்சினைபற்றி சுமுகமான முடிவெடுக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் அந்தப் பேச்சுவார்த்தை நடைபெற்றிருக்கிறது. அந்தப் பேச்சுவார்த்தை விவரங்களை நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இன்றைக்குக் கேட்டிருக்கின்றார்கள். அதை நீங்கள்

[திரு. டி. சுதர்சனம்] [2006 டிசம்பர் 5

எடுத்துக்கொள்ளவதோ, எடுத்துக்கொள்ளாததோ உங்களுடைய விருப்பம். (குறுக்கீடுகள்) அது சபாநாயகருடைய விருப்பம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் பொறுங்கள். முல்லை பெரியாறு அணை சம்பந்தப்பட்ட பிரச்சினையை சுமுகமாக முடிக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களா, இல்லை கெடுக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களா? (கூச்சல்–குழப்பம்) உங்களுடைய இந்த மாதிரி நடவடிக்கைகள் சரியாக இருக்காது, உட்காருங்கள். உட்காருங்கள். உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். உங்களுடைய நடவடிக்கைகள், இந்தப் பிரச்சினை சுமுகமாக முடிவதற்கு இடையூறாக இருக்கும். அமைதியாக உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுங்கள்.

முற்பகல் 10–40

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லை பெரியாறு பிரச்சினையில்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருகிறீர்களா, இல்லையா? அமைச்சர் பேசிக் கொண்டிருக்கும்போது சேகர்பாபு, நீங்கள் எழுந்து நின்று பேசுவது முறையல்ல. உட்காருங்கள். அமைச்சர் பேசிக் கொண்டிருக்கும்போது, எழுந்து நின்று பேசுவது, (குறுக்கீடுகள்) சேகர்பாபு, நீங்கள் அமைச்சர் பேசிக் கொண்டிருக்கும்போது, எழுந்து நின்று பேசுவது முறையல்ல. உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லை பெரியாறு பிரச்சினையில்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** திராவிட முன்னேற்றக் கழகம் 1998 ஆம் ஆண்டு முதற்கொண்டு கேரள அரசோடு பேசி, ஒரு சுமுக சூழ்நிலை ஏற்படுத்த வேண்டும் என்று பல்வேறு நடவடிக்கைகள் எடுத்தது. ஆனால், உச்ச நீதிமன்றம் 142 அடி உயரத்திற்கு நீரைத் தமிழகம் தேக்கிக் கொள்ளலாம். அதற்கு கேரள அரசு அனுமதிக்க வேண்டும் என்று 2006 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தீர்ப்பு வழங்கியது. பிப்ரவரி மாதம் தீர்ப்பு வழங்கியதற்குப் பிறகு மே மாதம் வரையிலே அமைதியாக இருந்த ஓர் அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள்... (குறுக்கீடுகள்)



2006 டிசம்பர் 5]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** என்ன சொல்ல வருகிறேன் என்று கேளுங்கள். (குறுக்கீடுகள்) என்ன சொல்ல வருகிறேன் என்று கேளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசிக் கொண்டிருக்கிறார். உங்கள் கருத்தைச் சொல்ல வேண்டுமென்றால், அமைச்சர் பேசி முடித்ததற்குப் பிறகு சொல்லுங்கள். உட்காருங்கள் முதலிலே. உட்காருங்கள். உட்காருங்கள் முதலில். உட்காருங்கள். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொல்ல வருகிறேன் என்றுகூடத் தெரிந்துகொள்ளாமல், அனைவரும் ஒன்றாக எழுந்து பேசினால் ஒன்றும் செய்ய முடியாது. நான் சொல்வது, (குறுக்கீடுகள்) நான் சொல்வது, இந்தத் தீர்ப்பு வந்தது 2006 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம். (குறுக்கீடுகள்) ஆனால், உச்ச நீதிமன்றம் தீர்ப்புக் (குறுக்கீடுகள்) கொடுத்ததற்குப் பிறகு, 15–3–2006 அன்று கேரள அரசு ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வந்தது. அப்போதும் அதி.மு.க.தான் ஆட்சியிலே இருந்தது. (குறுக்கீடுகள்) அதற்குப் பிறகு, 142 அடி நீரை நாம் எப்படியும் தேக்க வேண்டும் என்பதற்காக உச்ச நீதிமன்றத்தைத் தமிழக அரசு அணுகியபோது, இரண்டு மாநில முதலமைச்சர்களும் கலந்து பேசி, பிறகு அந்தப் பிரச்சினை தீரவில்லை என்றால், உச்ச நீதிமன்றத்தை அணுகலாம் என்று உச்ச நீதிமன்றம் சொன்னது.

அந்த அடிப்படையிலே கேரள முதலமைச்சரும், நம்முடைய முதலமைச்சரும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரும் நாங்கள் எல்லாம் சென்று அங்கே பேச்சுவார்த்தை நடத்தினோம். என்ன விவரங்கள் என்று பத்திரிகையிலே வந்திருக்கிறது. ஆனால், இரண்டு மாநிலங்களுக்கிடையிலே ஒரு சுமுகமான சூழ்நிலை உருவாக்கி, நமக்குத் தேவையான நீரைப் பெற வேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தினுடைய நோக்கமே தவிர, (குறுக்கீடுகள்) நீரைப் பெறுவதற்கு எந்தக் கட்சியும் இடையூறாக இருக்கக் கூடாது என்பது இந்த அரசாங்கத்தினுடைய வேண்டுகோள். நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, அங்கே மத்திய நீர் வளத் துறை அமைச்சர், முதலமைச்சர் பேசிய பேச்சையெல்லாம் கேட்டதற்குப் பிறகு, விவரமாக இரண்டு மாநில நீர் வளத் துறை அமைச்சர்கள், அதாவது பொதுப் பணித் துறை அமைச்சர்களை மறுபடியும் சந்தித்து, பொறியாளர்களை மறுபடியும்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2006 டிசம்பர் 5

அழைத்துப் பேசி, விவரமான விவாதம் நடத்தி, அதற்குப் பிறகு சம்பந்தப்பட்ட முதலமைச்சரிடத்திலே அவர்கள் அந்தக் கருத்துகளை எடுத்துச்சொல்லி, மீண்டும் முதலமைச்சர்களைக் கூட்டி ஒரு சுமுகமான முடிவை ஏற்படுத்தலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள். அப்படியும் ஒரு சுமுகமான தீர்வு ஏற்படவில்லை என்றால், உச்ச நீதிமன்றத்திற்குப் போவதற்கு இந்த அரசு எப்போதும் தயாராக இருக்கிறது. எனவே, எந்த அடிப்படையிலும் இந்தப் பிரச்சினையை தமிழ்நாடு அரசாங்கம் விட்டுக்கொடுப்பதாக இல்லை என்பதை அரசின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பதில் சொல்லியாகி விட்டது. (குறுக்கீடுகள்) சுதர்சனம் இன்னும் பேசி முடிக்கவில்லை. பன்னீர்செல்வம், சுதர்சனம் பேசி முடிக்கவில்லை. அவர் பேசிக் கொண்டிருக்கிறார். நீங்கள் உட்காருங்கள். அவர் கருத்தைச் சொல்லட்டும். அவர் கருத்தைச் சொல்லி முடிக்கட்டும். உட்காருங்கள். செங்கோட்டையன், அவர் கருத்தைச் சொல்லி முடிக்கட்டும். அவர் பேசியதற்குப் பிறகுதான் உங்களைப் பேச அழைக்கிறேன் என்று நான் சொன்னேன். உட்காருங்கள்.

முற்பகல் 10–45

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்களேன். உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** நம்முடைய மின் துறை அமைச்சர் அவர்கள் விவரமான விளக்கத்தை இங்கே அளித்திருக்கின்றார்கள். அதை ஏற்று தமிழக முதலமைச்சர்மீது நாம் அனைவரும் நம்பிக்கை வைத்து, தமிழக மக்களுக்கு முல்லை பெரியாறு அணை பிரச்சினையிலே எல்லா விதமான நன்மைகளும் கிடைக்க வேண்டும் என்று சொன்னால், ஓர் அரசின்மீது நம்பிக்கை வைக்க வேண்டும். சென்ற அரசும் இருந்தது. அந்த அரசின்மீதும் மக்கள் நம்பிக்கை வைத்திருந்தார்கள். அதனாலே உச்ச நீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால், தீர்ப்பு வந்த தேதி எல்லாம் இங்கே நம்முடைய மின் துறை அமைச்சர் அவர்கள் விவரமாக, விளக்கமாகச் சொல்லியிருக்கின்றார்கள். ஆனால், அன்றைக்கு நீங்கள் எதையும் செய்யாமல் இப்பொழுது (கூச்சல்–குழப்பம்) இந்த அரசின்மீது குறை சொல்வது எந்தவிதத்தில் நியாயம் என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். (கூச்சல்–குழப்பம்)



2006 டிசம்பர் 5]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** அதனாலே முதலமைச்சர் அவர்கள்மீது நம்பிக்கை வைத்து இந்தப் பிரச்சினையை இதோடு விட்டுவிட்டு, முதலமைச்சர் அவர்கள்மீது நம்பிக்கை வைத்து, அத்தனை உறுப்பினர்களும் அரசின்மீது நம்பிக்கை வைத்து, நம்முடைய மக்களுக்கு நியாயம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை காங்கிரஸ் கட்சி வைக்கிறது... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். மற்றவர்கள் உட்காருங்கள். உங்கள் இரண்டு பேரில் யார் பேசுகிறீர்கள்? (குறுக்கீடு) ஆம். right, சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. மணி சொல்லுங்கள். (குறுக்கீடு) கொஞ்சம் பொறுங்கள். பன்னீர்செல்வம் (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் பன்னீர்செல்வம். அவர் சொல்லட்டும். அவர் சொல்லட்டுமே. சரி சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சுற்று பேசிவிட்டார்கள். இரண்டாவது சுற்று அவர்களுக்குக் கொடுங்கள், நான் சொன்னதற்குப் பிறகு, (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, முதல் சுற்றில் அ.தி.மு.க. பேசிவிட்டார்கள். (குறுக்கீடுகள்) நான் பேசிய பிறகு இரண்டாவது சுற்றில் அவர்களுக்கு வாய்ப்புக் கொடுங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லை பெரியாறு பிரச்சினை தமிழ்நாட்டு மக்களின் உயிர்நாடிப் பிரச்சினை. (குறுக்கீடுகள்) மிக முக்கியமான பிரச்சினை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுவதற்கு அனுமதி தருகிறேன் என்று சொல்லியிருக்கிறேன். நீங்கள் ஏன் worry பண்ணுகிறீர்கள். உட்காருங்கள். திரு. மணி, பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லை பெரியாறு அணை பிரச்சினை என்பது... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சாமி, என்ன நிற்கிறீர்கள்?

**திரு. ஜி.கே. மணி:** தமிழ்நாட்டு மக்களின் உயிர்நாடிப் பிரச்சினை. உயிர்நாடிப் பிரச்சினை என்பது மட்டுமல்ல, தமிழ்நாட்டு மக்களுடைய உரிமைப் பிரச்சினை. இந்த உரிமையைப் பெறுகின்ற பிரச்சினையில் நாம் ஒற்றுமையாக இருக்கவேண்டும். ஆனால், நம்முடைய உரிமையை நிலைநாட்ட வேண்டிய சூழ்நிலை; உச்ச நீதிமன்றம் நமக்குச் சாதகமான தீர்ப்பளித்திருக்கிறது; நமக்கு ஆதரவாக மத்திய அரசு இருக்கிறது.

ஆனால், இந்தச் சூழ்நிலையில் அடம் பிடிக்கக்கூடியவர்கள், நம்முடைய உரிமையை மறுப்பவர்கள் கேரள அரசு. ஆகவே, இந்தச் சூழ்நிலையில் நாம் ஒற்றுமையாக இருந்து உரிமையைப் பெற வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னென்ன முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமோ அந்த முயற்சிகளை உரியவாறு மேற்கொண்டு வருகிறார்கள். உதாரணத்திற்கு இங்கே சட்டமன்றத்திலே பேசுகின்ற நேரத்திலே, கடந்த காலத்திலும் சரி, இப்பொழுதும் மத்திய அரசோடு முறையாகத் தொடர்புகொண்டு பிரதமரிடத்திலே பேசிக்கொண்டிருக்கிறார்கள்; கேரள அரசோடும் தொடர்புகொண்டு பேசிக்கொண்டிருக்கிறார்கள். முள்மேலே போட்ட சேலை, முள்ளால்தான் எடுக்க வேண்டுமா, எப்படி எடுக்க வேண்டுமென்று பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. இதை ஆழ்ந்து சிந்தித்து அண்டை மாநிலத்தின் நட்புறவு கெட்டுவிடக் கூடாது; இந்திய நாட்டினுடைய ஒற்றுமை சீர்குலைந்துவிடக் கூடாது என்ற உயர்ந்த நோக்கத்தின் அடிப்படையிலும் முதலமைச்சர் அவர்கள் முறையாக அணுகிக் கொண்டிருக்கிறார்கள்.

நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்வதெல்லாம், கேரள அரசு அந்தச் சட்டமன்றத்திலே ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். அங்கே இருக்கிற அணையை இடித்துத்தள்ள வேண்டும்; புது அணை கட்ட வேண்டும் என்ற ஒரு நாடகத்திற்காக நம்முடைய உரிமையைப் பறிப்பதற்குத் திட்டமிட்டு, அணையை இடிப்பதற்கு ஏகமனதாக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். உரிமையை மறுப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால், இப்படிப்பட்ட சூழ்நிலையில் முதலமைச்சர் என்ன முடிவு எடுத்தாலும் சட்டமன்றத்திலே இருக்கக்கூடிய எல்லா அரசியல் கட்சிகளும் ஒத்துழைப்போம் என்ற நிலையை எடுப்பதை விட்டுவிட்டு, இதிலே அரசியல் செய்வதற்கு முன்வரக்கூடாது. இதிலே அரசியல் நடத்துவதற்கு முன்வருவார்களேயானால் தமிழ்நாட்டு உரிமை சீர்குலைந்துவிடும். ஆகவே, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்வது, உங்கள் தலைமையிலே தமிழ்நாட்டில் இருக்கிற எல்லா அரசியல் கட்சிகளும் அணிவகுத்து நிற்கிறோம். வேறுபாடு இல்லாமல் இருக்கிறோம். நீங்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நல்ல வழியை, நல்ல தீர்வினை உருவாக்க வேண்டும் என்ற வேண்டுகோளை இந்த மாமன்றத்தின் வாயிலாக நான் முன்வைக்கிறேன். நான் அ.தி.மு.க்.வினரையும் கேட்டுக்கொள்கிறேன். உங்களைக்கூட நான் குறை சொல்லவில்லை. ஒருவரையொருவர், மாறி மாறி, அ.தி.மு.க. தி.மு.க.வையோ அல்லது அரசையோ குறை சொல்லாதீர்கள். இந்தப் பிரச்சினையில் ஒன்றுபட்டு நில்லுங்கள். நம்முடைய உரிமை நிலைநாட்டப்படவேண்டும். அதுதான் கோரிக்கை. தயவுசெய்து அரசியல்



ஆக்காதீர்கள். யார் என்று பார்க்காதீர்கள். முதலமைச்சர் எடுக்கிற நடவடிக்கைக்கு அ.தி.மு.க.வும் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒற்றுமையாக இருக்கிறோம் என்ற நிலைப்பாட்டை இந்த மாமன்றத்தில் எடுத்துச் சொல்லுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் என்னுடைய வேண்டுகோள். அவ்வாறு இல்லை என்று சொன்னால், தமிழ்நாட்டு மக்கள் யாரையும் மன்னிக்கமாட்டார்கள், என்னையும் உட்படுத்திச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) என்னையும் உட்படுத்திச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உங்களைச் சொல்லவில்லை. என்னையும் உட்படுத்திச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) ஏன் இதை அரசியலாக்குகிறீர்கள்? ஒற்றுமையாக இருங்கள். இது அரசியலே இல்லை. முதலமைச்சர்...

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கிருஷ்ணமூர்த்தி (குறுக்கீடு) அக்ரி கிருஷ்ணமூர்த்தி, நீங்கள் அடிக்கடி disturb செய்கிறீர்கள். இடையூறு பண்ணிக்கொண்டே இருக்கிறீர்கள். நான் serious–ஆக நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடு) முதலில் உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நான் அ.தி.மு.க.–வைச் சொல்லவில்லை. என்னையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். நான் உங்களுடைய நடவடிக்கைகளை பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன். நீங்கள் இடம் மாறியதிலிருந்து என்ன வேகத்தில் இருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும்.' (குறுக்கீடு) உட்காருங்கள், முதலில். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) என்ன அர்த்தத்தில் எழுந்து நின்று பேசுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) உட்காருங்கள், முதலில். இடம் மாறிவிட்டது என்பதால் உங்களுக்குக் கோபம் அதிகமாக வருகிறதோ? (குறுக்கீடுகள்) திரு. கோவிந்தசாமி, அவர் பேசி முடிக்கட்டும், உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அ.தி.மு.க.–வைக் குறைச் சொல்லவில்லை. என்னையும் சேர்த்துச் சொல்கிறேன் என்று சொல்லித்தான் சொல்கிறேன். (குறுக்கீடு) யார் செய்தாலும்—எந்த அரசியல் கட்சியும் இதனை அரசியல் ஆக்க நினைக்கக் கூடாது—யார் நினைத்தாலும் மன்னிக்க மாட்டார்கள் என்று சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நான் உங்களைச் சொல்லவில்லை. ஆகவே, மீண்டும், மீண்டும் சொல்கிறேன். எல்லோரும் ஒற்றுமையாக இருங்கள். முதலமைச்சர் தலைமையில் ஒன்றுபட்டுச் உரிமையை நிலைநாட்டுவோம்.

செயல்படுவோம் என்ற உறுதிக்கு வாருங்கள் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே அனைவருக்கும் வேண்டுகோள் விடுக்கிறேன். நன்றி. (குறுக்கீடுகள்)

(திரு. ஓ. பன்னீர்செல்வம் மற்றும் திரு. டி. ஜெயக்குமார் இருக்கையில் எழுந்து நின்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுகிறீர்களா? அவர் பேசுகிறாரா? (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுகிறீர்களா? அவர் பேசுகிறாரா? இப்போது யார் பேசுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) அவர் பேசுகிறாரா, நீங்கள் பேசுகிறீர்களா? ஒரு கட்டுப்பாடு இல்லாமல் வைத்திருக்கிறீர்கள், உறுப்பினர்களிடம் சொல்லி வைத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசலாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள், பேசுங்கள். நீங்கள் பேசுகிறீர்களா, மற்றவர்கள் யாரேனும் பேசுகிறார்களா என்பதுதான் என்னுடைய கேள்வி.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லை பெரியாறு அணைப் பிரச்சினை பற்றி சபையை ஒத்தி வைத்து, அனைத்துக் கட்சியினரும், அவர்களுடைய கருத்துகளைச் சொல்ல வேண்டுமென்றுதான் நான் இங்கு சொன்னேன். அதற்குப் பின்னால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசினுடைய பதில் என்ன என்பதைச் சொல்ல வேண்டும் என்றும் நான் இங்கு கேட்டுக் கொண்டேன். ஆனால், இங்கே பேசிய நம்முடைய மற்றக் கட்சிகளினுடைய தலைவர்கள் 'இதை அரசியல் ஆக்காதீர்கள்; அரசியல் செய்வதற்கு வேறு இடம் இருக்கிறது' என்ற தொனியில் பேசுகின்றார்கள் என்பதை எண்ணிப் பார்க்கின்றபொழுது உள்ளபடியே மிகவும் வருத்தமாகத்தான் இருக்கின்றது. உரிமையைப் பெறுவதற்காக அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட்டு இருக்க வேண்டும் என்பதில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் சளைத்தது அல்ல என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த காலத்தில் முல்லை பெரியாறு அணைப் பிரச்சினை மாண்புமிகு அம்மா அவர்களால் உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, 136 அடியிலிருந்து 142 அடிக்குத் தண்ணீரைத் தேக்கிக்கொள்வதற்கு தமிழக அரசுக்கு உரிமை உள்ளது;





தேக்கிக்கொள்ளலாம்; பேபி அணையை மீண்டும் வலுப்படுத்துகின்ற பணி முடிந்தவுடன், தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆய்வு செய்து, மத்திய நீர்வளக் குழுமமும் பார்வையிட்டு, 152 அடி வரை தேக்கிக் கொள்ளலாம்; அதற்கு கேரள அரசு இடையூறாக இருக்கக்கூடாது என்ற ஒரு நல்ல தீர்ப்பினை மாண்புமிகு அம்மா அவர்கள் பெற்றுத் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய அருமை அண்ணன் சுதர்சனம் அவர்களும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் பேசுகின்றபோது, பிப்ரவரி மாதம் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வந்ததே, மே மாதம் வரைக்கும் நீங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்காமல், சும்மா இருந்துவிட்டீர்களே என்று இங்கு ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அதற்குத்தான் நான் பதில் அளிக்க எழுந்தேன். அதற்குப் பின்னால் சில சம்பவங்கள் நடந்துவிட்டன. 27–2–2006 உச்ச நீதிமன்றம், அந்த நல்ல தீர்ப்பினை வழங்கியது. அந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டதற்குப் பின்னால், 15–3–2006 கேரள சட்டமன்றத்தில் கேரள பாசனம் மற்றும் நீர் பாதுகாப்புச் சட்டம், 2003–க்கு அவர்கள் ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வந்தார்கள். முல்லை பெரியாறு அணையினுடைய நீர் மட்டத்தின் அளவு 136 அடியாகவே இருக்கவேண்டும் என்ற ஒரு சட்டத்தினை, சட்டத் திருத்தத்தின்மூலம் கொண்டு வந்தார்கள். அது 15–3–2006–ல் அங்கு சட்டமாக இயற்றப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்கள் 27–3–2006—அவர்கள் சட்டம் கொண்டு வந்தது 18–3–2006 —மாண்புமிகு அம்மா அவர்கள் 27–3–2006 அன்றே உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று ஒரு சிவில் வழக்கைத் தொடர்ந்தார்கள். உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிற்கு முரணாக கேரள அரசு அவர்களுடைய சட்டமன்றத்தில், கேரள பாசனம் மற்றும் நீர் பாதுகாப்புச் சட்டம், 2003–க்கு சட்டத் திருத்தம் கொண்டுவந்தது. 136 அடியிலேயே முல்லை பெரியாறு அணையினுடைய நீர்மட்டம் இருக்க வேண்டும் என்ற சட்டத் திருத்தம் கொண்டுவந்தது இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது, விரோதமானது; அந்தச் சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் உச்ச நீதிமன்றம் சென்றார்கள் என்பதனை நான் இங்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மே மாதம் வரை யாரும் சும்மா உட்கார்ந்துகொண்டு நாங்கள் ஆட்சி செய்யவில்லை. எந்த நடவடிக்கையை, கால நேரத்தில் எப்போது எடுக்க வேண்டுமோ அப்போது எடுத்து மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழக மக்களுடைய உரிமையை நிலைநாட்டி இருக்கின்றார்கள் என்பதனை நான் இங்கு சுட்டிக்காட்டுகின்றேன்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2006 டிசம்பர் 5

*முற்பகல் 10–55*

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று, நீங்கள் இன்றைக்கு ஆளுகின்ற பொறுப்பில் இருக்கின்றீர்கள். ஜனநாயக ரீதியில் கேட்கின்ற எதிர்க்கட்சி என்ற வகையில் நாங்கள் இருக்கிறோம். மக்களிடையே இன்றைக்கு ஒரு கொந்தளிப்பான சூழ்நிலை இருக்கின்றது. ஐந்து மாவட்ட மக்களின் விவசாயம் வருங்காலக் கேள்விக்குறியாக இருக்கிறது. கிட்டத்தட்ட ஒன்பது மாவட்ட மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினை; தண்ணீர் நிறுத்தப்பட்டால் அந்த ஐந்து மாவட்ட மக்களின் விவசாயப் பிரச்சினை; ஒன்பது மாவட்ட மக்களின் குடிநீர்ப் பிரச்சினை என்னவாகும் என்கின்ற ஒரு பதற்றமான சூழ்நிலைதான் தென் மாவட்டங்களில் நிலவிக்கொண்டிருக்கிறது. இன்றைக்கு நீங்கள் ஆளும் கட்சியாக இங்கு மாநிலத்திலும் இருக்கின்றீர்கள்; மத்திய அரசிலும் நீங்கள் ஆளும் கட்சியாக இருக்கின்றீர்கள். நீங்கள் நினைத்தால் செய்ய முடியும் என்று மக்கள் உங்களை நம்புகின்றார்கள். ஆனால், நீங்கள் அதைச் செய்யத் தவறி விட்டிருக்கின்றீர்கள். செய்யத் தவறிய உங்களை இன்றைக்கு மக்கள் கண்டித்துக் கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உரிமையைப் பெறுவதற்கு, தமிழக அரசு கடமை தவறிவிட்டது என்பதனை மக்கள் உணர்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டு, எல்லையில்—நேற்றுக்கூட நெடுமாறன்அவர்கள் அங்கே சாலையை மறித்து உட்கார்ந்துகொண்டிருக்கின்றார்.—தினந்தோறும் அங்கே போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது. எங்கள் பகுதியில் ஒரு பதற்றமான சூழ்நிலை இருக்கிறது. இதற்காகத்தான், டெல்லி சென்று என்ன சொன்னீர்கள், என்ன பேசினீர்கள்; கேரள முதலமைச்சர் என்ன சொன்னார்; பாரதப் பிரதமர் என்ன சொன்னார்; மத்திய நீர்வளத் துறை அமைச்சர் என்ன சொன்னார்; அரசு என்ன நினைக்கிறது என்பதைத்தான் நாங்கள் கேட்கின்றோம். அதற்குப் பதில் சொல்வதற்கு ஏன் இந்த அரசு தயக்கம் காட்டுகிறது, மறுக்கிறது என்பதனை இன்றைக்கு-

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தயங்கவில்லை, தயங்கவில்லை.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்குச் சொன்னார்கள். அனைவரும் ஒத்துழைப்போடு, தேசியப் பார்வையோடு இதை அணுக வேண்டும் என்று. இன்றைக்கு நம்முடைய மற்ற கட்சித் தலைவர்கள் எல்லாம் சொன்னார்கள். நாங்கள் அதில் சளைத்தவர்கள் அல்ல. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சர்வ



2006 டிசம்பர் 5] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கட்சிக் கூட்டத்தினைக் கூட்டினார்கள். மூன்று கேள்விகளை அவர்கள் கேட்டார்கள். நாம் நேரடியாக கேரள மாநில முதலமைச்சரோடு பேசலாமா அல்லது உச்ச நீதிமன்றம் ஒரு யோசனை சொல்லியிருக்கிறதே, மத்திய அரசு முன்னிலையில் கேரள அரசும், தமிழ்நாடு அரசும் பேசலாமா அல்லது நேரடியாக நாம் உச்ச நீதிமன்றத்திற்குச் செல்லலாமா என்ற மூன்று கேள்விகளை அந்த சர்வ கட்சிக் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டார்கள். நாங்கள் நல்லெண்ணத்தில், நல்ல சமிக்ஞையின் காரணமாக, இரு சகோதர மாநிலங்களுக்கும் இடையில் எந்தப் பிரச்சினையும் வந்துவிடக் கூடாது என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான், நாங்கள் அன்றைக்குச் சொன்னோம். கேரள அரசு மிகவும் பிடிவாதமாக இருக்கிறது; 142 அடி தேக்கக் கூடாது என்பதில் பிடிவாதமாக இருக்கிறது. ஆகவே, மீண்டும் நாம் கேரள மாநில முதலமைச்சரோடு பேசுவது பயனளிக்காது. ஆகவே, உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியதற்குப் பின்பு, உச்ச நீதிமன்றம் ஒரு யோசனையைச் சொல்லியிருப்பதன் அடிப்படையில், மத்திய அரசு முன்னிலையில் தமிழக அரசினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், கேரள அரசினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கலந்து பேசலாம் என்ற கருத்தின் அடிப்படையில் அன்றைக்குத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அன்றைக்கு அந்தக் கருத்தை நாங்களும் ஏற்றுக்கொண்டோம். ஏனென்று சொன்னால், மத்திய அரசுக்கு இந்தப் பிரச்சினை, அடிப்படையிலிருந்து அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

(முற்பகல் 11–00)

1979–லேயிருந்து, மத்திய நீர்வளக் குழுமம் அமைத்து, அணையைப் பலப்படுத்துவதற்கு அவர்கள் உத்தரவு வழங்கியது; அணையைப் பலப்படுத்துவதற்கு அவர்கள் உத்தரவு வழங்குவதற்கு முன்னால் கேரள அரசும் அதற்கு ஒத்துக்கொண்டது, அணை தமிழக அரசின் மூலமாகப் பலப்படுத்தப்பட்டது, மீண்டும் தொழில்நுட்பக் குழு அமைக்கப்பட்டது, தொழில்நுட்பக் குழுவும் அங்கே சென்று அணையைத் தீவிரமாக ஆய்வு செய்தது, ஒரு நில நடுக்கம், பூகம்பம், அந்த அணை அழிவதற்குத் தகுந்த பூகம்பம் ஏற்பட்டால் அணையைத் தாங்குகின்ற சக்தி இருக்கிறதா என்கின்ற அளவிற்கு தொழில்நுட்ப வல்லுநர்கள் அங்கே அணையினுடைய கட்டடப் பணிகளின் உள் பகுதிகளில் அந்த radiation–ஐ உள்ளே செலுத்தி, பூகம்பத்தைத் தாங்குகின்ற சக்தி அதற்கு இருக்கின்றதா என்ற அளவில்கூட அவர்களின் தொழில்நுட்ப வல்லுநர்கள் அதை ஆய்வு செய்து, ஒரு நல்ல அறிக்கையை மத்திய அரசு மூலமாக, Supreme Court–க்கு அளித்து, அன்றைக்கு அந்தத் தீர்ப்பை

வழங்கியிருக்கிறார்கள். ஆகவே, மத்திய அரசு இதனுடைய பின்னணியை, அடிப்படையிலே தெரிந்த காரணத்தினால், மீண்டும் மத்திய அரசு முன்னிலையில் நாம் பேசி, அன்று எடுக்கின்ற முடிவினை, உச்ச நீதிமன்றத்திற்குச் சொன்னால் நம்முடைய நிலை வலுவானதாக இருக்கும் என்கின்ற கருத்தினை நாங்கள் அன்றைக்கு சர்வ கட்சிக் கூட்டத்திலே சொன்னோம். அதை அனைவரும் ஏற்றுக்கொண்டுதான் நாம் தீர்மானம் இயற்றினோம். ஆனால், அந்தக் கூட்டத்தில் பேசியதை பத்திரிகைகளின் வாயிலாக நாங்கள் படிக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு இருக்கின்றது. அங்கே என்ன சொன்னார் கேரள முதலமைச்சர்? "பிடிவாதமாக இருக்கின்றார்; 142 அடிக்கு நீரைத் தேக்க முடியாது" என்று அவர்கள் அறிவித்ததற்குப் பின்பும் பேச்சுவார்த்தை தேவைதானா என்பதுதான் இன்றைக்குக் கேள்விக்குறி? உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதற்கு உண்டான சாத்தியக்கூறுகள் என்ன என்பதனைத்தான் மத்திய, மாநில அரசுகள் (மேசையைத் தட்டும் ஒலி) உச்ச நீதிமன்றத்தில் மீண்டும் வலியுறுத்தவேண்டுமேயொழிய, பேச்சுவார்த்தை மீண்டும் பலன் அளிக்குமா என்பதைத்தான் இன்றைக்கு நாட்டுமக்கள் அனைவரும் கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள்; இதற்கு அரசின் உரிய பதில் என்ன என்பதுதான் நாங்கள் கேட்கின்ற கேள்வி? (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி.

***திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தமிழ்நாட்டின் ஒரு முக்கியமான பிரச்சினை என்ற முறையில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்தை இந்த அவையில் பதிவு செய்ய வேண்டிய அவசியத்தின் காரணமாக சில கருத்துகளை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

முல்லை பெரியாறு அணையின் நீர்மட்டம் உயர்த்துவது சம்பந்தமாக உச்ச நீதிமன்றம் வழங்கியிருக்கக்கூடிய தீர்ப்பை அமல்படுத்தவேண்டும் என்பதுதான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலக் குழுவின் நிலை என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். அதையொட்டி அந்த உரிமையைப் பெறுவதற்காக தமிழக அரசும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மேற்கொண்டு இருக்கக்கூடிய, சுமுகமாகப் பேசித் தீர்க்கவேண்டும் என்கிற அந்த நல்ல முயற்சி மிகச் சரியானது; ஆகவே, அது தொடரவேண்டும் என்றும், அனைவரும் அரசியலுக்கு அப்பாற்பட்டு ஒத்துழைக்கவேண்டும் என்பதையும் நான் இந்த நேரத்திலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.





அதேநேரத்தில், மற்றொரு கருத்தையும் நான் இங்கே சொல்ல விரும்புவது, இன்றைக்கு முல்லை பெரியாறு அணையிலிருந்து கிடைக்கின்ற நீரை கேரள அரசாங்கம் தடுத்துவிட்டதைப்போல ஒரு பிரச்சாரம் பரவலாக செய்யப்பட்டு வருகிறது. கேரள அரசால் ஏற்கெனவே முல்லை பெரியாறு அணையில் தேக்கப்பட்டுள்ள 136 அடி நீரில் ஒரு சொட்டுத் தண்ணீரைக்கூட கேரளம் பயன்படுத்தவில்லை. அவர்கள் கோரிக்கை அந்த ஐந்து மாவட்ட மக்களின் பாதுகாப்புதான் முன்னிலைப்படுத்தப்படுகிறது, கூடுதல் நீர் வேண்டுமென்பதல்ல. ஆகவே, அந்த நிலையில் அதை சுமுகமாகப் பேசி தீர்வு காண்பதற்குப் பொருத்தமான முடிவை இரண்டு மாநில அரசுகளும், மத்திய அரசின் உதவியோடு மேற்கொள்ள வேண்டும். ஆகவே, இந்தக் குறிப்பிட்ட பிரச்சினையை மையப்படுத்தி, தமிழ்நாட்டு மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு, இந்தப் பிரச்சினையில் சுமுகமாகத் தீர்வு காண்பதற்கு, எந்தவகையிலும் குந்தகம் ஏற்படுத்துகிறவகையில் காரியங்கள் நிகழக்கூடாது என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இங்கே குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

அதேநேரத்தில், கடந்த 1979 ஆம் ஆண்டு, அன்றைக்கு முதலமைச்சராக இருந்த மாண்புமிகு எம்.ஜி.ஆர் அவர்கள் ஆட்சிக் காலத்தில், அன்றைய தமிழக நீர்ப்பாசனத் துறை அமைச்சராக இருந்த திரு. ராஜா முகமது அவர்களும், அன்றைய நீர்ப்பாசனத் துறை அதிகாரியாக இருந்த திரு. விஜயராகவன் அவர்களும், மத்திய அரசினுடைய நீர் வளத் துறை அதிகாரியாக இருந்த திரு. தாமஸ் அவர்களும், அதேபோல கேரள அரசின் சார்பிலே நீர்ப்பாசனத் துறை அமைச்சரும், அதிகாரிகளும் கலந்துகொண்டு, இரண்டு மாநில அரசுகளும் சேர்ந்து ஓர் ஒப்பந்தம் உருவாக்கப்பட்டு இருக்கிறது. அதிலே, அன்றைக்குத் தமிழகத்தின் சார்பிலே கலந்துகொண்ட நீர்ப்பாசனத் துறை அதிகாரி, திரு. விஜயராகவன் அவர்களும் கையொப்பம் இட்டிருப்பதாக அறிகின்றோம். ஆனால், அந்த ஒப்பந்த அறிக்கை அன்றைக்கு இந்த அவையிலோ அல்லது தமிழ்நாட்டு மக்களுக்கு முன்னாலோ இன்று வரையில் வெளியிடப்படவில்லை, தெரிவிக்கப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அன்றைக்கு ஏற்றுக்கொண்டிருக்கிற மூன்று விஷயங்கள், மூன்று வகையாக அந்த அணையைப் பாதுகாப்பது, பலப்படுத்துவது. உடனடியாக மேற்கொள்ளவேண்டிய பணி; அதனுடைய அடுத்த கட்டமாக மேற்கொள்ளவேண்டிய பணி; நீண்டகாலப் பார்வையோடு மேற்கொள்ளப்பட வேண்டிய பணி என்று மூன்று முடிவுகளை வரையறுத்திருப்பதாகத் தெரிகிறது. ஆனால், அன்றைகு, அதன்பிறகு, அந்த அரசு அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலே அந்தப்

பணிகளை 10 வருடங்கள் தொடரவில்லை. அ.தி.மு.க. நண்பர்களும் கவனத்தில் கொள்ளவேண்டும்; நான் குற்றச்சாட்டுக்காகச் சொல்லவில்லை. ஆகவே, (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள்; நீங்கள் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்தோம் அல்லவா? ஆகவே, அன்றைக்கு அந்த ஒப்பந்தத்திலே அன்றைய நீர்வளத் துறை அதிகாரி கையொப்பமிட்ட அந்த நிகழ்ச்சி, இன்றுவரையில் ஏன் வெளியிடப்படவில்லை?

அதன்பிறகு, 1989 ஆம் ஆண்டு, நம்முடைய இன்றைய முதல்வர் கலைஞர் அவர்கள் மீண்டும் அரசில் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான், அந்த அணையைப் பாதுகாக்கிற, அந்த ஒப்பந்தப்படியான முதல்கட்ட அணை மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன என்பதையும் நான் இங்கே கவனப்படுத்த விரும்புகிறேன்.

*முற்பகல் 11–05*

நம்முடைய பெருமரியாதைக்குரிய உறுப்பினர் திரு. விஜயகாந்த் அவர்கள் வரவில்லை இன்றைக்கு அவரோடு மிக நெருக்கமாக இருக்கிற அன்றைய அமைச்சராக இருந்த திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களுக்கு இது முழுமையாகத் தெரியும். ஆனால், இந்த விவரங்களையெல்லாம் அறியாமல், அங்கே தேசியக் கட்சிகளுக்குத் தமிழ்நாட்டு மக்கள் வாக்களிக்கக்கூடாது என்று சொல்கிறார்கள் ஏதோ நாளைக்குத் தேர்தல் வருவதைப்போல. ஆகவே, வாக்களிக்கக்கூடாது என்று இன்றைக்கு இதை அரசியலாக்கக்கூடிய நிலையில் திரு. விஜயகாந்த் போன்றவர்கள் பேசுவது உண்மையிலேயே வருத்தம் அளிக்கக்கூடிய செய்தி என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

கேரளத்திலே தேசியக் கட்சிகள் ஆண்ட காலத்திலேதான், தமிழகத்திற்கு பரம்பிக்குளம்–ஆழியாறு நீர்; பாசனத்திற்காகத் தந்ததும், கோவை மாவட்டத்திற்கான குடிநீர் வழங்குகிற திட்டமாக இருந்தாலும் இதே முல்லை பெரியாறு பிரச்சினையாக இருந்தாலும், தேசியக் கட்சிகள் ஆண்ட காலத்திலேதான், அது தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டது என்பதையும் நான் இந்த நேரத்திலே நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அங்கேயுள்ள சிக்கலான பிரச்சினை என்ன என்பதை இரு மாநில அரசுகளும் ஆய்வு செய்து, தீர்வு காணவேண்டும்: அதற்காக இப்போது கேரள அரசு சொல்கிற எல்லா வாதுங்களையும் சரியென்று தமிழ்நாட்டு மார்க்சிஸ்ட் கட்சி ஏற்கவில்லை. ஆகவே, இந்த யதார்த்தமான உண்மைகளையும் மனதில் வைத்துக்கொண்டு. இந்தப் பிரச்சினையை அணுக வேண்டுமேயொழிய.



முல்லை பெரியாறு அணைத் தண்ணீர் முழுவதையும் கேரளா நிறுத்திவிட்டதைப்போல, அதற்கு எதிராக ஒரு போராட்டம் என்ற வடிவத்திலே இந்தப் பிரச்சினையை எடுத்துச் செல்வது, தமிழ்நாட்டிற்கும், அண்டை மாநிலமான கேரள மாநிலத்திற்கும், இரண்டு மாநிலங்களுக்கும் இடையிலே இருக்கிற உறவு பாதிக்கக்கூடிய ஆபத்து உருவாகும்; அது இந்தப் பேச்சுவார்த்தைக்கும் தடையாக இருக்கும்.

அந்தவகையிலே, நம்முடைய உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பின்படி, 142 அடியாக அணையின் நீர்மட்டத்தை உயர்த்த வேண்டும் என்கிற அந்த நிலையை மார்க்சிஸ்ட் கட்சி ஆதரிக்கிறது: அதை அமலாக்குவதற்குத் தமிழக முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டிருக்கக்கூடிய அந்த முடிவுகள் அனைத்திற்கும் பக்கபலமாக, துணையாக நிற்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டு அமர்கின்றேன். (மேஜையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லை பெரியாறு பிரச்சினை குறித்து இங்கே பல்வேறு கருத்துகள் பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக, நதிநீர்ப் பிரச்சினை என்று சொல்கிறபோது, அதைப்பற்றி நமது அவையிலே விவாதிக்கிறபோது, மிக எச்சரிக்கையோடும், நிதானத்தோடும், பொறுமையோடும் பல்வேறு நடைமுறை உத்திகளைக் கையாளவேண்டிய அவசியம் இருக்கிறது என்பது அடிக்கடி இந்த அவையிலே நமது மாண்புமிகு முதல்வர் அவர்களால் சொல்லப்பட்டது; மாண்புமிகு நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் அடிக்கடி நினைவு கூர்வார்கள். இது காவிரி நீர்ப் பிரச்சினையின்போதும், இந்த அவையிலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

குறிப்பாக, இப்போது 142 அடி உயரம் உயர்த்திக் கொள்வதற்கு உச்ச நீதிமன்றம் அனுமதி அளித்திருக்கிறது. இதை நிறைவேற்றுவதற்குக் கேரள அரசு ஒப்புக்கொள்ள மறுக்கிறது. இதன்மீது உரிய முறையிலே வழிகாண்பதற்கான முயற்சியாக பேச்சுவார்த்தைக்கு நமது மாநில அரசு நல்ல முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. அதற்கு மத்திய அரசு தலைமை தாங்கியிருக்கிறது. இதிலே குறிப்பிட்டுச் சொல்வது, ஒன்று, 'இப்படித்தான் காவிரி நீர்ப் பிரச்சினையைப் பற்றிப் பேசுகிறபோது, பேச்சுவார்த்தை, பேச்சுவார்த்தை என்று நூற்றுக்கணக்கான முறை பேசப்பட்டுவிட்டது; அதனாலே பலன் ஏற்படாது. ஆகவே, நீதிமன்றத்தை

அணுக வேண்டும்' என்ற கருத்துகள் இந்த அவையிலே பேசப்பட்டன. அப்போது பேசியபோதுகூட, எங்களைப் போன்றவர்களும் அந்தக் கருத்தினை வலியுறுத்தினோம். நீதிமன்றம் அதற்கான இடைக்கால உத்தரவை வழங்கியது. அந்த இடைக்கால உத்தரவை நிறைவேற்றுவதற்குக் கர்நாடக அரசு மறுக்கிறது. திரும்ப உத்தரவைப் பெற்று பல ஆண்டுகள் கழிந்ததற்குப் பின்னாலும், கர்நாடகத்திலிருந்து காவிரி நீரை நம்மால் பெற முடியவில்லை. ஆகவே, திரும்பவும் பேச்சுவார்த்தை என்ற ஒரு நிலைக்குப் போகவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆகவே, இப்போது பேச்சுவார்த்தையா அல்லது நீதிமன்றமா என்ற விவாதத்தை நமது மன்றத்தில் நடத்துவது என்பது, நம்முடைய மாநிலத்தினுடைய நலனைப் பாதிப்பதாக அமையக்கூடிய ஒன்றாக நாங்கள் கருதுகிறோம். ஆகவே, இதிலேயிருக்கிற நிலைமைகளுக்கேற்ப, பேச்சுவார்த்தை அவசியப்படுகிறது என்ற சூழ்நிலையில் இந்தக் கருத்து வருகிறபோது, நம்முடைய மாநில அரசு, நம்முடைய மாநில முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களும் விரைவான முயற்சி எடுக்கிறபோது, இந்த முயற்சிக்குப் பக்கபலமாக நமது தமிழகம் இருக்கவேண்டிய கட்டாயம் இருப்பதாக நான் உணர்கிறேன்.

*முற்பகல் 11–10*

குறிப்பாக, காவிரி நீர்ப் பிரச்சினை என்று வருகிறபோது கர்நாடக மாநிலத்தில் இருக்கிற கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்கள் உட்பட, தமிழகத்திற்கு தண்ணீர் கொடுக்கக் கூடாது என்று அங்கே சொல்கிறார்கள். இங்கேயிருக்கிற நாங்கள் பேசுகிறபோது, எங்களுடைய உரிமையை நிலைநாட்டி இங்கே தண்ணீர் பெற வேண்டும் என்று பேச வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். மாநிலத்தினுடைய நலனின்மீதுதான் தேசிய அரசியலே இருக்கிறது. ஆகவே, அதை உணர முடியாதவர்களாக நாங்கள் இல்லை. ஆகவே, அதைப்போலத்தான் இப்போது கேரள மாநிலத்திலேயும் இந்தப் பிரச்சினை உருவாகியிருக்கிறது. இதைக்கூட வேறுவிதமாகச் சொல்வதற்கு, அரசியலாக்குவதற்கான முயற்சிகளை எடுக்கிறார்கள். ஆகவே, தமிழகத்தினுடைய நலனைப் பாதிக்கிற எந்த விஷயத்திலும் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு உடன்பாடு இல்லை. ஆகவே, உச்ச நீதிமன்றம் சொன்ன தீர்ப்பை நிறைவேற்றுவதற்குரிய முயற்சியை எடுக்க கேரள அரசு உடன்பட்டு ஒத்துழைக்க வேண்டுமென்று இந்த அவையின்மூலமாக நாம் அவர்களுக்கு வேண்டுகோள் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.





இதிலே ஆத்திரப்படுத்துவதோ, அவசரப்படுத்துவதோ, வேறுவிதமான நிலைகளுக்குக் கொண்டு செல்வதோ நம்முடைய மாநிலத்தைப் பாதிக்கச் செய்கிறது. ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். நம்முடைய மாநிலம் பெறுகிற இடத்திலே இருக்கிறோம். அதுதான் நமக்கு இருக்கிற துரதிருஷ்டம். ஆகவே, கொடுக்கின்ற இடத்திலே இருக்கிறவர்கள் பல்வேறு கருத்துகளைக் கொட்டிவிடுகிறார்கள். அங்கே பல்வேறு கருத்துகள் வருகிறபோது, செய்திகள் வருகிறபோது நம்முடைய மனதைப் பாதிக்கக்கூடியதாக, வருத்தப்படக்கூடியதாக இருக்கின்றன. பொறுப்பானவர்கள் சொல்லுகிற வார்த்தைகள் நம்மைத் துன்புறுத்துவதாக இருக்கின்றன என்பதுதான் உண்மை. அவற்றின்மீது எழுகிற உணர்ச்சிகளுக்கு நாம் வேறுவிதமாக தீர்வு காண்பதற்கான முயற்சிகள் எடுப்பது என்பது இதற்கு நிரந்தரத் தீர்வாக ஆகாது என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

இந்த முல்லை பெரியாறு பிரச்சினையிலே குறிப்பாக கேரள மாநிலம் என்ன கருத்தைக் கொண்டிருக்கிறது; நம்முடைய தமிழகம் நம்முடைய உரிமையை நிலைநாட்டுவதற்கு, பிரச்சினைகளை எப்படிக் கையாளப்போகிறது என்பதைப் பற்றி நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்கள் தெளிவான கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இதைச் சொல்லுகிற காரணத்தினாலே, விரைவாக எடுக்கவில்லை என்கிற காரணத்தினாலே, நம்முடைய மாநில நலன் பாதிக்கப்பட்டுவிடும் என்று நாங்கள் கருதவில்லை என்பதையும் இந்த அவையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். நான் திரும்பவும் வலியுறுத்திச் சொல்வது, தமிழகத்திலே இந்தப் பிரச்சினை வருகிறபோதுமட்டும்தான், அநேகமாக எனக்குத் தெரிந்தவரையிலும், இப்படி ஒரு தேசியப் பிரச்சினையாக நம்முடைய மாநில நலன் பிரச்சினை வருகிறபோது, இங்கே லாவணிக் கச்சேரியாக மாறிவிடுகிற முயற்சி எடுப்பது என்பதினாலேயே நாம் பாதிக்கப்படுகிறோம் என்பதைத் தயவுசெய்து நாம் உணர வேண்டும் என்று எதிர்க்கட்சியை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எல்லோரும் இணைந்து நம்முடைய உரிமையை நிலைநாட்டுவதற்கான முயற்சியை நாம் எடுக்க வேண்டும். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லை பெரியாறு பிரச்சினையில் நம்முடைய தமிழ்நாட்டு அரசியல்

கட்சிகள் எல்லாம் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே இருப்பதை உள்ளபடியே நாங்கள் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே மனதார வரவேற்கிறோம். ஆனாலும்கூட, நாம் ஒற்றுமையாக இருக்கிறோம், மத்திய அரசு நமக்கு ஆதரவாக இருக்கிறது, உச்ச நீதிமன்றம் நல்ல தீர்ப்பை வழங்கியிருக்கிறது என்பதை நான் முன்பேகூட சுட்டிக்காட்டினேன். இப்படி எல்லா நிலையிலும் நமக்குச் சாதகமான சூழ்நிலை, உரிமை, நியாயம், தீர்ப்பு என்று இருந்தாலும்கூட, பிடிவாதமாக கேரள அரசு மறுத்து வருகிறது.

இந்திய நாட்டிலே இருக்கிற ஒரு மாநிலம். குறிப்பாக, பிரதமர் நேரு அவர்கள் காலத்தில் அண்டை நாடுகளுக்கிடையே நதி நீர் ஒப்பந்தம் செய்யப்பட்டு இருக்கிறது. சீனா, பாகிஸ்தான்...(மணியடிக்கப்பெற்றது) பேரவைத் தலைவர் அவர்களே, சொல்லிவிடுகிறேன்; சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கிடையே இந்தியா செய்து கொண்ட ஒப்பந்தம் இன்றும் நிலுவையிலே இருந்து கொண்டிருக்கிறது. அந்த ஒப்பந்தப்படி நடந்து கொண்டிருக்கின்றோம். அண்டை நாடுகள் நமக்குத் தண்ணீரைக் கொடுக்க சம்மதித்து ஒப்பந்தத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. வங்காள தேசத்திற்கு, பிரதமர் தேவகவுடா அவர்கள் பிரதமராக இருந்த நேரத்திலே இந்தியா நீர் கொடுப்பதாக ஒப்பந்தம் செய்யப்பட்டு, அதுவும் நடைமுறையிலே இருந்து கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, சுருக்கமாகப் பேசி உரையை முடியுங்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது.

**திரு. ஜி.கே. மணி:** நான் சுருக்கமாகப் பேசி முடித்துவிடுகிறேன் தலைவரே. நம்முடைய உணர்வுகளை...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜி.கே. மணி.

*முற்பகல் 11–15*

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இது எல்லோருக்கும் தெரிந்த செய்தியாக இருந்தாலும்கூட நம்முடைய உணர்வுகளை மத்திய அரசுக்கும், கேரள அரசுக்கும் உணர்த்த வேண்டுமென்ற அந்த அடிப்படையிலே சொல்லுகிறேனே தவிர, நேரத்தை எடுத்துக்கொள்வதற்காக அல்ல. அண்டை மாநிலமாக இருக்கிற கேரள அரசு நம்முடைய உரிமையை மறுக்கிறது. அதுமட்டுமல்ல, நம்மைப் பொறுத்தவரையில் 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்துகிற நேரத்தில் நமக்குத் தேவையான தண்ணீரின் அளவு ஒரு டி.எம்.சி.தான்.



அதிகமாகப் போனால் 1.05 டி.எம்.சி. தான். ஆனால், கேரள அரசு சொல்வது; நாங்கள் தண்ணீரை அரபிக் கடலிலே வீணாகக் கலந்தாலும் கலப்போமே தவிர தமிழ்நாட்டுக்கு கொடுப்பதற்கு, அணையின் மட்டத்தை உயர்த்துவதற்கு அனுமதிக்க மாட்டோம்; இதுதான். இந்த நிலைமையில், இங்கே அவர்கள் மாதிரி நாம் பிடிவாதம் பிடிக்கவில்லை. தமிழ்நாடு, மின்சாரத்தை வழங்கிக் கொண்டிருக்கிறது. அரிசியை இங்கிருந்து அனுப்பிக் கொண்டிருக்கிறோம். காய்கறிகள், பழங்கள், கோழி, மாடு, முட்டை எல்லாவற்றையும் வழங்கிக்கொண்டிருக்கிறோம். ஆகவே, நம்முடைய உரிமையை மறுக்கின்ற நேரத்தில், தமிழ்நாட்டிலே வாழக்கூடிய நாம் அதைத் தரமாட்டோம் என்று சொல்வதற்கு எத்தனை நாளாகும்? நமக்கும் உணர்வு இருக்கிறதுதானே? நாமும் மனிதர்கள்தானே? ஆகவே, நம்முடைய உணர்வுகளை நாம் அடக்கிக் கொண்டிருக்கிறோம். மனித நேயத்தோடு, சகோதரப் பாசத்தோடு அடக்கிக் கொண்டிருக்கிறோம். அவர்கள் அடம் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த நிலைக்கு நாம் செல்வதற்குத் தயாராக இருந்தாலும்கூட, இறையாண்மை, ஒற்றுமை நம்மைக் கட்டுப்படுத்துகிறது. நாம் மதிக்கிறோம். ஆகவே, கேரள அரசு இந்த உண்மையை உடனடியாகப் புரிந்துகொள்ள வேண்டும். அப்படிப் புரியாதபட்சத்தில், இன்னும் காலந்தாழ்த்தாமல், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விரைவாக இந்தப் பிரச்சினையை முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே முன்வைக்கிறோம். ஆகவே, காலந்தாழ்த்தக்கூடாது; பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு காணவேண்டும்; விரைவில் நடவடிக்கை தேவை என்பதை வலியுறுத்துகிறேன்.

அதேநேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். "நாம் கடைக்கோடியிலே இருக்கிற மாநிலம், கேட்கின்ற இடத்திலே இருக்கிறோம், கொடுப்பவர்கள் மறுக்கிறார்கள்" என்று சொன்னார்கள். உள்ளபடியே சொல்கிறேன், இந்திய இறையாண்மையை மதிக்கின்றவிதத்தில், நாட்டு நதிகளையெல்லாம் தேசியமயமாக்க வேண்டும். அந்தப் பிரச்சினையை நாம் முன்வைப்பதற்கு இது ஒரு சந்தர்ப்பமாக இருக்கும். அதையும் முயற்சிக்கலாம் என்ற வேண்டுகோளை வைத்து, மீண்டும் மீண்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம், நாங்கள் ஒற்றுமையாக இருக்கிறோம். அ.தி.மு.க.–கூடச் சொன்னார்கள்; நாங்கள் எல்லாக் கட்சிகளும் உங்கள் பின்னாலே இருக்கிறோம். இந்தப் பிரச்சினையில் நம்முடைய உரிமையைப் பெறுவதற்கு விரைவான நடவடிக்கையை எடுங்கள், காலந்தாழ்த்தாதீர்கள் என்று பணிவோடு கேட்டு அமர்கிறேன்

[2006 டிசம்பர் 5

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன்.

***திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 142 அடி தண்ணீரைப் பெரியாறு அணையில் தேக்கிக்கொள்ளலாம் என்று உச்ச நீதிமன்றம் தெளிவாகத் தீர்ப்பு வழங்கிவிட்டது. கேரள அரசு சட்டசபையைக் கூட்டி, "கேரள நீர்ப்பாசனச் சட்டத்தில், அணையின் பாதுகாப்பு ஆணையத்திற்காக சில பிரத்யேக உரிமைகளைத் தந்தது. அணையை எப்பொழுதும் பார்வையிடலாம்; நீர் மட்டத்தைக் குறைக்கலாம்; அணை பலவீனமாக இருக்கிறதா என்பதை அறியலாம்; இயக்கம் சரியில்லையென்று சொன்னால், de-commissioning of the dam, அதை இடிக்கலாம்" என்ற வகையிலே, அந்தச் சட்டத்தை அங்கே நிறைவேற்றியது. இந்தச் சூழ்நிலையில், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், கடந்த 23 ஆம் தேதி, இங்கே சர்வகட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி, கருத்துகளைக் கேட்டார்கள். மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், கேரள அரசும், தமிழ்நாடு அரசும் இணக்கமாகவும், பரஸ்பர தோழமையோடு இருக்க வேண்டும் என்பது எங்களுடைய கருத்தாகும். கேரள சகோதரர்கள் தமிழ்நாட்டிலே அதிகமாக வாழ்கின்றார்கள், வசிக்கின்றார்கள், பயனடைகிறார்கள். அதைப்போல கேரளாவிலும், தேனியைச் சேர்ந்த பெரும்பான்மையான மக்கள் அங்கே விவசாயம் செய்து வருகின்றார்கள். இதுவரைக்கும் எந்தவொரு பிரச்சினையும் இல்லாமல், நல்லிணக்கத்தைக் கொண்டுவந்திருக்கின்றார்கள்.

இந்த நிலையில், அன்றைக்கு எடுத்த முடிவு, மத்திய அரசின் முன்னால் பேச்சுவார்த்தை சுமுகமாகத் தீர்வாகாவிட்டால், உச்ச நீதிமன்றத் தீர்ப்பை அமல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்போம் என்று தெளிவாகப் பேசப்பட்டது. அப்பொழுதுகூட பல தலைவர்கள் கேட்டார்கள். அப்பொழுது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். உச்ச நீதிமன்றத் தீர்ப்பை ஏன் இன்னும் அமல்படுத்தவில்லை என்று கேட்டபொழுது, ஒரு கருத்தைச் சொன்னார்கள், தெளிவான கருத்து. இதுவரைக்கும் 136 அடிக்குத் தண்ணீர் வரவேயில்லையே, தண்ணீர் வந்தால்தானே, அந்த அணையின் 13 போக்கிகளை, மூட முடியும்? ஆகவே, தண்ணீர் வரவில்லையென்று சொன்னார்கள். இப்பொழுது தண்ணீர் 136 அடிக்கு மல், அதிகமாக வந்துவிட்டது. அதிலே பேச்சுவார்த்தை என்கின்ற காரணத்தினால், அந்த நடவடிக்கையை எடுக்க இயலாத சூழ்நிலை இருக்கிறது. இருந்தாலும்கூட, இன்றைக்குக் கேரள அரசு, திரும்பத்





திரும்ப, அணை பலவீனமாகிவிட்டது என்ற அச்சத்தை, பீதியை அந்தப் பகுதி மக்களிடத்திலே ஏற்படுத்துகின்றது.

ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். 1979 ஆம் ஆண்டு தாமஸ் தலைமையிலே, அணை பலவீனமாகிவிட்டது, இதை வலுப்படுத்தியபிறகு, 142 அடி தண்ணீரைத் தேக்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டது. அதாவது, cable anchoring; கான்கிரீட் தொப்பி, கைப்பிடிச் சுவர் உயர்த்துதல்; மூன்று வெளிப்போக்கிகள் அதிகமாக அமைத்தல்; முட்டுச் சுவர் எழுப்புதல், மேல் தளம் கருவி அமைத்தல், பேபி டேம் கட்டுதல். இத்தனைப் பணிகளும் முடிந்த பின்பு அணையின் நீர் மட்டத்தை உயர்த்தலாம் என்று சொன்னது. இரு அரசுகளும் ஒத்துக்கொண்டன. 1979 ஆம் ஆண்டு அணை பலப்படுத்தும் பணி தொடங்கியது. கேரள அரசு பணி செய்ய விடாமல் தொடர்ந்து பல இன்னல்களைத் தந்தது. பலப்படுத்தும் பணி காலதாமதமாக 2000–ஆம் ஆண்டுதான் முடிவடைந்தது. அணை பலப்படுத்துவதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட ஆண்டுகள் 21. 1874–லிருந்து திரு. பென்னிகுக் அவர்கள் அணையைக் கட்டிக்கொண்டிருக்கும்போது 1888–ல் பெரும் வெள்ளத்தால் அணை உடைந்தது. அதன் பிறகு புது அணை ஏழு ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டது. அதாவது ஒரு புதிய அணையைக் கட்டி முடிப்பதற்கு ஏழு ஆண்டுகள்தான் ஆனது. ஆனால், கட்டி முடித்த அணையைப் பலப்படுத்துவதற்கு 21 ஆண்டுகள் ஆனது.

முற்பகல் 11–20

முட்டுக்கட்டை, முட்டுக்கட்டை. குவாரி கிடையாது; போக்குவரத்துக்கு அனுமதி கிடையாது. வன விலங்குகள் ஆபத்து என்று சொன்னார்கள். இன்னும்கூட சொல்லப்போனால், பொதுப் பணித் துறை அமைச்சருக்குத் தெரியும். பேபி அணை உடைந்தால்— அந்த அணை இன்னும் பலப்படுத்தவில்லை. மற்ற எல்லாப் பணிகளும் முடிந்துவிட்டன. பேபி அணை zero level–இல் இருக்கின்றது—உடைந்தால் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட பெரியாறு அணையில் நிற்காது. எல்லா தண்ணீரும் வெளியே சென்றுவிடும். இந்த நிலையில் அவர்களுடைய நோக்கம் என்னவென்று நமக்குத் தெளிவாகத் தெரிந்துவிட்டது. ஏனென்றால், அந்தப் பெரியாறு அணைத் தண்ணீரில் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட கேரள அரசு பாசனத்திற்குப் பயன்படுத்துவது கிடையாது; தொழிற்சாலைகளுக்குப் பயன்படுத்துவது கிடையாது; கால்நடைகளுக்குப் பயன்படுத்துவது கிடையாது; விவசாயத்திற்கும் பயன்படுத்துவது கிடையாது; குடிநீருக்கும் பயன்படுத்துவது கிடையாது. இந்த நிலையில் அவர்கள் நோக்கம், மின்சாரம் என்ற நோக்கத்தைப் பெறுவதற்காக

பக்கத்திலே 555 அடி உயரத்திலே கட்டப்பட்ட 38,000 ஏக்கர் நிலப்பரப்பிலே தண்ணீர் தேங்குகின்ற இடுக்கி அணைக்குத் தண்ணீர் போதவில்லை. 800 மெகாவாட் மின்சாரம் எடுப்பதற்குண்டான தண்ணீர் கிடைக்கவில்லை. ஆகவே, இப்போதுள்ள 136 அடிக்கு மேல் தண்ணீர் வந்தால், அத்தனை தண்ணீரும் நமக்குத் தேவை என்பதற்காக பிடிவாதமாக, இன்னும் சொல்லப்போனால், முரட்டுப் பிடிவாதமாக, அணை பலவீனமடைந்துவிட்டது என்று சொல்லுகின்றார்கள்.

அணை பலவீனம் அடையவில்லை. 4,000 ஆண்டுகளுக்கு முன்னாலே கட்டப்பட்ட அந்த எகிப்து பிரமிடு இருக்கிறதல்லவா? இதே Tchil முறைப்படி கட்டியதுதான். இஞ்சி, சுட்ட சுண்ணாம்பு, கடுக்காய், வேப்பம்பட்டை, கருப்பட்டி ஆகியவற்றினால் கட்டப்பட்டதுதான். சீனப் பெருஞ்சுவர்கூட இதே Tchil முறைப்படி கட்டப்பட்டதுதான். அதே அடிப்படையில்தான் இங்கே அணை கட்டப்பட்டுள்ளது. அணையைச் சுற்றி 22 டேம் கட்டியிருக்கிறார்கள். சபரி டேம், ஹெவி டேம், பிளிச்சிங் டேம், ஹட்கி டேம், பம்பா டேம், கல்லாறு டேம், இடுக்கி டேம், குலமாவு டேம், சிறுதோணி டேம், கல்லாறுப்பட்டி டேம், அடலாடி டேம், மூணாறு டேம், மாட்டுப்பட்டி டேம், பள்ளிவாசல் டேம், அணை இரங்கல் டேம், சித்ரானம் டேம், வண்ணையாறு டேம் போன்ற 22 அணைகளை அங்கே கட்டி, நமக்குத் தேவையான நீர் வரத்தை முழுமையாகத் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள்.

இந்தச் சூழ்நிலையில், அன்றைக்கு சர்வ கட்சிக் கூட்டத்திலே எடுத்த அந்த முடிவின் அடிப்படையிலே, தெளிவாகச் சொன்ன அந்த முடிவின் அடிப்படையிலே, இன்னும் பேச்சுவார்த்தை, பேச்சுவார்த்தை என்பது காலதாமதமாகக்கூடிய ஒன்று என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் கருதுவதனால், மத்திய அரசிலே இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கின்ற செல்வாக்கையும், தோழமையையும், நட்பையும் பயன்படுத்தி, மத்திய அரசின்மூலமாக நிர்ப்பந்தித்து அந்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பை அமல்படுத்த வேண்டுமென்ற அந்த ஒரே வழியைத்தான் செய்ய வேண்டுமென்று கேட்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றம் 136 அடியிலிருந்து 142 அடி வரை தண்ணீரைத் தேக்கிக்கொள்ளலாம் என்று ஆணை பிறப்பித்தும், கேரள அரசு



பிடிவாதமாக சட்டப் பேரவையிலே ஒரு தீர்மானத்தை இயற்றி இருக்கிறது. இன்றைக்குத் தலைவர்களுக்கெல்லாம் தலைவராக இருக்கின்ற நம்முடைய முத்தமிழ் அறிஞர் முதல்வர் அவர்கள் இந்தப் பிரச்சினையை அறிவுபூர்வமாக உணர்ந்து கையாளுகிறார்கள்.

நம்முடைய தமிழகத்திலுள்ள கட்சிகளுக்கு கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஒருவர் செய்யும் பணியை இன்னொருவர் குறை சொல்லலாம். ஆனால், முல்லை பெரியாறு விஷயத்தில், கேரள அரசில் எப்படி ஒற்றுமையாக அனைத்துக் கட்சிகளும் செயல்படுகின்றனவோ, அதேபோன்று தமிழகத்திலே இருக்கின்ற அனைத்துக் கட்சிகளும் தமிழக முதல்வர் எடுக்கின்ற முயற்சிக்கு ஆதரவு அளிக்கவேண்டும், ஒத்துழைக்கவேண்டும். எந்த ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தாலும் குறை சொல்லுகின்ற நம்முடைய எதிர்க்கட்சிகள், இந்தத் திட்டத்தில், இந்தப் பேச்சுவார்த்தையில் முழு ஒத்துழைப்பு அளித்தால்தான் எந்தவிதச் சேதாரமும் இல்லாமல் நாம் இதில் வெற்றியடைய முடியும். (குறுக்கீடுகள்) ஏற்கெனவே (குறுக்கீடுகள்) நீங்கள் பேசும்போது நாங்கள் அமைதியாக கேட்டுக்கொண்டு இருந்தோம். (குறுக்கீடுகள்) அதுதான். நாங்கள் பேசும்போது எதிர்ப்புத் தெரிவிப்பீர்களா? (குறுக்கீடுகள்) இதுதான் நாகரிகமா, இதுதான் அவை நாகரிகமா, பேசும்போது குறுக்கே குறுக்கே பேசுவது. (குறுக்கீடுகள்)

முற்பகல் 11–25

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** தலைவர் அவர்களே,...

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்தகால ஆட்சியாளர்கள், செய்யாததையெல்லாம் நம்முடைய முதல்வர் செய்து சாதனை புரிந்திருக்கிறார். (குறுக்கீடுகள்) அதேபோன்று, இந்தப் பிரச்சினையிலும், அவர் வெற்றிபெறுவார் என்ற நம்பிக்கை தமிழக மக்களுக்கு இருக்கிறது. இன்று குறுக்கிட்டுப் பேசுகிற நம்முடைய தோழர்கள் —ஏற்கெனவே பேசிய நம்முடைய முன்னாள் முதலமைச்சர், எதிர்க்கட்சியின் துணைத் தலைவர் பேசும்போது ஒரு வார்த்தையைச் சொன்னார். உண்மை என்று இருந்தாலும் வெளிப்படும். தமிழக முதல்வர் அவர்களே, தமிழக மக்கள் உங்களைத்தான் நம்பியிருக்கிறார்கள் என்று சொன்னார். அது அவைக்குறிப்பிலே இருக்கிறது. (குறுக்கீடுகள்) இதை எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால்,...

(அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் சொன்னதைச் சொல்கிறார். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

[2006 டிசம்பர் 5

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஓர் உறுப்பினர் பேசும்போது குறுக்கிடக்கூடாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள அரசு இப்படி முட்டுக்கட்டை போடுவதும், (குறுக்கீடுகள்) இந்தப் பிரச்சினையிலே கேரள அரசுக்கு அங்கு அனைத்துக் கட்சிகளும் முழு ஒத்துழைப்பு அளிப்பதுபோல, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர்களும் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். வண்ணத் தொலைக்காட்சி கொடுத்தால் குற்றம் கண்டுபிடிப்பவர்கள், இலவச காஸ் அடுப்பு கொடுத்தால், குற்றம் கண்டுபிடிப்பவர்கள் (குறுக்கீடுகள்) இலவச வீட்டுமனை கொடுத்தால் குற்றம் கண்டுபிடிப்பவர்கள், முல்லை பெரியாறு விஷயத்திலும் இப்படிப்பட்ட போக்கைக் கடைப்பிடிக்கக்கூடாது என்று விடுதலைச் சிறுத்தைகள் வலியுறுத்துகிறது. நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவருடைய கருத்தைச் சொல்கிறார், இதில் என்ன இருக்கிறது?

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்திலிருந்து கேரளாவிற்கு நாம் இங்கே விளைகின்ற விளைபொருட்களை அனுப்புகிறோம். இங்கே விளைகின்ற நம்முடைய விளைச்சலை எல்லாம் கேரளா அனுபவித்து வருகிறது. அந்த விளைபொருட்கள் எல்லாம், அரிசியாகவும், கோழியாகவும், ஆடாகவும் நாம் அனுப்பிக்கொண்டிருக்கிறோம். அந்தக் கோழிகளும், ஆடுகளும், நம்முடைய தமிழகத்தின் நீரைப் பருகித்தான் வளர்கின்றன.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** Point of order.

**திரு. கு. செல்வம்:** இங்கே விளைகின்ற அரிசியெல்லாம் நம்முடைய தமிழகத்தில் தண்ணீரில்தான் விளைகிறது. அவர்கள் 136 அடி, 142 அடி தண்ணீரைவிட நாம் கொடுக்கின்ற விளைபொருட்கள், அதிகமான பொருட்களைத்தான் நாம் அந்த மாநிலத்திற்கு வழங்கி வருகிறோம். இங்கே கூச்சலிட்ட அன்புத் தோழர்களுக்குச் சொல்லிக் கொள்வதெல்லாம், கடந்த 5 ஆண்டுகளில் நடைபெறாத பாப்பாபட்டி, கீரிப்பட்டி தேர்தலை எப்படி நம்முடைய முதலமைச்சர் நடத்திக்காட்டினாரோ, வெற்றிபெற்றாரோ (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, முல்லை பெரியாறு விஷயத்திலும், வெற்றிபெறுவார். ஆக, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் தமிழக அரசுக்கு



2006 டிசம்பர் 5] [திரு. கு. செல்வம்]

ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். நீர்ப்பாசனத் துறை அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தி வந்திருக்கிறார். இந்த வயதிலும், உடல்நிலை சரியில்லாதபோதிலும், இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டார். அவர் நினைத்திருந்தால் தன்னுடைய சகாக்களை அனுப்பியிருக்கலாம். தமிழகத்தின்மீது அக்கறையுள்ள முதலமைச்சர், இந்தியாவிற்கு வழிகாட்டியாக இருக்கின்ற முதலமைச்சர், முல்லை பெரியாறு விஷயத்திலும் வெற்றிபெறுவார். நாம் ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்டு, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பொறுமையாக இருங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. பன்னீர்செல்வம் அவர்கள், எதை விரும்பினாரோ, அது இன்றைக்கு நிறைவேறியிருக்கின்றது. முல்லை பெரியாறு பிரச்சினை நிறைவேறுகிறதோ, இல்லையோ அந்தப் பிரச்சினை குறித்து இன்றைக்கு விவாதித்தே தீர வேண்டுமென்று அவர் விரும்பியது, அவரை அறியாமல், நம்மை அறியாமல், பொதுவாக நிறைவேறிவிட்ட மகிழ்ச்சி எனக்கும் இருக்கிறது; மாமன்ற உறுப்பினர்களுக்கும் இருக்கிறது; ஏனென்றால், இந்தப் பிரச்சினையில் இன்றுள்ள தமிழக அரசு, இன்று நேற்றல்ல, கடந்த காலத்திலே, பல ஆண்டுகளுக்கு முன்பே, உரிய முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது என்பதும், கேரளத்தை ஆண்ட பல்வேறு முதலமைச்சர்களையெல்லாம் சந்தித்து, பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றது என்பதும் அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

முற்பகல் 11–30

முல்லை பெரியாறு பிரச்சினைக்காக மாத்திரம் அல்ல, நீராறு பிரச்சினை, பரம்பிக்குளம்–ஆழியாறு பிரச்சினை போன்ற பல்வேறு பிரச்சினைகளில் கேரளத்திற்கும், தமிழகத்திற்குமுள்ள பல தாவாக்களைப் பேசித் தீர்த்திருக்கிறோம்.

கோவை மாநகரத்திற்கு சிறுவாணி தண்ணீர் வேண்டுமென்ற கோரிக்கையை அன்றைய கேரளத்து முதலமைச்சர் அச்சுதமேனன் ஏற்று, அவரே கோவைக்கு வந்து சிறுவாணி தண்ணீர் தொடக்க விழாவினை நடத்தி வைத்தார் என்பதெல்லாம், கேரள மாநிலத்திற்கும் தமிழ் மாநிலத்திற்கும் உள்ள உறவுகளை, தொடர்புகளை எடுத்துச்

சொல்லுகின்ற சரித்திரக் குறிப்புகளாகும். இந்தச் சரித்திரக் குறிப்புகளைத்தான் அன்றுதொட்டு பழைய நாளிலேயிருந்து எந்த அளவிற்கு இரு மாநிலங்களும் பெற்றிருக்கின்றன என்பதை நான் டெல்லியில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது நினைவூட்டினேன். அப்படி நினைவூட்டியதன் காரணம், கேரள மாநில மக்களும், தமிழ் மாகாண மக்களும் சகோதரர்களாக வாழவேண்டும், ஒருமைப்பாடு போற்ற வேண்டும், ஒற்றுமை நிலவவேண்டும்; ஒருவருக்கொருவர் காழ்ப்புணர்ச்சியோ, கசப்புணர்ச்சியோ ஏற்பட்டுவிடக்கூடாது என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலேதான் நான் அத்தகைய கருத்துகளை அன்றையதினம் எடுத்து வைத்தேன். அப்படி நடைபெற்ற பேச்சுவார்த்தை, இங்கே வீற்றிருக்கின்ற உங்களுடைய அனுமதியின்பேரில்தான் நடைபெற்றது என்பதை நீங்களே நன்கு அறிவீர்கள்.

குறிப்பாகச் சொல்லவேண்டுமேயானால், தமிழ்நாட்டிலே உள்ள, இந்தச் சட்டமன்றத்திலே இடம் பெற்றிருக்கின்ற கட்சிகள், இடம்பெற வைத்த கட்சிகள், அந்தக் கட்சிகளுடைய தலைவர்களையெல்லாம் அழைத்துப் பேசி, அவர்களுடைய அன்பான அணுகுமுறை, அறிவுரை இவற்றை ஏற்றுக்கொண்டுதான், ஒரு தீர்மானத்தையும் 23–10–2006 அன்று தமிழக அரசின் சார்பாக அந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்திலே நிறைவேற்றினோம். அந்தத் தீர்மானத்தை இப்பொழுது நினைவுபடுத்திக் கொள்வது நல்லது என்று கருதுகின்றேன்.

## தீர்மானம்

"முல்லை பெரியாறு பிரச்சினை குறித்து தமிழக அரசின் சார்பாக எடுத்து வைத்த நியாயங்களை ஏற்றுக்கொண்டு உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பினை நிறைவேற்றுவதற்கு முன்வராத கேரள அரசின் போக்கைச் சுட்டிக்காட்டி, உச்ச நீதிமன்றம் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் நல்லெண்ண சமிக்ஞையாக, மத்திய அரசு முன்னிலையில் தமிழக அரசு, கேரள அரசோடு பேச்சுவார்த்தை நடத்த இக்கூட்டம் இணக்கம் தெரிவிக்கிறது; என்றாலும்கூட, அதிலும் உரிய பலன் கிடைக்காதபட்சத்தில், மீண்டும் உடனடியாக உச்ச நீதிமன்றத்தையே அணுகி, உச்ச நீதிமன்றம் 27–2–2006 அன்று பிறப்பித்த உத்தரவான அணையின் நீர்மட்டத்தை 136 அடியிலேயிருந்து 142 அடிக்கு உயர்த்திக்கொள்ளலாம் என்பதையும், அணையைப் பலப்படுத்தும் எஞ்சியுள்ள பணிகளை மேற்கொள்ளும்போது, கேரள அரசு முழு ஒத்துழைப்பை அளிப்பதோடு, தமிழக அரசுக்கு கேரள அரசு அதிகாரிகள் எந்தவித இடையூறையும் ஏற்படுத்தக் கூடாது என்பதையும்



நடைமுறைப்படுத்த வேண்டுமென்று உத்தரவு அளிக்குமாறு முறையீடு செய்துகொள்வதென்றும், அத்தகைய உச்ச நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்த மத்திய அரசு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்றும் அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய இந்தக் கூட்டம் கேட்டுக்கொள்கிறது".

என்றுதான் அன்றைக்குத் தீர்மானத்தை நிறைவேற்றினோம்.

இந்தத் தீர்மானத்தை மூன்று பகுதியாக பிரித்துப் பார்த்தால், பேச்சுவார்த்தை நடத்த உச்ச நீதிமன்றத்தின் கருத்துப்படி இணக்கம் தெரிவிப்பது ஒரு பகுதி; இன்னொரு பகுதி, அதிலே உரிய பலன் ஒருவேளை கிடைக்காவிட்டால், உடனடியாக உச்ச நீதிமன்றத்தையே அணுகி, அவர்கள் பிறப்பித்த உத்தரவான 142 அடிக்கு உயர்த்திக்கொள்ள உத்தரவைக் கேட்பது; உச்ச நீதிமன்றம் அத்தகைய உத்தரவை அளிக்கும்போது, அந்த உத்தரவை அமல்படுத்த மத்திய அரசு நமக்கு ஒத்துழைப்புத் தருவது; ஒரு பகுதி. இந்த மூன்று பகுதியாக இந்தத் தீர்மானத்தைப் பிரித்துப் பார்க்க வேண்டும். ஆனால், நாங்கள் அந்தப் பேச்சுவார்த்தையை முடித்துவிட்டு, சென்னைக்கு வருவதற்குள்ளாக, சென்னையிலே உள்ள பத்திரிகைகளில் சில கட்சித் தலைவர்கள் சொன்னதாக அல்லது பத்திரிகைகளுடைய கருத்தாக 'பேச்சுவார்த்தை தோல்வி' என்று செய்தி வெளியிடப்பட்டது. உள்ளபடியே அது தோல்வி அல்ல. மீண்டும் ஒருமுறை முதலமைச்சர்கள் அல்லாமல் மற்ற அமைச்சர்கள். அந்த மாநிலத்தினுடைய பாசன அமைச்சர், நம்முடைய மாநிலத்தினுடைய பொதுப் பணித் துறை அமைச்சர் இருவரும் கலந்து பேசி, பொறியாளர்களும் கலந்து பேசி, சில புள்ளிவிவரங்களை, சில தகவல்களை, சில விவரங்களை அவர்கள் தருவதன் அடிப்படையில், அந்தப் பேச்சுவார்த்தையை இரண்டாவது கட்டமாக நடத்துவது என்று முடிவு செய்ததற்குக் காரணம், முதல் பேச்சுவார்த்தை தோல்வி அடைந்துவிட்டது என்று பொருள் அல்ல; அப்படி யாரும் பொருள்கொள்ளக் கூடாது.

முதல் பேச்சுவார்த்தை, நாங்கள் நடத்திய பேச்சுவார்த்தை, நானும், திரு. அச்சுதானந்தன் அவர்களும் நடத்திய பேச்சுவார்த்தை, சில விவரங்களைச் சேகரிப்பதற்கு முன்னோடியாக, ஒரு தூண்டுதலாக அமைந்ததே அல்லாமல், வேறல்ல. அதுவே முற்றுப்பெற்ற பேச்சுவார்த்தை அல்ல. அது முற்றுப்பெற்ற பேச்சுவார்த்தை என்றால், அடுத்த கட்டம் உச்ச நீதிமன்றத்திற்குத்தான் நாம் சென்றிருக்க வேண்டும். உச்ச நீதிமன்றத்திற்குச் செல்வதற்கு முன்பு, நம்முடைய அரசின் பொதுப் பணித் துறை அமைச்சரையும் அதிகாரிகளையும், பொறியாளர்களையும்,

அதைப்போல கேரள அரசினுடைய பொதுப் பணித் துறை அமைச்சரையும், அதிகாரிகளையும், பொறியாளர்களையும் வைத்துக்கொண்டு பேச்சுவார்த்தை நடத்தி, என்னென்ன விவரங்கள், எவ்வளவு தண்ணீர் ஒவ்வோர் ஆண்டும் வருகிறது; எவ்வளவு தண்ணீர் இங்கே முல்லை பெரியாறிலே விடப்படுகிறது; அதைத் தமிழகம் எந்த அளவிற்கு பயன்படுத்திக்கொள்கிறது; எவ்வளவு நிலம், எவ்வளவு கழனி பயன்பெறுகிறது என்பதுபோன்ற புள்ளிவிவரங்கள் நம்முடைய பேச்சுவார்த்தைக்கு உதவுவதற்குப் பயன்பட வேண்டும் என்பதற்காகத்தான், அன்றையதினம் ஒத்திவைக்கப்பட்டு, இன்னொரு நாள் குறிப்பிடப்பட்டது. அந்தக் கருத்தையும், மத்திய நீர்வளத் துறை அமைச்சர்தான் வெளியிட்டு, அன்றைக்குப் பேச்சுவார்த்தையை ஒத்திவைத்தார். பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே, அது முடிந்துவிட்டது, முறிந்துவிட்டது, தோல்வி அடைந்துவிட்டது என்று சொன்னது தவறான வாதமாகும்.

முற்பகல் *11–35*

இப்போதும் நாங்கள் அந்தப் பேச்சுவார்த்தையைத் தொடர்வது என்றால், நானும், கேரளத்தினுடைய முதலமைச்சர் அச்சுதானந்தன் அவர்களும் மீண்டும் ஒருமுறை உட்கார்ந்து பேசுவது என்பதல்ல. நம்முடைய பொறியாளர்களும், பொதுப் பணித் துறை அமைச்சர்களும் கலந்து பேசி, அவர்கள் ஜாடை காட்டினால்தான், 'இப்போது நீங்கள் மீண்டும் பேசினால் வெற்றி அடையக்கூடும்' என்று அவர்கள் சொன்னால்தான், அடுத்தக்கட்ட பேச்சுவார்த்தை நடைபெறுமேயல்லாமல், இல்லாவிட்டால் அடுத்த பேச்சுவார்த்தைக்கு தமிழக அரசு தயாராக இருக்காது என்பதை இந்த மாமன்றத்திலே உங்களுக்கு நான் உறுதியளித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இருக்காது என்றால், என்ன செய்வீர்கள் என்று கேட்டால், நாம் நீதிமன்றத்தைத்தான் நாட வேண்டும். உச்ச நீதிமன்றம் நல்ல தீர்ப்பை ஏற்கெனவே அளித்து, அது நடுநிலையிலே சிந்திக்கிற மன்றம், தீர்ப்பளிக்கிற மன்றம் என்பதை நிலைநாட்டி இருக்கின்றது. எனவே, உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்புக்குத்தான் நாம் காத்திருக்கின்றோம். அதற்கு இடையிலே உச்ச நீதிமன்றத்தினுடைய கரத்தை வலுப்படுத்த--அவர்கள் என்ன சொல்கிறார்கள், 'இந்த அணை தாங்கும், பூகம்பமே வந்தாலும் தாங்கும்' என்று உச்ச நீதிமன்றம் சொல்கிறது. ஆனால், கேரள அரசு மறுக்கிறது, 'பூகம்பம் வந்தால் தாங்கும் என்பதெல்லாம் கேலிக் கூத்து' என்று கேரள அரசு சொல்கிறது.--உச்ச நீதிமன்றத்திற்கு மேலும் நம்முடைய ஆதாரங்களைத் தந்து, உச்ச நீதிமன்றத்தைப் பேச வைக்க நல்ல வலுவான ஆதாரங்களைத் தருவதற்காகத்தான் இந்த இரண்டாவது



கட்டப் பேச்சுவார்த்தையை நாம் இன்றைக்கு ஏற்றுக் கொண்டிருக்கின்றோம். அதை நம்முடைய கட்சிகளினுடைய தலைவர்கள் எல்லாம் 'வேண்டாம்' என்று சொல்லி, நாளைக்கே ஓர் அறிக்கையைக் கொடுப்பார்களேயானால், அதை ஏற்று நாளை மறுநாளே உச்ச நீதிமன்றத்திற்குச் செல்லத் தமிழக அரசு தயாராக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏனென்றால், உங்களிடம் பெற்ற அனுமதி, உங்களிடம் பெற்ற உத்தரவு, நீங்கள் தந்த கருத்து, அந்த அடிப்படையிலேதான் நாங்கள் டெல்லியிலே சென்று இந்தப் பேச்சுவார்த்தையை நடத்தியிருக்கின்றோம். உங்களை நம்பித்தான், நீங்கள் சொன்னதை ஏற்றுத்தான், நீங்கள் பக்கபலமாக என்றைக்கும் இந்த அரசுக்கு இருந்தால், தமிழ்நாட்டு மக்களுக்கு, தமிழ்நாட்டு மக்களுடைய எதிர்கால நன்மைக்கு, தமிழ்நாட்டு விவசாயிகளுடைய எதிர்கால துன்ப துயரங்களைப் பற்றி கவலைப்பட்டு, அதற்குப் பரிகாரம் தேடுவதற்கு நீங்கள் என்றைக்கும் உதவிகரமாக இருப்பீர்கள் என்ற நம்பிக்கையோடுதான் அதை ஏற்றுக்கொண்டு பணியாற்றினோம். அந்தப் பணியில் எந்தவிதமான தொய்வும் ஏற்படவில்லை, அந்தப் பணி முற்றுப்பெறாமல் இருக்கலாம், ஆனால், முறிந்துவிடவில்லை, முறியாமல் பார்த்துக்கொண்டோம். முறியாமல் பார்த்துக்கொண்டது மாத்திரமல்ல, அது முற்றுப்பெறும்போது, முழு வெற்றி பெற்றோம் என்றஒரு நிலையை உருவாக்க வேண்டுமென்பதற்காகவும் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

இது தமிழக அரசுக்கு, மத்திய அரசோடு இருக்கிற உறவு அடிப்படையிலே நடைபெறும் என்று யாராவது நம்புவீர்களேயானால் அது தவறு. இந்த நியாயத்திற்கு மத்திய அரசு தருகின்ற நியாயமான ஆதரவு என்று எடுத்துக்கொண்டால்தான்—நியாயங்கள் என்றைக்கும் தோற்பது இல்லை, தோற்குமேயானால், நாம் நம்மையே தியாகம் செய்து நியாயத்தை நிலை நாட்டுவோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாத்திரம் தெரிவித்து, மீண்டும் மீண்டும் இந்த மாமன்றத்தின் வாயிலாக நான் கேரள அரசைக் கேட்டுக்கொள்கின்றேன், கேரள முதலமைச்சரைக் கேட்டுக்கொள்கின்றேன், கேரள மாநிலத்திலே இருக்கின்ற மக்களைக் கேட்டுக்கொள்கின்றேன், நாங்கள் உங்களுக்கு பகைவர்கள் அல்ல, நீங்களும் எங்களுக்குப் பகைவர்கள் அல்ல.

"கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்..."

என்று மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை பாடிய பாட்டு நம்முடைய மனதிலே பொதிந்திருக்கிறது. அந்த உணர்வோடு இந்தப் பிரச்சினையை

கேரளத்துச் சகோதரர்களும், தமிழகத்துச் சகோதரர்களும் அணுகுவார்கள், அணுகவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–40

சில கட்சிகள், நாங்கள் இன்னும் வேகமாகச் செயல்படவில்லை என்று சொல்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். அப்படித்தான் சொல்லவேண்டும். ஏன் இவ்வளவு வேகமாகப் போகிறீர்கள் என்று சில பத்திரிகைகள் எழுதுவதைப்போல, நீங்களும் சொல்வீர்களேயானால் யாரும் எங்களை ஆதரிக்கத் தயாராக இல்லை என்று அர்த்தம். பன்னீர்செல்வம் ஆனாலும் அல்லது செங்கோட்டையன் ஆனாலும், அல்லது நம்முடைய சுதர்சனம் அவர்கள் ஆனாலும் அல்லது பீட்டர் அல்போன்ஸ் ஆனாலும், நம்முடைய மணி அவர்கள் ஆனாலும், இவர்களெல்லாம் நாங்கள் போகின்ற வேகம் சரியல்ல, இன்னும் வேகமாகப் போகவேண்டும், இன்னும் வேகமாகப் பணியாற்றவேண்டும், இன்னும் துணிச்சலாகப் பணியாற்றவேண்டும் என்று சொன்னால்தான் எங்களுக்கு ஊக்கம். ஏன் இவ்வளவு வேகமாகச் செல்கிறீர்கள் என்று நீங்கள் நியாயம் சொல்வீர்களானால், எங்களுக்கு கேரளத்திலே மதிப்பு இருக்காது. எனவே, அந்த மதிப்பை நீங்கள் எங்கள்மீது காட்டுகின்ற எதிர்ப்பின் மூலமாக நீங்கள் தருகிறீர்கள் என்று நான் அந்த எதிர்ப்பை வரவேற்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படித்தான் இருக்கவேண்டும். எதிர்க்கட்சிகள் என்றால் இன்னும் போ, இன்னும் போ, இன்னும் வேகமாகப் போ என்று எங்களை வேகப்படுத்த வேண்டும் என்று இந்த முன்வரிசையில் இருக்கின்ற எல்லாத் தலைவர்களையும், அந்தத் தலைவர்களின் பக்கத்திலே இருக்கின்ற கட்சி நண்பர்களையும் அத்தனை பேரையும், முன்னேயிருந்து இறுதி வரையிலும் உட்கார்ந்திருக்கின்ற அத்தனை பேரையும் கேட்டுக்கொண்டு, இன்று இந்தப் பொருள் பற்றி விவாதிக்கின்ற இந்த ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டதற்காக, சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்த நம்முடைய ஓ. பன்னீர்செல்வம் அவர்களுக்கு அவையின் சார்பாக நன்றியைத் தெரிவித்து, இந்த அளவில் அமர்கின்றேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.





***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (இ) இந்திய முத்திரை மற்றும் பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு இந்திய முத்திரை மற்றும் பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர். (குறுக்கீடு) அக்ரி கிருஷ்ணமூர்த்தி, என்ன, சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் சொல்ல வேண்டும் இல்லையா? சொல்லுங்கள்.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** நாங்கள் அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, நீங்கள் சொன்ன கருத்து பதிவு செய்யப்பட்டது. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு இந்திய முத்திரை மற்றும் பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டமுன்வடிவு, 2006 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

முற்பகல் 11–45

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஈ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சண்முகம், சொல்லுங்கள்.

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. அரசினர் தீர்மானம்

### பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதிகள் 30, 130, 132 ஆகியவற்றை தளர்த்தக் கோரும் அரசினர் தீர்மானம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2006), 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2006), 2006 ஆம் ஆண்டு இந்திய முத்திரை மற்றும் பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு



(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2006) மற்றும் 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2006) ஆகியவற்றை இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல். 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2006), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2006* ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் *34/2006*) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கொண்டு வந்திருக்கிற சம்பளங்கள் வழங்குவதற்கான சட்டமுன்வடிவை வரவேற்கிறோம். அதேநேரத்தில், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சில படிகளையெல்லாம் உயர்த்தியபொழுது முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றி நாங்கள் அப்போது அவையிலே எடுத்துவைத்த கருத்துகள் இப்பொழுது செயல்வடிவம் பெறவேண்டும் என்பதற்காக மீண்டும் அவற்றை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகின்றேன். இரண்டு நாளைக்கு முன்னால்கூட முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்து அவர்களுக்கு வழங்கப்படக்கூடிய pension-ஓய்வூதியம் மிகவும் குறைவாக இருக்கிற காரணத்தினாலே அதைக் குறைந்தபட்சம் ஒரு பத்தாயிரம் ரூபாயாகவாவது மாதத்திற்கு உயர்த்த வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் வைத்திருக்கிறார்கள். அதேபோல அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய medical allowance இப்பொழுது ரூபாய் *3,000* தான் வருகிறது. மாதத்திற்கு ஆயிரம் ரூபாய் என்று *12,000* ரூபாய் அவர்களுக்கு வழங்க வேண்டும். ஏனென்று சொன்னால், பல முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடிய நிலைமையையும் இன்று தமிழகம் பார்த்துக் கொண்டிருக்கிறது. நம்முடைய தமிழக முதல்வர் அவர்களை, பல ஏழை சட்டமன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு முதல்வருடைய கவனத்தை ஈர்க்கின்ற வகையிலே வந்து சந்தித்திருக்கின்றார்கள்.

முற்பகல் *11–50*

இப்போது பக்கத்திலே இருக்கக்கூடிய பாண்டிச்சேரியிலேகூட பார்த்தால் அங்கு இருக்கக்கூடிய முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியத்தை அளிப்பதோடு, cell phone வசதியைக்கூட அவர்களுக்கு அங்கு இருக்கக்கூடிய முதலமைச்சர் அவர்கள், அரசு கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள். ஆகவே இப்பொழுது டெல்லியிலே

@ *5–12–2006* ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.





இருக்கக்கூடிய தமிழ்நாடு இல்லம் போன்ற இல்லங்களில் தங்குகிறபோது முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சலுகை அடிப்படையிலே வழங்குவதில்லை. அதாவது, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குகின்றபோது *60* ரூபாய் அங்கே கட்டணம் வசூலிக்கிறார்கள். ஆனால், அதுவே முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டெல்லியிலே இருக்கக்கூடிய தமிழ்நாடு இல்லத்தில் போய்த் தங்குகின்றபோது அங்கே *600* ரூபாய், *1,400* ரூபாய் என்றெல்லாம் கட்டணங்கள் மிக அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் அங்கே போய்த் தங்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய Medical allowance, அதேபோல ஓய்வூதியம் போன்றவற்றையெல்லாம் உயர்த்தி, அவர்களுக்கு வாழ்வளித்து அவர்களுடைய வாழ்வில் ஒளியேற்ற வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே இப்போது முல்லை பெரியாறு பிரச்சினையிலே பேசுகிறபோதுகூட,

"கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாஉன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!"

என்ற மனோன்மணியம் சுந்தரனார் பாடலைச் சொன்னார்கள். கன்னடமும் களிதெலுங்கும் என்கிற ஆந்திர மாநிலத்திலேகூட அந்தக் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாதத்திற்கு *43* ஆயிரம் ரூபாய் சம்பளம் வழங்குகிறார்கள். அங்கே வாகனப் படியே *15* ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். ஆகவே, நாங்கள் எல்லாம் அதையே கேட்கவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அரசாங்கத்தினுடைய செலவிலேயே, அதாவது நீங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஒரு காரை வாங்கிக் கொடுத்துவிட்டு சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அந்தக் காரைக் கொடுத்துவிட்டு maintenance செலவை அவர்களே டீசல், டிரைவர் எல்லாம் பார்த்துக் கொண்டு, பதவி போன பிறகு அதை மீண்டும் கலெக்டரிடம் சரண்டர் செய்யக்கூடிய அளவிற்கு — இந்த வாகனம்தான் இன்றைக்கு நிறைய பெட்ரோல் விலை உயர்ந்து போய், டீசல் விலை உயர்ந்து போய், வாகனங்கள் இரண்டு வருடத்திலேயே டிங்கரிங் வந்து படாதபாடுபடுத்திக் கொண்டிருக்கிறது. ஆகவே, பக்கத்து மாநிலமாக இருக்கக்கூடிய ஆந்திராவிலே அதாவது *15* ஆயிரம் ரூபாய் வாகனப் படி

என்று கொடுக்கிறார்கள். ஆனால், மகாராஷ்டிராவிலே வாகனங்களையே அரசாங்கமே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வாங்கிக் கொடுத்துவிடுகிறது. அதாவது வி.ஐ.பி. வண்டி கொடுக்கிறமாதிரி கொடுக்கிறார்கள். பிறகு பதவி போகிறபோது அதைப் பெற்றுக்கொள்கிறார்கள். அந்த வகையில் பராமரிப்பு உட்பட டிரைவர் எல்லாவற்றையும் அரசாங்கமே கொடுப்பதைப்போல சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்குவதற்கான உத்தரவை வழங்க வேண்டும் என்று கேட்டு, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று அமைகிறேன். நன்றி. *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிற இந்தச் சட்டமுன்வடிவைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வரவேற்றுப் பேசுகிற வேளையில், அமைச்சர் பெருமக்களுக்கு, அரசு கொறடாவிற்கு, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, பயணப்படி மற்ற சலுகைகள் எல்லாம் நீங்கள் வழங்கி அறிவித்திருக்கிறீர்கள். இதற்கு முன்னால் சட்டமன்றத்திலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஊக்கத் தொகையாக பயணப்படி போன்றவை வழங்குகிறபட்சத்தில், உயர்த்துகின்ற ஒவ்வொரு கால கட்டத்திலேயும் முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கும் உயர்த்தி வழங்கிய நடைமுறை இருந்து வந்திருக்கிறது. ஆகவே, இப்பொழுது தமிழ்நாடு முழுவதும் இருந்து முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் இரண்டு நாட்களாக சென்னையிலே முகாமிட்டிருக்கிறார்கள். மாமன்றத்திலே வந்து அமர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்களையும் சந்தித்ததாகச் சொன்னார்கள். ஆகவே, இது உரிய நேரம். நீங்கள் எல்லாம் எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற வேண்டுகோளையும் எங்களிடத்திலே வைத்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர்கள் சார்பிலே நாங்கள் எல்லாம் இந்த நேரத்தில் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வது, தாங்கள் கருணை உள்ளத்தோடு அவர்களுக்கான அந்தத் தொகையை உயர்த்தித் தாருங்கள் என்ற வேண்டுகோளை இங்கே நான் முன்வைக்க விரும்புகிறேன்.

அதேவேளையில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் கடந்த நிதிநிலை அறிக்கை கூட்டத் தொடரிலேயே சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு அரசுத் தரப்பில் வாகனங்கள் வழங்கப்படும் என்ற ஒரு செய்தி வரவிருப்பதாக சட்டமன்ற





உறுப்பினர்கள் மிக மகிழ்ச்சியிலே இருந்தார்கள். அறிவிக்கப்படும் என்ற எதிர்பார்ப்போடும் இருந்தார்கள். ஆகவே, கடைசி நேரத்திலே அறிவிக்கவில்லையே எப்போது வரும், வரும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மீண்டும் இங்கே அனைத்துக் கட்சி உறுப்பினர்கள் சார்பிலே கேட்டுக்கொள்வதெல்லாம், அந்த வாகனங்கள் வழங்குவதை நீங்கள் விரைவாக வழங்குவதற்கு முன்வரவேண்டும் என்ற வேண்டுகோளையும் வைத்து இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று அமர்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன். *(குறுக்கீடுகள்)*

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எதிர்க்கிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

[பேரவைத் தலைவர்] [2006 டிசம்பர் 5

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2006) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஆ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2006), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2006 டிசம்பர் 5] [திரு. மு.க. ஸ்டாலின்]

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2006) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.பி. அன்பழகன்.

**திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவில் நோக்க-காரண விளக்கவுரையில் "திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள கூத்தப்பர் (Koothappar) பேரூராட்சியைப் பொறுத்த அளவில், வேட்பு மனு பெறுவதற்கான கடைசித் தேதி வரையிலும் வேட்பு மனுக்கள் எவையும் வரவில்லை என்பதும், அதற்குத் திட்டவட்டமான காரணங்கள் தெரியவில்லை என்பதும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றது." என்று குறிப்பிட்டிருப்பதை வருந்தத்தக்க ஒன்றாகக் கருதுகிறேன். மேலும், மதுரை மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் நான்கு ஊராட்சிகளிலே 1996 முதல் 2001 வரை யாரும் வேட்பு மனுக்களே அளிக்கவில்லை. 2001 முதல் 2006 வரை மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு அதன் பிறகு தேர்தல் நடத்தப்பட்டு, அதன் பிறகு, அந்தப் பகுதியில் ஊராட்சி மன்றத் தலைவர்கள் இராஜினாமா செய்திருக்கின்றார்கள். ஆகவே, மதுரை மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் நீண்ட நாட்களாக நடைபெறாமல் இருந்த ஊராட்சித் தேர்தல் பேச்சுவார்த்தைமூலமாக பேசித் தீர்த்து தேர்தல் நடத்தப்பட்டதுபோல, இந்தக் கூத்தப்பர் பேரூராட்சியிலும் தேர்தல் நடத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

சமீபத்தில்கூட ஆண்டிப்பட்டி மற்றும் நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியங்களில் ஒன்றியக் குழுத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தல் நடைபெறாமல் பலமுறை தள்ளி வைக்கப்பட்டது. நீதிமன்ற உத்தரவோடுதான் தேர்தல் நடத்தப்பட்ட பிறகு, வெற்றி வாய்ப்பு இல்லாதவர்களால் தள்ளி வைக்கப்பட்ட காரணம் முறியடிக்கப்பட்டு, வெற்றி பெற்றிருக்கின்றோம். அதேபோல, மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டால்தான் அவர்கள் வாயிலாக மக்கள் அடிப்படைத் தேவைகளை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள்மூலம் தெரிவித்து, நிவர்த்தி செய்துகொள்ள முடியும். தேர்தல் நடைபெறாமல் தனி அலுவலரை நியமிக்கும்போது, மக்கள் தேவைகளை நிறைவு செய்யும்

@ 5-12-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது

[திரு. கே.பி. அன்பழகன்] [2006 டிசம்பர் 5

பணி தாமதப்படுத்தப்படுகிறது. மேலும், தனி அலுவலரை நியமிக்கும்போது ஆளுங்கட்சியின் முழுக் கட்டுப்பாட்டில் கூத்தப்பர் பேரூராட்சியை வைத்துக்கொள்ளும் நிலை உருவாகும். ஆகவே, இந்தத் தனி அலுவலரை நியமிக்கும் சட்டத்தை நிறுத்தி வைத்து, உடனே தேர்தல் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, தேனி மாவட்டத்தில் மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் தேர்தலானது மூன்று முறை தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. அங்கே மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் தேர்தல் நடத்துவதற்குண்டான quorum இல்லாமல் தடை செய்யப்படுகிறது. அங்கே தேர்தல் நடத்தப்பட்டால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் மாவட்ட ஊராட்சித் தலைவர் தேர்தலில் வருவார்கள் என்ற நிலையிலே தள்ளி வைக்கப்படுகிறது. ஆகவே, இந்தக் கூத்தப்பர் பேரூராட்சியிலே 15 வார்டுகளிலும், யாருமே வேட்பு மனு தாக்கல் செய்யாத நிலை தொடர்ந்தால், அங்கே தேர்தல் நடத்தப்பெறாத ஒரு சூழ்நிலை உருவாகி, தனி அலுவலர் மூலமாகவே நடத்த வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்திக்கொள்ளலாம் என்ற நோக்கத்தோடு இருக்கின்ற காரணத்தினால், உடனடியாக தேர்தலை நடத்த வேண்டுமென்று கோரிக்கை வைக்கின்றோம்.

*நண்பகல் 12–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், கூத்தப்பர் பேரூராட்சியைப் பொறுத்தவரையிலே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கூத்தப்பர் பேரூராட்சியைப் பொறுத்தவரையில் கடந்த காலத்திலே, முறையாக ஒருமித்த கருத்தோடுதான் அங்கே தலைவரைத் தேர்ந்தெடுத்து, இதுவரை போட்டியில்லாமல் தேர்தல் நடைபெற்று முடிந்திருக்கிறது. ஆனால், இந்த முறை அந்த ஒருமித்த கருத்து ஏற்படுவதற்கான ஒரு சூழ்நிலை உருவாகின்ற நேரத்தில் காலதாமதமான காரணத்தினால்தான், அங்கே குறித்த காலத்திலே தேர்தல் நடைபெறவில்லை. எனவே, உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அந்த அடிப்படையிலே நிச்சயமாக இந்த அரசைப் பொறுத்தவரையில், குறித்த நேரத்திலே, உரிய முறையிலே இந்தத் தேர்தல் நடத்துவதற்கான சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



2006 டிசம்பர் 5] [திரு. மு.க. ஸ்டாலின்]

அதேபோல், ஆண்டிப்பட்டி, நல்லம்பள்ளி ஊராட்சிகளைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அங்கேயும் தேர்தலை நடத்தி முடித்து இருக்கிறோம். தேர்தலை நடத்தாமல் இல்லை. இன்னும்கூட ஒன்றை நான் வெளிப்படையாக இங்கே சொல்லவேண்டுமென்று சொன்னால், தேனி மாவட்ட ஊராட்சியைப் பொறுத்தவரையிலே தலைவர் பதவிக்கு ஒரு தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்தான் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்ற நிலையிலே, அங்கே இரண்டு முறை, மூன்று முறை தேர்தல் நடத்துவதற்கான சூழ்நிலை உருவாகி, அங்கே quorum இல்லாத காரணத்தால் அந்தத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த முறை நம்முடைய தமிழக முதல்வர் அவர்களே எங்களுக்கு ஓர் ஆணை பிறப்பித்து இருக்கிறார்கள்; எந்தக் காரணத்தைக் கொண்டும் அடுத்த முறை தேர்தல் தள்ளி வைக்கக்கூடாது என்று. எனவே, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களைப் பொறுத்தவரையிலே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே யாரும் இல்லையென்று சொன்னாலும், அது அ.தி.மு.க.–வைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், அந்தத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவரை தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற ஓர் உத்தரவை வழங்கி இருக்கிறார்கள். எனவே, அந்தச் சூழ்நிலையிலும் அங்கே முறையான முறையில் தேர்தல் நடைபெற இருக்கிறது என்பதையும் நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள கூத்தப்பர் பேரூராட்சிக்கு தனி அலுவலர் நியமனச் சட்டத்திற்கான சட்டமுன்வடிவில் பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக எங்களுடைய கருத்தைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் நீட்டிப்பு என்பது முதல் முறை. இதோடு அடுத்த தேர்தலை நிச்சயமாக நடத்தி அங்கும் ஒரு மக்கள் பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கும் இந்த அரசு என்ற நம்பிக்கையில், பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, கொட்டக்காய்ச்சியேந்தல் போன்ற பல ஆண்டுகாலமாக நடத்தப்பெறாமல் இருந்த அந்தத் தேர்தல்களையே நடத்தி, தமிழகத்திற்கு முன்னுதாரணமாக இருந்த அரசு, அங்கிருக்கின்ற அரசு அதிகாரிகளினுடைய சரியான– மற்ற சிற்றூராட்சிகளில் எடுத்துக்கொண்ட அந்த கவனத்தை இங்கு எடுத்துக்கொண்டு நடத்தியிருக்க வேண்டும். ஆனால் அது, ஏதோ ஒன்று கண் திருஷ்டிபோல் இன்று இருக்கிறது என்று நாங்கள் கருதுகிறோம்.

[திரு. தி. வேல்முருகன்] [2006 டிசம்பர் 5

குறிப்பாக, கடலூர் மாவட்டத்தில் என்னுடைய பண்ருட்டி தொகுதியில், மணப்பாக்கம் என்ற ஒரு பஞ்சாயத்தும், கீழக்குப்பம் என்ற ஒரு பஞ்சாயத்தும் இருக்கின்றது. இதேபோல் பக்கத்து தொகுதியில் இதே இரண்டு ஊரின் பெயர்களைக் கொண்டு பஞ்சாயத்துகள் வருகின்ற காரணத்தால் அது ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கப்பட்ட காரணத்தினால், இன்றைக்கு அங்கு தேர்தல் நடந்தும், அந்த வார்டின் உறுப்பினர்கள் செயல்படாமல், அரசு, அதிகாரிகளினுடைய பார்வையில் அது நடந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக, மணப்பாக்கம் என்பதில் ஒருவர்கூட ஆதிதிராவிடர் இல்லாத காரணத்தினால் அங்கு தேர்தல் நடத்தப்பெறாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஆக, அதிகாரிகள் ஏதோ ஒரு அறையிலே உட்கார்ந்துகொண்டு அவர்கள் தேர்வு செய்கின்றபோது சில குளறுபடிகள் ஏற்பட்டிருக்கின்றன. வருங்காலங்களில் அதையும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சரி செய்ய வேண்டுமென்று கேட்டு, இந்த நீட்டிப்பு என்பது தனி அலுவலர்களுக்கு முதல் முறை. அடுத்த முறை நிச்சயமாக அங்கு ஒரு நல்ல மக்கள் பிரதிநிதியைத் தேர்ந்தெடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்கிற நம்பிக்கையில் பாட்டாளி மக்கள் கட்சி தன்னுடைய கருத்தைப் பதிவு செய்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள கூத்தப்பர் பேரூராட்சியைப் பொறுத்தவரையில், வேட்பு மனு பெறுவதற்கான கடைசி தேதிவரையிலும், வேட்பு மனுக்கள் எவையும் வரவில்லை என்பதும், அதற்குத் திட்டவட்டமான காரணங்கள் தெரியவில்லை என்பதும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றது என்று, நோக்க-காரண விளக்க உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த இடம்தான் ஆய்வு செய்யப்படவேண்டிய இடம் என்று கருதுகிறேன். அதற்கான காரணங்கள் இதுவரையிலும் தெரியாமல் இருப்பது பொருத்தமானது அல்ல. பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தலில், ஒரு சவாலாக எடுத்துக்கொண்டு தேர்தல்களை நடத்தி முடித்து இருப்பதற்காக தமிழ்நாடு அரசுக்கும், அதற்கு முயற்சி எடுத்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் இந்த நேரத்தில் என்னுடைய வாழ்த்துகளைப் பேரவையின் சார்பில் தெரிவிக்கிறேன்.



2006 டிசம்பர் 5] [திரு. என். நன்மாறன்]

அதிலே முன் முயற்சி எடுத்ததைப்போல, இதிலும் அரசின் சார்பில் உரிய கவனம் எடுக்கப்படவேண்டும். தேர்தல் நடத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் நிலப்பிரபுத்துவம் கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக, சங்கரன்கோவில் பகுதியில் ஆதிதிராவிட பஞ்சாயத்துத் தலைவர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். அதன்மீதும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டு, இந்த கூத்தப்பரில் பொதிந்திருக்கக்கூடிய உண்மை நிலவரத்தைக் கண்டறிந்து மீண்டும் தேர்தல் விரைவில் நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். (குறுக்கீடு)

*பிற்பகல் 12–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமசாமி, சொல்லுங்கள்.

***திரு. தி. இராமசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், கூத்தப்பர் பேரூராட்சியில் தேர்தல் நடைபெறவில்லை. எனவே, தனி அதிகாரி நியமிக்கப்படுவதற்கான இந்தச் சட்டமுன்வடிவை நாங்கள் ஆதரிக்கிறோம். பெரும்பாலும் உள்ளாட்சித் தேர்தலில் புதிய சட்டம், புதிய தேர்தல் முறை, பல்வேறு கசப்பான அனுபவங்களை தமிழகத்தில் ஏற்படுத்தியிருக்கின்றன. எனவே, இன்றைக்குத் தமிழகத்தில் ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி என்று அனைத்து இடங்களிலும் தேர்தல்கள் நடைபெற்று முடிந்திருக்கின்றன. பல்லாண்டுகாலம் நடைபெறாத எங்கள் விருதுநகர் மாவட்டம் கொட்டக்காச்சியேந்தல், மதுரை மாவட்டம் பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் போன்ற இடங்களிலும் தேர்தல்கள் நடைபெற்று முடிந்திருக்கின்றன. ஆனால், ஒரு குடம் பாலில் ஒரு துளி விஷம் கலந்தது போன்று, ஒரு சில இடங்களில் நடைபெற்ற சம்பவங்கள் ஏற்கெனவே கொண்டுவரப்பட்ட அந்தச் சட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்கிற அந்த நிலையும் இன்றைக்குத் தமிழ்நாட்டு மக்களுடைய கருத்தாக இருந்து கொண்டிருக்கிறது. எனவே, இந்தத் தேர்தல்கள் நடத்தப்படுகின்ற நேரங்களில் உரிய முறையில் தேர்தல்கள் நடைபெறுவதற்கும், வேட்பு மனு தாக்கலுக்கோ அல்லது மற்ற நடவடிக்கைகளுக்கோ சில இடையூறுகள் இருந்தால் அவற்றைச் சரிசெய்ய காலத்தில் அதிகாரிகள் தலையிட்டு நடவடிக்கை எடுப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக எங்கள் கருத்துகளைப் பதிவு செய்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2006 டிசம்பர் 5

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டுமென்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2006) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.



2006 டிசம்பர் 5]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (இ) இந்திய முத்திரை மற்றும் பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு இந்திய முத்திரை மற்றும் பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2006), மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு இந்திய முத்திரை மற்றும் பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2006) ● ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Voting-க்கு விட்டு விடுவோம். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Voting -க்கு விட்டு விடுவோம். உட்காருங்கள். மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், என்ன, சொல்லுங்கள்.

---

● 5–12–2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

பிற்பகல் 12–10

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவில், market value-விற்கு பத்திரப் பதிவு செய்பவர்கள் இனிமேல் முத்திரைக் கட்டணம் செலுத்த வேண்டும் என்ற வகையில் இந்தச் சட்டத்தை இப்பொழுது கொண்டு வருகிறீர்கள்.

ஏற்கெனவே சில இடங்களிலே guideline value-ன்படி கொடுக்கக்கூடிய அந்தக் கட்டணத்தையே நம்முடைய சமுதாயத்தில் இருக்கக்கூடியவர்கள் கட்டமுடியாமல் அதைக் குறைத்து எப்படியாவது பதிவு செய்வதற்கு வழி இருக்கிறதா என்றெல்லாம் தேடி, அலைந்து, சில நேரங்களிலே அந்தப் பதிவே நடக்காமல், சிலபேர் இருந்துகொண்டிருக்கிறார்கள். இப்போது நீங்கள் அதிகமாக market value—அதுவும் இப்போதெல்லாம் computer அதிகமாக வந்து, இங்கே Economic Zone, அப்படியெல்லாம் வரக்கூடிய, சென்னை போன்ற பகுதிகளில் பார்த்தால் சில இடங்களில் ஏக்கர் 4 கோடி, 3 கோடி என்றெல்லாம் விற்கிறது. அங்கு மட்டும் வேண்டுமானால் விலை அதிகமாக இருக்கலாம். பக்கத்தில் இருக்கக்கூடிய நிலத்துக்காரனுக்கு இது உதை வாங்கும். ஆகவே, அவர்கள் அந்த நிலத்தைக் கொண்டுபோய் இவ்வளவு கோடிக்கு நிலத்தை விற்க முற்பட்டாலும்கூட வாங்குவதற்கு ஆளே இருக்க மாட்டார்கள். காரணம், அந்த அளவுக்குக் கட்டணம் அதிகமாக இருக்கும். ஏற்கெனவே முன்பெல்லாம் guideline value என்று ஒன்று இருக்கும்; பிறகு Market Value என்று ஒன்று இருக்கும். ஆனால், இப்போது நீங்கள் வைத்திருக்கக்கூடிய இந்த மதிப்பீட்டுக் குழு, Valuation Committee என்பது, அது நிர்ணயிக்கக்கூடிய ஒன்றே guideline value ஆகவும் மாறிவிடுகிறது; அதுவே market value என்றும் மாறிவிடுகிறது. அப்படி market value என்று வருகிறபோது, அந்த அளவுக்குக் கட்டணத்தை உயர்த்தி நீங்கள் இப்போது முத்திரைக் கட்டணத்தை வசூலிக்க ஆரம்பித்தால் தமிழ்நாட்டில் பதிவுகள் குறைந்துபோகும்.

பொதுவாக முன்பெல்லாம் பார்த்தோம் என்று சொன்னால் நிறையப் பதிவுகள் இருக்கும். இப்போது இந்த முத்திரைக் கட்டணத்தைக் கட்ட முடியாமல் சிலபேர் பதிவையே தள்ளித் தள்ளிப்போட்டுக் கொண்டிருக்கிற நிலை பல இடங்களிலே இருக்கின்றது. சென்னை, கோவை இதுபோன்ற சில இடங்களில் மட்டும்தான் அந்த உயர்வு அதிகமாக இருக்கிறதேயொழிய அல்லது நகரப் பகுதிகளில் தெரிகிறதேயொழிய, கிராமப் பகுதிகளிலே நம்முடைய சொத்துக்களை விற்க முயன்றாலும்கூட நம்மாலே விற்கமுடியாத நிலை வருகிறது. காரணம், கட்டணம் அவ்வளவு அதிகம். இதுவே பக்கத்தில்



இருக்கக்கூடிய கேரளா, ஆந்திரா போன்ற இடங்களுக்குப் போனால் முத்திரைக் கட்டணம் Registration fee குறைவு. Token amount–ஐக் கட்டிவிட்டாலே அவர்கள் பரிவர்த்தனை செய்துகொள்ளலாம் என்ற நிலையெல்லாம் இருந்துகொண்டிருக்கின்றது. ஆகவே, அப்படிப்பட்ட நிலையை நாம் இங்கே உருவாக்கினால்தான் பதிவுகள் அடிக்கடி, பொதுவாக நம்முடைய சொத்துப் பரிவர்த்தனை போன்றவை எல்லாம் நடக்கக்கூடும்.

அதுபோல, பாகப்பிரிவினை போன்றவற்றுக்கெல்லாம்கூட நாம் பொதுவாக இந்த market value என்று போட்டுவிட்டு, நீங்கள் அதற்குக் கட்டணத்தை கேட்பீர்கள் என்று சொன்னால், அதிலே சிலபேர் பரிசாக, சிலபேர் gift கொடுப்பார்கள், சிலபேர் தங்களுடைய குடும்பத்திற்குள்ளாகவே பாகப்பிரிவினை செய்துகொள்வார்கள், இப்படி செய்துகொள்ளக்கூடியவர்களுக்கு நாம் கட்டணத்தை எல்லாம் உயர்த்திவிட்டோம் என்று சொன்னால், அது மிக மிகத் தொல்லையாகப் போய்விடும் என்கிற காரணத்தினாலே இந்தச் சட்டத்தை நீங்கள் Select Committee-க்கு அனுப்பி, இதை ஆராய ஒரு குழுவைப் போட்டு முழுமையாகப் பரிசீலித்த பிறகு, இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவது சாலப் பொருத்தமான ஒன்றாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

இதிலே market value என்று போட்டு அதற்கான கட்டணத்தை அவர்கள் செலுத்தவில்லை என்று சொன்னால் Collector-க்கு appeal செய்கின்றபோது 25 சதவிகிதம் difference பணத்தைக் கட்டிவிட்டுத்தான் பிறகு அப்பீல் செய்யவேண்டும் என்றெல்லாம் இருக்கிறது. இப்பொழுது உயர் நீதிமன்றம் ஏற்கெனவே நீங்கள் pending registration வைத்திருக்கக்கூடிய சில document-களை உடனே release செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டதன் விளைவாக இப்போது நாம் இந்தச் சட்டத்தை மிக வேகமாக இப்போது pass செய்கிறோமோ என்ற ஒரு நிலை தெரிகின்றது. ஏற்கெனவே இருக்கக்கூடிய pending registration ஏன் வருகிறது என்று சொன்னால் கட்டணம் அதிகமாக இருக்கிறது, கட்டாததால்தான் pending registration-னே வருகிறது. அப்படி வருகிறபோது சிலபேர் Unapproved layout-லே கொண்டுபோய் பதிவு செய்துவிடுவார்கள்; அப்படிப் பதிவு செய்கிறபோது சிலபேர் documents–ஐ இன்னும் release செய்யாமல் இருக்கக்கூடிய ஒரு நிலை இருக்கும்; எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், pending documents நிறைய இருக்கிற காரணத்தாலே, இந்தச் சட்டம் வருகிறபோது அதற்கு நாம் என்ன தீர்வு காணப்போகிறோம் என்றெல்லாம் வரும். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தச் சட்டத்தை Select Committee-க்கு

அனுப்பி, மீண்டும் முழு ஆய்வினை நடத்தி, பிறகு இந்த உயர்வினை அறிவித்தால் அது ஓரளவுக்கு எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாக அமையும் என்று சொல்லி, இதை இப்போது இயற்ற வேண்டாம், pass செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய அரசாங்கம் கொண்டுவந்திருக்கிற இந்தப் பதிவுத் திருத்தச் சட்டமானது நிலப் பதிவிற்கு market-லே இருக்கின்ற மதிப்பை அதற்கான நெறிமுறைகளை கூட்டுகின்ற வகையிலே, இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே உங்களுக்குத் தெரியும், தமிழ்நாட்டில் ஏராளமான பத்திரங்கள், பொதுமக்கள் பதிவு செய்த பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளாமல் இன்னும் அவை பத்திரப் பதிவு அலுவலகங்களிலே கிடக்கின்றன. அந்த அளவிலே இன்றைக்கு நம்முடைய அரசாங்கம் சந்தை மதிப்பைக் கூட்டி, அதற்கான நெறிமுறைகளை மதிப்பீட்டுக் குழுவும், மதிப்பீட்டுக் துணைக் குழுக்களும் பரிசீலிக்க வேண்டும் என்ற கருத்தை வைத்திருக்கிறது. இது எதைக் குறிக்கிறது என்றால், வர்த்தக ரீதியாக இருப்பவர்களுக்கு வேண்டுமானால் இது பொருந்தும்; ஆனால், விவசாயிகள், அப்பாவி மக்கள், ஏழையெளிய மக்கள் ஒரு சென்ட், இரண்டு சென்ட் நிலம் வாங்குகிறபோது இது அவர்களுக்கு பாதிப்பாக இருக்குமோ என்ற ஐயம் ஏற்படுகிறது. எனவே, இப்போது எடுத்திருக்கிற இந்த முடிவை அரசு மீண்டும் மறுபரிசீலனை செய்து அதை ஆய்வுக்கு எடுத்து, பிறகு அதைத் தீர்மானமாக வைக்கலாம் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்தாகத் தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.



சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு இந்திய முத்திரை மற்றும் பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2006) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

*சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.*

## (ஈ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2006), மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2006)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."*

*எனக் கோருகிறேன். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? சரி. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மதிப்புக் கூட்டு வரியை இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலே அறிமுகம் செய்து, இந்தக் கூட்டத் தொடரிலேயே அது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்ற முயற்சி எடுத்திருக்கின்ற தமிழக அரசையும், அதற்குத் தலைமையேற்றிருக்கின்ற தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களையும், வணிக வரித் துறை அமைச்சர் அவர்களையும் நான் நெஞ்சார, மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், ஆங்கிலத்திலே அழகாகச் சொல்வார்கள்; "Everything grows, that changes and if it does not change, it dies". "வளர்ந்து வருகின்ற ஒவ்வொன்றும் மாற்றத்திற்கு உட்பட வேண்டும். மாற்றத்திற்கு உட்பட மறுக்கின்ற அவை மரித்துப் போகின்றன" என்று ஆங்கிலத்திலே சொல்வார்கள். பொருளாதாரம் வளருகின்றபோது, தொழில் வளருகின்றபோது, ஓர் அரசினுடைய திட்டங்கள் வளருகின்றபோது, அரசினுடைய நிதிநிலை அறிக்கையிலே

@ *5-12-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.*





ஒதுக்கப்படுகின்ற தொகைகள் அதிகமாகின்றபோது, வரி வசூலிப்பு முறைகளும் காலத்தின் தேவைகளுக்கேற்ப, சர்வதேசத்தின் சவால்களுக்கேற்ப, அண்டை மாநிலங்களில் இருக்கின்ற நடைமுறைகளுக்கேற்ப, அகில இந்திய அணுகுமுறைகளுக்கேற்ப மாற வேண்டுமென்பது, அடிப்படையான, நிர்வாகத்தைத் தெரிந்த ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

வரி வசூல் என்பது, ஒரு நாட்டிலேயுள்ள, ஓர் அரசினுடைய இன்றியமையாத நிர்வாகப் பணி. ஆங்கிலத்திலே அற்புதமாகச் சொல்வார்கள். "பூக்களில் தேனீ தேனை எடுப்பதுபோல, வரி விதிக்கப்பட வேண்டும்" என்று சொல்வார்கள். இன்னும் அழகாகச் சொல்வார்கள். "ஒரு தாய் தன் குழந்தையை முத்தமிடுவதைப்போல வரி விதிக்கப்பட வேண்டும். அது கொடுப்பவருக்கும் சந்தோஷமாக இருக்க வேண்டும், பெற்றுக்கொள்பவர்களுக்கும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்" என்று சொல்வார்கள். அந்த அடிப்படையிலே வரி விதிப்பு முறை என்பது, வரியை விதிக்கின்ற அரசாங்கத்திற்கு எப்படி வரிகளைப் பெற்றுத் தருகிறதோ, அதேபோல வரியைச் செலுத்துகின்ற குடிமகனும், அந்த வரியைச் செலுத்துகின்றபோது ஒரு மன நிறைவோடு வரி தர வேண்டும். இந்த வரியை நான் அரசாங்கத்திற்குச் செலுத்துகின்ற கடமை எனக்கு இருக்கிறது; இது அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய பணம்; இந்தப் பணத்தை நான் மகிழ்ச்சியாகக் கொடுக்கிறேன்; இந்தப் பணம் அரசாங்கத்தின் கஜானாவிற்குப் போய் பல நல்ல திட்டங்களாக வெளிவருகின்றன என்ற நம்பிக்கை என்று ஏற்படுகிறதோ, அன்றுதான் வரி விதிப்பவர்களுக்கும், வரி கட்டுகிறவர்களுக்கும் உள்ள அந்த உறவு, வெற்றிகரமான உறவாக அமைகிறது.

அந்த வகையிலே, இந்த அரசு எடுத்திருக்கிற முயற்சி, மிக அற்புதமான முயற்சி. இந்த முயற்சியை இவ்வளவு காலம்தாழ்த்தி எடுக்கப்பட்டதனுடைய விளைவின் காரணமாக, தமிழகத்திற்கு ஏற்பட்டிருக்கிற சில பெரிய பொருளாதாரச் சேதங்களையும், நஷ்டங்களையும் இந்த நேரத்திலே கவனத்திலேகொள்ள வேண்டும். ஏனென்று சொன்னால், இந்த Value Added Tax – இந்த மதிப்புக் கூட்டு வரி என்பது, ஏறக்குறைய ஒரு 3, 4 ஆண்டுகளுக்கு முன்பாகவே இங்கே அமல் செய்யப்பட்டிருக்க வேண்டும். மத்திய நிதியமைச்சருடைய தலைமையிலே, மாநில நிதியமைச்சர்கள் இந்த வரிவிதிப்பை ஏற்றுக்கொள்வோம் என்று சொன்ன அந்தக் கூட்டத்திலே தமிழக அமைச்சரும் இருந்தார். ஆனால், அங்கே ஏற்றுக்கொண்டு வந்தபிறகு, அந்த வரி இங்கே விதிக்கப்படாத காரணத்தினால். தமிழகம் ஒரு தனித்தீவாக நின்றது. இன்று இந்தியாவிலேயே இந்தக் கூடுதல்வரி

விதிக்கப்படாத மாநிலம் மூன்றே மாநிலங்கள்தான். உத்தரப்பிரதேசம், தமிழகம் மற்றும் நம்முடைய அருகில் இருக்கின்ற புதுவை மாநிலம்.

*பிற்பகல் 12–20*

இந்தியாவிலே முக்கியமான பொருளாதார மாற்றங்கள் எங்கெல்லாம் நடந்ததோ அங்கெல்லாம் தமிழகம் முன் வரிசையிலே நின்றதாகத்தான் படித்திருக்கிறோம். ஆனால், தேவைப்படுகின்ற ஒரு வரிவிதிப்பு முறையை இவ்வளவு காலம்தாழ்த்தியதால், அநேகத் தொழில்கள், கடந்த இரண்டு ஆண்டுகளிலே—தமிழகம், it is a manufacturing State. இங்கே பொருளாதார உற்பத்தி நடக்கிறது. இந்தப் பொருளாதார உற்பத்திக்குக் காரணமாக இருந்த மிகப் பெரிய தொழில் முதலீட்டாளர்கள் இந்த வரிவிதிப்பு விகிதத்தைத் தமிழகம் ஏற்றுக்கொள்ளாத காரணத்தினால், தங்கள் தொழிலை வேறு மாநிலத்திற்குக் கொண்டுபோனார்கள். ஏனென்றால், Value Added Tax – இந்த மதிப்புக் கூடுதல் வரியிலேதான், ஒரு மூலப்பொருளுக்குச் செலுத்துகின்ற வரியை உற்பத்திப் பொருளுக்கு என்று வருகின்றபோது அந்த வரியைக் கழிக்கக்கூடிய வசதி இருக்கிறது. அதுமட்டுமல்ல, ஒரு நாட்டிலே, ஒரு மாநிலம் விட்டு வேறு மாநிலம் மாறுகின்றபோது, உற்பத்தி செய்கின்ற மாநிலத்திற்கு இந்த வரியால் ஆதாயம் அதிகம். எனவேதான், தமிழகத்தினுடைய முதலீட்டாளர்களுக்கு, தொழில் முனைவோருக்கு, தமிழகத்திலே இருக்கின்ற பெரிய வியாபாரிகளுக்கு இருந்த சிரமங்களை இந்த வரிவிதிப்பு விகிதம் மாற்றியிருக்கிறது. நான் உள்ளபடியே நம்முடைய வணிக வரித் துறை அமைச்சரைப் பாராட்டுகிறேன்.

இந்த நல்ல நேரத்திலே பல வரிவிதிப்பு விஷயங்களைப் பற்றிய பல நல்ல செய்திகளை இந்த அரசு கவனத்திலே கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், ஒவ்வோர் ஆண்டும் நம்முடைய நிதிநிலை அறிக்கையினுடைய ஒதுக்கீடு கூடிக்கொண்டே போகிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு மிகப் பெரிய சவாலை ஏற்று, இந்த நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள் என்பதைப் பொருளாதாரம் அறிந்தவர்கள் ஒத்துக்கொள்ள வேண்டும்.

இந்த 100, 150 நாட்களிலே பெரிய நிதிச் சுமையை ஏற்றிருக்கிறோம். வீட்டுக்கு வீடு தொலைக்காட்சிக்கு எவ்வளவு பெரிய வரவேற்பு இருக்கிறது என்று தெரியும். ஆனால், இந்த ஆண்டே அதற்கு 750 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். அதைப்போல விறகுகளை வைத்து வீடுகளிலே நெருப்பூட்டி, அந்தப் புகை மூட்டத்திலே பல்வேறு





மூச்சுத்திணறல் நோய் வருகின்ற தாய்மார்கள் எல்லாம் இன்று Gas அடுப்புகளுக்காகக் காத்திருக்கிறார்கள். ஒரு மக்கள் நலம் நாடுகின்ற இந்த அரசு, இன்று அதையும் தயக்கமில்லாமல் பல நிதிச் சுமைகளுக்கிடையிலே தருகிறது. இப்படிப் பல்வேறு நலத் திட்டங்களை அமல்படுத்திக்கொண்டு வருகின்றபோது, இதற்கு நிதி ஆதாரம் எங்கேயிருந்து வரும் என்கிற கேள்விக்கு, அந்த நிதி ஆதாரத்தை எப்படிப் பெறவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டிய பணியும் இங்கே எதிர் வரிசையிலே அமர்ந்திருக்கின்ற எங்களுக்கு இருக்கிறது.

நான் நம்முடைய முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வேன், இந்தச் சேவை வரியினுடைய முழுப் பயனையும் மாநிலங்களே பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த மதிப்புக் கூட்டு வரியைப் பற்றிப் பேசுகின்றபோது, சேவை வரியின்மூலமாக வருகின்ற அந்த வரித் தொகையை மறுக்க முடியாது. ஏனென்று சொன்னால், இந்த மதிப்புக் கூட்டு வரிக்குத் தாயாக இருக்கின்ற Commercial Tax—வணிக வரி; இந்த வணிக வரியை இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் முதன்முறையாக காங்கிரஸ் கட்சி அறிமுகம் செய்தது. அன்று முதல்வராக இருந்த மூதறிஞர் இராஜாஜி அவர்கள் அறிமுகம் செய்தார்கள். மதுவிலக்கினால் ஏற்படக்கூடிய நஷ்டத்தைத் தீர்ப்பதற்காக தன்னுடைய நிர்வாக சாதுர்யத்தினால் கண்டுபிடித்த வணிக வரி, ஒரு பிரம்மாண்டமான ஆலமரமாக வளர்ந்து, இந்த அரசாங்க கஜானாவை சப்தம் இல்லாமல், வலி இல்லாமல் நிரப்புகின்ற ஒரு பெரிய taxing system. அப்படி உருவாகியிருக்கிறது. அதை உருவாக்கித் தந்த பெருமை காங்கிரஸ் கட்சிக்கு உண்டு. அதைப்போல, இன்று வளர்ந்துவிட்ட அந்த taxing system—வரிவிதிப்பு முறையைப் பலவிதமாக மாற்றி, தமிழகத்தினுடைய எதிர்காலத்திற்கு நிரந்தரமாக வருமானம் தேடக்கூடிய நல்ல மாற்றங்களை இந்த வரிவிதிப்பிலே செய்யவேண்டும். நம்முடைய முதலமைச்சர் அவர்களால் நிச்சயம் முடியும்.

இந்தச் சேவை வரியினுடைய முழுப் பயனையும் அவர்கள் நம்முடைய மாநிலத்திற்குப் பெற்றுத்தர வேண்டும். இப்பொழுது நமக்கு 30 விழுக்காடு மட்டுமே தருகிறார்கள், சேவை வரியிலே. ஏறக்குறைய ஆண்டிற்கு 16 ஆயிரம் கோடி ரூபாய் வருகிறது. சேவை வரியிலே நாம் பெறுகின்ற பங்கு நமக்கு மீண்டும் அப்படியே வருகிறதா என்று சொன்னால், நிச்சயமாக இல்லை. சேவை வரி தமிழகத்திலிருந்து எவ்வளவு போகிறதோ அதே பங்கு டெல்லியிலேயிருந்து திரும்ப தமிழகத்திற்கு வருகிறதா என்றால் வரவில்லை. அந்தச் சேவை வரியைப் பெறுகின்றபோது, இந்த வணிக வரியைக்கூட இன்னும் குறைக்கின்ற

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2006 டிசம்பர் 5

வாய்ப்பிருக்கிறது. எனவே, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று இது நிறைவேற்றப்பட வேண்டும் என்று நான் வாழ்த்துகின்ற அதே நேரத்திலே, சேவை வரியிலிருந்து பெறுகின்ற வருமானத்தைக் கூட்டுவதற்கும் தமிழக அரசு முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

*பிற்பகல் 12–25*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டமுன்வடிவின் விவாதத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துகளை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன். வரிச் சீர்திருத்தம் என்பதற்காக கொண்டு வரக்கூடிய, ஒரு நடைமுறை மதிப்புக் கூட்டு வரி என்கிற Value Added Tax. இந்த மதிப்புக் கூட்டு வரி கொண்டு வருவதனுடைய நோக்கமாகச் சொல்லப்படுவது, இந்தியா முழுவதும் ஒரே வரி விதிப்பு முறையாக இருக்க வேண்டும்; மாநிலங்களுக்கிடையே விற்பனை வரி வித்தியாசப்படுகிறது; ஆகவே, ஒரே அளவில், ஒரே சீராக இருக்கவேண்டும் என்ற ஒரு நோக்கத்திற்காக கொண்டு வரக்கூடிய விற்பனை வரி விதிப்பு முறை. அதற்குக் காரணம், உதாரணமாக சொல்ல வேண்டும் என்று சொன்னால், இங்கே தமிழ்நாட்டிலே வாகனங்கள் வாங்குகிறோம்; அது மகிழுந்தாக இருந்தாலும், சரக்குந்தாக இருந்தாலும், இங்கு வாங்குவதற்கு விற்பனை வரி கூடுதலாக இருக்கிறது. அருகிலே இருக்கிற புதுச்சேரி மாநிலத்திற்குச் சென்று அங்கே மகிழுந்து என்று சொல்லக்கூடிய கார் அல்லது சரக்குந்து என்று சொல்லக்கூடிய லாரி வாங்குவோம் என்று சொன்னால் விற்பனை வரி குறைவாக இருக்கிறது; புதுச்சேரிக்குச் சென்று வாங்குகிறார்கள். ஆகவே, இந்த நிலை மாற வேண்டும்; இந்தியா முழுவதும் ஒரே சீராக இருக்க வேண்டும் என்ற அந்த நோக்கத்தின் அடிப்படையிலே கொண்டு வரக்கூடிய இந்த வரி விதிப்பு முறை, அது எல்லா மாநிலங்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, முதலமைச்சர் அவர்களுடைய மாநாட்டிலே சொல்லப்பட்டு, பிறகு நிதியமைச்சர் அவர்களாலே ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஒவ்வொரு மாநிலத்திலும் நடைமுறைபடுத்தப்பட்டு வருகிற சூழ்நிலையில், தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்ற நிலையில் வரக்கூடிய 2007 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களிலே இருந்து நடைமுறைப்படுத்துவதற்காக இப்போது கொண்டு வரப்பட்டுள்ளது சட்டமுன்வடிவு.



2006 டிசம்பர் 5] [திரு. ஜி.கே. மணி]

இந்த வரிச் சீர்திருத்தம் அல்லது வரி விதிப்பு முறை எதுவாக இருந்தாலும்கூட, அரசுக்கும், அதிகாரிகளுக்கும், வியாபாரிகளுக்கும் நன்மை தரக்கூடியதாக இல்லாமல், மக்கள் நலனை மையமாக வைத்து இருக்க வேண்டும். அப்படி வரி விதிப்பு முறையில் அல்லது வரி விலக்கு அளிக்கிற முறையில், மக்கள் நலனுக்கு எந்த வகையிலே பயன் அளிக்கிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்ப்போம் என்று சொன்னால், கடந்த சில மாதங்களுக்கு முன்பு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உயர்ந்த நோக்கத்தோடு, ஏழை மக்களின் நலனிலே அக்கறை கொண்டு, உணவு எண்ணெய்க்கு வரி விலக்கு அளித்தார்கள். கடந்த ஆட்சிக் காலத்திலே, அதிமுக ஆட்சிக் காலத்திலே வரி விதிக்கப்பட்டது. ஆனால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடனே, உணவு எண்ணெய்க்கு வரி விலக்கு அளித்தார்கள். அப்படி வரி விலக்கு அளித்த பிறகு, கடைகளிலே வாங்குகின்றபோது எண்ணெயினுடைய விலை குறைந்திருக்க வேண்டும். சமையல் எண்ணெய் விலை குறைந்ததா என்று சொன்னால் எங்கேயும் குறையவில்லை. விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. விலக்கு அளிக்கப்பட்டதனுடைய பலன் மக்களைச் சென்றடையவில்லை. ஆகவே, இந்த வரி விதிப்பை நடைமுறைப்படுத்தக்கூடிய வேளையில், நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வதெல்லாம், நீங்கள் விதிக்கக்கூடிய அந்த வரி முறையிலே, மக்களுக்குப் பலன் அளிக்கக்கூடியதாக இருக்கிறதா என்பதை நாம் கண்காணிக்க வேண்டும். சரி, எண்ணெய்க்கு விலக்கு அளித்தும் விலை குறையவில்லை; மக்களுக்குப் பலன் சேரவில்லை; அதை ஆய்வு செய்வதற்கு அல்லது கண்காணிப்பதற்கு ஏதாவது குழு இருக்கிறதா; ஏன் விலை குறையவில்லை; விலை குறைக்கப்படுகிறதா; குறைக்காதவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுத்தோம் என்று கண்காணிப்பதற்கு, கேட்பதற்கு நம்முடைய அரசிடம் அப்படிப்பட்ட குழுக்கள் இல்லை. ஆகவே, இந்தச் சந்தர்ப்பத்திலே நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்த முறையைத் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்துகின்ற வேளையில், அதைக் கண்காணிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

உதாரணத்திற்கு இப்போது நடைமுறையிலே ஆந்திராவிலே வெங்காயம் அதிகமாக விளைகிறது; குஜராத்திலே பருப்பு அதிகமாக விளைகிறது; மராட்டியத்திலே வெங்காயம் அதிகமாக விளைகிறது என்று சொன்னால், பதுக்கல் பேர்வழிகள், ஒரே இடத்திலே அங்கே தேக்கி வைத்து விடுகிறார்கள். ஆந்திராவிலிருந்து வெங்காயம் தமிழ்நாட்டிற்கு வரக் கூடாது; குஜராத்திலிருந்து பருப்பு தமிழ்நாட்டிற்கு வரக் கூடாது

[திரு. ஜி.கே. மணி] [2006 டிசம்பர் 5

என்று அந்த விற்பனைப் பொருட்களை ஒரே இடத்தில் வாங்கி, தேக்கி வைத்துக்கொள்கிறார்கள். அதை பழைய காலத்திலே பதுக்கல், பதுக்கல் என்று சொன்னார்கள். கள்ளக்கடத்தல் என்று சொன்னார்கள். ஆனால், இப்போது நவீனப் பெயராக அது online trading என்று சொல்லப்படுகிறது. இணையதளத்தின் மூலமாக விற்பனை நடக்கிறது. மும்பையிலிருந்து ஒரு வியாபாரி இந்தியா முழுவதும் இருக்கிற பொருட்களை விலைக்கு வாங்கி ஒரே இடத்திலே இருப்பு வைத்து விடுகிறார். பதுக்கல் செய்து விடுகிறார். அது வெளியிலே புழக்கத்திற்கு வருவதில்லை. இது நடைமுறையிலே இருந்துகொண்டிருக்கிறது. இதையெல்லாம் இன்றைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசுக்குத் தலைமை ஏற்றிருக்கிற காங்கிரஸ் கட்சியினுடைய தியாகத் தலைவியாக இருக்கிற திருமதி சோனியா காந்தி அம்மையார் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்திலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இந்த வரி விதிப்பு முறையில் பொருட்களின் விலைவாசியைக் கட்டுப்படுத்துகிற வேளையில் ஓர் ஒழுங்குமுறையைப் பின்பற்ற வேண்டும் என்று மத்திய அரசுக்கு வேண்டுகோள் வைத்திருக்கிறார்கள். எந்த அரசாங்கம் மதிப்புக் கூட்டு வரியை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று விரும்புகிறதோ—இந்திய அரசாங்கம்—அந்த அரசாங்கத்தினுடைய பிரதமருக்கு, அரசாங்கத்திற்குத் தலைமை ஏற்றிருக்கிற தலைவர் அவர்களே சொல்கிறார் என்று சொன்னால், இதிலே எவ்வளவு பதுக்கல் இருக்கிறது, முறைகேடு நடந்துகொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நாம் எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதற்காக நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

*பிற்பகல் 12–30*

அதிலும் குறிப்பாக, விற்பனை செய்கிற வேளையில், கடந்த காலங்களில் இதை எல்லாம் ஒழுங்குபடுத்துவதற்காக, கட்டுப்படுத்துவதற்காக மத்திய அரசாங்கத்தில் Forward Marketing Commission—விற்பனை முன்னேற்றக் குழுமம் என்ற ஓர் அமைப்பு இருந்தது. அந்த அமைப்பை கடந்த மத்திய அரசு, அதாவது வாஜ்பாய் பிரதமராக இருந்த அந்த வாஜ்பாய் அரசாங்கம் அந்தக் குழுவைக் கலைத்துவிட்டது. யாருக்காக என்று சொன்னால், ஒட்டுமொத்த அந்தப் பதுக்கல் வியாபாரிகளுக்காக அந்தக் குழுவைக் கலைத்துவிட்டது. கலைத்துவிட்ட காரணத்தால் இப்பொழுது பதுக்கல் எங்கு பார்த்தாலும் நடந்து கொண்டிருக்கிறது. அந்தப் பதுக்கல் செய்யக்கூடிய அமைப்பாக அந்த online trading நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே வேண்டி



2006 டிசம்பர் 5] [திரு. ஜி.கே. மணி]

விரும்பி கேட்டுக்கொள்வதெல்லாம், நீங்கள் முதலமைச்சர்கள் மாநாட்டிலே கலந்துகொள்ள இருக்கிறீர்கள். அந்த நேரத்திலே இந்த online trading-ஐ ஒழிக்க வேண்டும்.

அதேநேரத்தில் வாஜ்பாய் அரசால் கலைக்கப்பட்ட, நம்முடைய தியாகத் தலைவி அன்னை சோனியா காந்தி அவர்களால் வலியுறுத்தப்பட்டு இருக்கிற அந்த Forward Marketing Commission என்று சொல்லக்கூடிய அந்த விற்பனை முன்னேற்றக் குழுமத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும். அதை நடைமுறைபடுத்துகின்ற வேளையில் அதற்கு சட்டப்பூர்வமான அதிகாரங்கள் வழங்க வேண்டும், இது பெயரளவில் இருந்து விடக்கூடாது என்பதையெல்லாம் எடுத்துச் சொல்லக்கூடிய வகையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்திய நாட்டிற்கே வழிகாட்டியாக இந்தக் கருத்தை வலியுறுத்தவேண்டும் என்ற வேண்டுகோளை நான் முன்வைக்க விரும்புகிறேன். ஆகவே, இந்தச் சூழ்நிலையில் இந்த மதிப்புக் கூட்டு வரி என்பது தவிர்க்கமுடியாத காலக்கட்டம். இந்தியா முழுவதும் எல்லா மாநிலங்களிலும் வந்துவிட்டது. வந்துவிட்ட சூழ்நிலையில் நாம் ஏற்றுக்கொள்ளவில்லை யென்று சொன்னாலும் நமக்கு இழப்பு மட்டுமல்ல, தமிழ்நாட்டிலே ஏற்றுக்கொள்ளவில்லை என்ற ஓர் அவப்பெயரும் வந்தாகிவிடும். மற்ற மாநிலங்களுக்கு உள்ள நிலை முற்றிலும் மாறுபட்டுவிடும் என்ற காரணத்தினாலே தவிர்க்கமுடியாத காலக்கட்டத்தில் இந்த மதிப்புக் கூட்டு வரியை 2007-லே நாம் அமல்படுத்த இருக்கிறோம். அமல்படுத்துகின்ற இந்த வேளையை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன். நடைமுறைப்படுத்துவதிலே மிக எச்சரிக்கையாக நடைமுறைப்படுத்தவேண்டும். இதிலே வியாபாரிகளுக்காக, அதிகாரிகளுடைய நடைமுறைக்காக, அரசாங்கத்தின் வருவாய்க்காக என்று அல்லாமல், மக்கள் நலனை முன்னிலைப்படுத்தியதாக இருக்கவேண்டுமென்ற வேண்டுகோளை முன்வைக்கிறேன்.

அதேவேளையில், இந்த மதிப்புக் கூட்டு வரியினால் சிறு வியாபாரிகளுக்கு மிகப்பெரிய பாதிப்பும் உண்டாகும். அதிகாரிகளுடைய அச்சுறுத்தல், மிரட்டல் போக்கு அதிகரிக்கக்கூடும். அவர்கள் இதிலே முறைகேடு செய்வதற்கு, கையூட்டு பெறுவதற்கு வாய்ப்பு இருக்கும் என்று சிறு வியாபாரிகளாலே அஞ்சப்படுகிறது. ஆகவே, அந்த அச்சத்தைப் போக்கக்கூடிய வகையில் இந்த மதிப்புக் கூட்டு வரியிலிருந்து சிறு வியாபாரிகளுக்கு விலக்கு அளிக்க வேண்டும். அப்படி விலக்கு அளிக்கப்பட்ட பிறகு அது மக்களுக்கு முறையாகச் சென்றடைய வேண்டும், அதை எல்லாம் கண்காணிப்பதற்கு நல்ல குழுவையும் அரசு நியமித்து கண்காணிக்க வேண்டும். உரிய வகையில் இந்த மதிப்புக்

கூட்டு வரியை நடைமுறைப்படுத்தலாம் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வரவேற்று, கருத்துச் சொல்லி, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. சண்முகம்.

*பிற்பகல் 12–35*

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே இங்கே பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான கருத்தைச் சொல்லியிருக்கிறார். முதலிலே மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்துகின்றபோது, அன்றைக்கு டில்லியிலே நடந்த கூட்டத்திலே அதை ஏற்றுக்கொண்டுவிட்டு, இங்கு அதை அமல்படுத்தவில்லை என்று சொன்னார்கள். அது தவறு. எந்த நிலையிலும், எந்த நேரத்திலும் தமிழக அரசு, அம்மாவினுடைய அரசு மதிப்புக் கூட்டு வரியை நடைமுறைப்படுத்துவோம் என்று வாக்குறுதி தரவில்லை, சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அதற்கு மாறாக, இந்த மதிப்புக் கூட்டு வரியை இருக்கின்ற நிலையிலே அமல்படுத்தக்கூடாது, இதில் சில மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். ஏனென்றால், இந்த மதிப்புக் கூட்டு வரி வணிகர்களிடையே மிகப்பெரிய ஓர் அச்சத்தை இன்றைக்கு உருவாக்கி இருக்கின்றது. சிறு வணிகர்களிடையே மிகப்பெரிய ஒரு பதற்றத்தை இன்றைக்கு ஏற்படுத்தியிருக்கின்றது. பல்வேறு வணிகர் சங்கங்கள் இன்றைக்குப் போராட்டத்தை அறிவித்திருக்கின்றார்கள். அந்த நிலையிலே அன்றைக்கு நாங்கள்கூட---இன்றைக்கு காங்கிரஸ் உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்றபொழுது மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்தவேண்டும் என்ற ஒரு நோக்கம், அதை நாங்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்--வணிகர்களும், பொது மக்களும், அனைவரும் ஏற்றுக்கொள்கின்ற வகையிலே மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்த வேண்டுமென்கிற நோக்கத்திலே, இன்றைக்கு மத்தியிலே நிதியமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு திரு. ப. சிதம்பரம் அவர்கள் தலைமையிலே, சென்னையிலே, லீ மெரிடியன் ஹோட்டலிலே, ஒரு கூட்டத்தை அன்றைக்கு நாங்கள் கூட்டினோம். அனைத்து வணிகர் சங்கங்களையும் அழைத்திருந்தோம். அனைத்துக் கட்சிகளினுடைய உறுப்பினர்களையும் அன்றைக்கு அழைத்திருந்தோம். இன்றைக்கு மதிப்புக் கூட்டு வரியை ஆதரித்துப் பேசுகின்றவர்கள் யாரும் அன்றைக்கு அந்தக் கூட்டத்திற்கு வரவில்லை; அன்றைக்கு காங்கிரசும் வரவில்லை; பாட்டாளி மக்கள் கட்சியும் வரவில்லை; கம்யூனிஸ்ட் கட்சியினரும் வரவில்லை, அந்த





மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்தக் கூடாது என்று சொல்லி, அந்தக் கூட்டத்தினை அனைவரும் அன்றைக்குப் புறக்கணித்தார்கள். ஆனால், அன்றைக்கு வணிகர்கள் வைத்த கோரிக்கையை அம்மா அவர்களினுடைய அரசு—அன்றைக்கு அந்தக் கூட்டத்திலே கலந்து கொண்ட வணிகர்கள் எல்லாம், இந்த மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்தக் கூடாது; இது வணிகர்களைப் பாதிக்கும்; தங்களுடைய தொழிலை அழித்துவிடும்; ஆகவே, இப்போது இருக்கின்ற நிலையிலே இந்த மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்தக் கூடாது என்று அன்றைக்குக் கோரிக்கை வைத்தார்கள்—அந்த வணிகர்களுடைய நலனைக் கருதி, வணிகர்களுடைய வாழ்க்கை நலனைக் கருதி, அவர்களுடைய வியாபாரத்தினுடைய நோக்கத்தினைக் கருதி, அந்த மதிப்புக் கூட்டு வரியை நாங்கள் அமல்படுத்த மாட்டோம், அந்த மதிப்புக் கூட்டு வரியை வணிகர்களும் அனைவரும் ஏற்றுக்கொள்கிற வகையிலே அதிலே சட்டத் திருத்தங்களை, திருத்தம் மேற்கொண்ட பிறகுதான் அமல்படுத்துவோம் என்ற உறுதிமொழியை அன்றைக்கு அரசு கொடுத்தது. அதைத்தான் டெல்லியிலே நடந்த மதிப்புக் கூட்டு வரிக் கூட்டத்திலே நாங்கள் வலியுறுத்தினோம். அதிலே சில திருத்தங்களை நீங்கள் கொண்டு வர வேண்டும்; அந்த வியாபாரிகளுக்கு நீங்கள் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று கூறினோம்.

அதுமட்டுமல்லாமல், இந்த மதிப்புக் கூட்டு வரி என்பதில் மிக முக்கியமான ஒன்று. நாங்கள் ஏதோ அரசியலுக்காக இதை எதிர்க்கிறோம் என்று சொல்லவில்லை. வரி வசூல் என்பது நம்முடைய மாநிலத்தினுடைய உரிமை, நமக்கு இருக்கின்ற ஓர் உரிமை. ஏற்கெனவே மத்திய அரசாங்கம் ஒவ்வோர் உரிமையாக, மாநிலத்தினுடைய உரிமைகளை இன்றைக்குப் பறித்துக்கொண்டு, மத்தியிலே தங்களுடைய கையிலே வைத்துக் கொண்டிருக்கின்றது. இப்போது நமக்கு இருக்கிற ஒரு மிகப் பெரிய ஆயுதம், இந்த வரி வசூல். இன்றைக்குத் தமிழகத்தினுடைய வருவாயிலே 70 சதவீத வருவாய், தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்மூலம் கிடைத்துக்கொண்டிருக்கின்றது. மதிப்புக் கூட்டு வரியை நாம் ஏற்றுக்கொண்டோமென்றால் மத்திய அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டிலே இன்றைக்குச் சென்றுவிடுவோம். ஆனால், technical-ஆகச் சொல்வார்கள். இல்லை, இல்லை; நமக்கு இதிலே பாதுகாப்பு இருக்கின்றது; எந்த அபாயமும் இல்லை; மத்திய அரசாங்கம் எதையும் செய்யாது என்று சொல்லலாம். ஆனால், இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்காக மத்திய அரசாங்கம் இன்றைக்கு நாடகம் போட்டுக் கொண்டிருக்கிறது. நீங்கள் கேட்பதையெல்லாம் கொடுக்கின்றோம். அரிசிக்கு வரி [illegible] நீங்கள்,

227439

ஒரு மூன்று ஆண்டுகளுக்கு; எண்ணெய்க்கு வரி விலக்கா, வைத்துக்கொள்ளுங்கள், ஒரு மூன்று ஆண்டுகளுக்கு; அந்த மதிப்புக் கூட்டு வரி முறையிலே எப்படியாவது நாம் வர வேண்டும் என்பதற்காக இன்றைக்கு மத்திய அரசாங்கம் நாம் கேட்பதற்கெல்லாம் தலையாட்டிக் கொண்டிக்கின்றது. ஆனால், இந்த மதிப்புக் கூட்டு வரி முறைக்குள்ளே நாம் நுழைந்துவிட்டால், இந்தச் சட்டத்தை நாம் நிறைவேற்றிவிட்டால் — இன்றைக்கு நாம் அரிசிக்கு வரிவிலக்கு கொடுத்திருக்கின்றோம். நாளைக்கு மத்திய அரசாங்கம் சொல்லும். பஞ்சாபில் இருக்கின்ற அரசாங்கம் அரிசிக்கு போட்டிருக்கின்ற வரிமூலம் மட்டும் இன்றைக்கு 700 கோடி ரூபாயை வசூலித்துக் கொண்டிருக்கின்றது. பஞ்சாப் அரசாங்கம் இன்றைக்கு வலியுறுத்திக் கொண்டிருக்கின்றது. அந்த Empowered Committee meeting–லே, மதிப்புக் கூட்டு வரியிலே அரிசிக்குக் கண்டிப்பாக நீங்கள் வரி போட வேண்டுமென்று சொல்கின்றது. ஒரு மாநிலம் pulse–க்கு, பயறு வகைகளுக்கு நீங்கள் வரி போட வேண்டுமென்று சொல்கின்றது. ஆனால், அத்தனை மாநிலங்களுக்கும் அவர்கள் கேட்பதற்கெல்லாம் இப்படித் தலையை, தலையை ஆட்டிவிட்டு—ஆனால், இன்றைக்கு நாம் மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்த வேண்டுமென்று சொன்னால்—மதிப்புக் கூட்டு வரியினுடைய நோக்கம் என்ன? முதலில் அதனை நீங்கள் தெளிவாகச் சொல்ல வேண்டும்.

இந்தியா முழுவதும் அனைத்துப் பொருட்களுக்கும் சீரான வரி விதிப்பு. அரிசிக்கு ஒரு வரியென்றால் இந்தியா முழுவதும் ஒரே வரி இருக்க வேண்டும்; எண்ணெய்க்கு வரி என்றால் ஒரே வரி இருக்க வேண்டும்; two wheeler–க்கு வரி என்றால் இந்தியா முழுவதும் ஒரே வரி இருக்க வேண்டும்; கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரைக்கும் ஒரு பொருளுக்கு வரி என்றால், ஒரே வரி இருக்க வேண்டும் என்பதுதான் அந்தச் சட்டத்தினுடைய நோக்கம். ஆனால், இன்றைக்கு என்ன இருக்கின்றது? நாம் ஒரு 10 பொருட்களுக்கு வரி விலக்குக் கொடுக்கின்றோம். ஆந்திராவில் இருக்கின்ற அரசாங்கம் என்ன செய்கின்றது? நங்களுக்கு வேண்டிய 10 பொருட்களுக்கு வரிவிலக்குக் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. இப்படி மாநிலத்திற்கு மாநிலம் அந்த வரி விலக்கை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டால், எங்கே சீரான வரி விதிப்பை ஏற்படுத்த முடியும் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்?

அதுமட்டுமல்ல, மாநிலத்தினுடைய உரிமையை இன்றைக்கு நாம் பறிகொடுத்துக் கொண்டிருக்கின்றோம். மாநிலத்தினுடைய,



தமிழகத்தினுடைய வரி உரிமையை இன்றைக்கு நாம் பறிகொடுக்கின்றோம். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கின்றோம். மத்திய அரசாங்கம், வரியை நீங்கள்தான் போடுகின்றீர்கள், நாங்கள் போடவில்லையென்று சொல்கின்றது. ஒரே உதாரணம். கடந்த ஆண்டு—L.P.G., வீட்டு உபயோக Gas–க்கு வரியை நாம் போட்டுக் கொண்டிருந்தோம். ஆனால், மத்திய அரசாங்கம் நம்மை கலந்தாலோசிக்காமல், நம்மை மரியாதைக்குக்கூட ஒரு வார்த்தைகூட கேட்காமல், அதை declared goods–லே கொண்டு வந்து, 4 சதவீதமாகக் குறைத்தார்கள். குறைத்ததினால் மட்டும் நம்முடைய தமிழகத்திற்கு 70 கோடி ரூபாய் நட்டம். அதைப்பற்றி நாம் கூட்டத்திலே கேட்டோம். சரி, மக்களுக்காக வரியைக் குறைக்கின்றீர்கள். 4 சதவீதம், வீட்டுக்கு உபயோகிக்கின்ற Gas. மக்களுக்குதானே போகின்றது. அப்படியென்றால் அந்த Gas–னுடைய விலையை நீங்கள் குறைப்பீர்களா என்று கேட்டதற்கு, அன்றைக்கு மத்திய அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் சொன்னார்கள். இல்லை, இல்லை; Gas விலையை நாங்கள் குறைக்க மாட்டோம்; அந்த 70 கோடி ரூபாய் இலாபத்தை அந்த ஆயில் கம்பெனிகளுக்கு நாங்கள் கொடுப்போம் என்று.

*பிற்பகல் 12–40*

யார் வீட்டுப் பணத்தை, நம்முடைய பணத்தை எடுத்து, மக்களுக்குக் கொடுத்தாலும் பரவாயில்லை; மக்களுக்குக் கொடுக்க மாட்டோம், அந்த உற்பத்தியாளருக்கு, அந்த ஆயில் கம்பெனிகளுக்குக் கொடுப்போம் என்று சொல்கின்றார்கள். இப்படித்தான் மத்திய அரசாங்கம் தன்னிச்சையாகச் செயல்படுகிறது. இன்றைக்கு நாம் சேர்ந்துவிடலாம், நாளைக்கோ இல்லை இரண்டாண்டு காலத்திற்குப் பிறகோ, தாம் நினைப்பதை, எந்தப் பொருளுக்கு வேண்டுமானாலும், எந்தச் சட்டத்தை வேண்டுமென்றாலும் போடுவார்கள். ஆனால், சொல்வார்கள்; இல்லை இல்லை, எல்லா மாநிலங்களும் சேர்ந்துதான், நாங்கள் சேர்ந்து பேசித்தான் முடிவெடுக்கின்றோம் என்று சொல்வார்கள். அன்றைக்கு தமிழ்நாடு, நாம் மட்டும்தான். இரண்டு ஆண்டு காலமாக தமிழ்நாடு அந்த Empowered Committee கூட்டத்திலே இந்த மதிப்புக் கூட்டு வரியிலே நீங்கள் பாதுகாப்புத் தர வேண்டும்; மாநிலத்தினுடைய நிதி வருவாய்க்கு நீங்கள் பாதுகாப்பு அளிக்க வேண்டும்; இந்தச் சட்டத் திருத்தத்தை நீங்கள் கொண்டு வர வேண்டும்; அந்த சேவை வரியை தமிழகத்திற்கே, அந்த மாநிலத்திற்கே வரியை வசூல் செய்து தாங்களே வைத்துக்கொள்கின்ற அதிகாரத்தைத் தர வேண்டுமென்று கேட்டோம். அதற்குச் சொல்கின்றார்; அன்றைக்கு அந்தக் கூட்டத்திலே சொன்னது என்ன தெரியுமா? சேவை வரியை நாங்கள் தருகின்றோம்; எந்தெந்த

சேவை வரியை தெரியுமா? முடி வெட்டுவது, முகத்தை அலங்காரம் செய்துகொள்வது, இப்படி சின்னச் சின்னப் பொருட்களுக்கு, எதிலே நாம் வரியைப் போட்டால் பொது மக்கள் நம்மை அடிக்க வருவார்களோ, அந்த வரியையெல்லாம் நீ போட்டுக்கொள்; Bank, Railway, Telephones இவற்றிலெல்லாம் நாங்கள் வரி போட்டுக்கொள்கின்றோம்; ஒன்றுக்கும் உபயோகம் இல்லாத பொருள்கள்மீது நீங்கள் வரி போட்டுக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். ஆனால், இன்றுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

C.S.T. மத்திய விற்பனை சட்டத்தை இன்றைக்கு, இந்த ஆண்டு abolish செய்யப் போகிறார்கள். அதை abolish செய்தால், தமிழ்நாட்டிற்கு மட்டும் 2,400 கோடி ரூபாய் கிட்டத்தட்ட நஷ்டம் ஏற்படும். வரி வருவாய் இழப்பு ஏற்படும். அதற்கு இந்தத் திட்டத்திலே நீங்கள் என்ன ஏற்பாடு செய்திருக்கின்றீர்கள்? மத்திய அரசாங்கம் என்ன உங்களுக்கு உறுதி கொடுத்திருக்கிறது? நாங்கள் அதைத்தான் கேட்டோம். மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்த வேண்டுமென்றால், நீங்கள் C.S.T.–ஐ abolish செய்ய வேண்டும். C.S.T.–ஐ நீங்கள் நீக்குகின்றபோது அதற்கு, மாநிலத்திற்கு நிரந்தரமான compensation கொடுக்க வேண்டும். நிரந்தர compensation கொடுக்க வேண்டுமென்று சொன்னதற்கு, மத்திய அரசாங்கம், நாங்கள் நிரந்தரமாகக் கொடுக்க முடியாது; ஓராண்டு அல்லது ஈராண்டுதான் கொடுக்க முடியும் என்று சொன்னார்கள். அதையாவது நீங்கள் எப்படிக் கொடுப்பீர்கள் என்று கேட்டால் சர்க்கரைக்கு நீங்கள் வரி போட்டுக்கொள்ளுங்கள்; கம்பிக்கு வரி போட்டுக்கொள்ளுங்கள். எதிலெல்லாம் போட்டால் நம்மீது மக்கள் விரோதமாகிவிடுவார்களோ, அந்த வரியை A.E.D. - Additional Excise Duty – வரியை நீங்கள் வசூல் செய்துகொள்ளுங்கள் என்று சொன்னார்கள். நாங்கள், வேண்டாம், Service Tax போடுகின்ற, சேவை வரியை அரசுக்குக் கொடுங்கள், மாநில அரசிற்குக் கொடுங்கள், 2,400 கோடி ரூபாய் வரி அந்த ஒரு சட்டத்தில் மட்டும் இழப்பு ஏற்படுகிறது என்று சொன்னோம்.

அதுமட்டுமல்லாமல், General Sales Tax—தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டத்திலே மட்டும் 3,000 கோடி ரூபாய் நமக்கு இழப்பு ஏற்படுகிறது. கிட்டத்தட்ட 5,000 கோடி ரூபாய்க்கு நம் மாநில அரசுக்கு தன்னுடைய வரி வருவாயிலே இழப்பு ஏற்படுகிறது, இந்தச் சட்டத்தால். ஆனால், ஒரு காரணம் சொல்லப்படுகிறது. உற்பத்தியாளர்கள் இங்கே வரமாட்டார்கள். ஆகவே, இந்தச் சட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று சொல்கின்றீர்கள். மாண்புமிகு பீட்டர் அல்போன்ஸ் சொல்லியதைப்போல, தமிழ்நாடு அரசாங்கம் கடந்த ஆட்சியிலே இந்தச் சட்டத்தை அமல்படுத்தாததால்,



வரி வருவாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது, உற்பத்தியாளர்கள் தமிழகத்திற்கு வரவில்லையென்று சொல்கின்றார்கள். ஒன்றே ஒன்று சொல்லிக் கொள்கின்றேன். தமிழகத்திலே இந்தியா முழுவதும் 2005–லே அந்த மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்தினார்கள். அந்த ஆண்டு எந்தெந்த மாநிலங்களெல்லாம் மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்தியதோ, அந்த மாநிலங்கள் அத்தனையும் வரி இழப்பை ஏற்படுத்தியது. ஆனால், மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்தாத தமிழக அரசாங்கம் 2003–2004–இலே, 2004 ஆம் ஆண்டு 11,756 கோடி ரூபாய் வரி வருவாய் ஈட்டியது. (மேசையைத் தட்டும் ஒலி) அதே மதிப்புக் கூட்டு வரியை அடுத்த ஆண்டு, 2005 ஆம் ஆண்டு அனைத்து மாநிலங்களும், இந்தியாவிலே இருக்கின்ற அமல்படுத்திய மாநிலங்களுக்கு எல்லாம் வரி இழப்பை ஏற்படுத்தியது. தமிழ்நாட்டிலே மட்டும் 2005 ஆம் ஆண்டு 13,907 கோடி ரூபாய். 2,700 கோடி ரூபாயை அதிகமான வருவாயை ஈட்டிக் கொடுத்திருக்கிறது. இதை மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகின்றேன்.

அதுமட்டுமல்ல. இந்த இரண்டாண்டுக் காலத்திலேதான் தமிழகத்திலே மிகப் பெரிய உற்பத்திகளை, புதிய முதலீடுகளை ஏற்படுத்தியது. அந்த இரண்டாண்டுக் காலத்திலே தமிழகத்திலே ஏற்படுத்தியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்துவதற்கும், வரி இழப்பு ஏற்படுவதற்கும் சம்பந்தமே இல்லை. தமிழகத்திலே அடுத்த 2006 ஆம் ஆண்டு, இந்த ஆண்டு 3,000 கோடி ரூபாயை, அதிகமான வரிகளை வசூலித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்தவில்லையென்றால், ஏதோ வரி இழப்பு ஏற்பட்டுவிடும்; முதலீட்டாளர்கள் இங்கு தமிழகத்திற்கு வரமாட்டார்கள்; ஆகவே, இந்த மதிப்புக் கூட்டிய வரியை அமல்படுத்த வேண்டுமென்று சொல்கின்றார்கள். இந்த மதிப்புக் கூட்டு வரி யாருக்கு இலாபம் என்றால், ஏழைகளுக்கு இலாபம் இல்லை; வியாபாரிகளுக்கு இலாபம் இல்லை; பொது மக்களுக்கு இலாபம் இல்லை. ஏற்கெனவே தமிழகத்திலே விலைவாசி, இன்றைக்கு அத்தியாவசியப் பொருள்களின் விலைவாசி, அனைத்துப் பொருள்களின் விலைவாசி இன்றைக்கு 40 சதவீதத்திற்கு உயர்ந்திருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்தினால் மிகப் பெரிய ஒரு கடுமையான விலையேற்றத்தை, இன்றைக்கு அனைத்துப் பொருள்களுடைய விலையேற்றத்தை இந்த நாட்டு மக்கள், ஏழை மக்கள், எளிய மக்கள் சந்திக்க வேண்டிய ஒரு நிலை உருவாகியிருக்கின்றது.

அதுமட்டுமல்ல. வணிகர்களைப் பாதிக்கின்ற, மக்களுக்கு இந்த வரி ஏற்றத்தின்மூலம் விலைவாசி உயர்வை ஏற்படுத்தியிருக்கின்ற இந்த

[திரு. சி.வி. சண்முகம்] [2006 டிசம்பர் 5

வரி ஏற்றத்தை நீங்கள் அவசியம் இந்தச் சட்டத்தை நிறைவேற்றாமல் நிறுத்தி வைத்து, இதிலே சம்பந்தப்பட்டிருக்கின்ற வணிகர்களையும், அனைவரையும் அழைத்துப் பேசி, அவர்கள் ஏற்றுக்கொள்கின்ற வகையிலே, வணிகர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கின்ற வகையிலே, மக்களுக்கு விலைவாசி ஏற்றத்தைக் கொடுக்காதவகையிலே, நம்முடைய மாநிலத்தினுடைய வரி உரிமையை, வசூலிக்கின்ற உரிமையைப் பாதிக்காதவகையிலே, இந்தச் சட்டத்தை இயற்ற வேண்டுமென்று சொல்லி, இந்தச் சட்டத் திருத்தத்தை நிறுத்தி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சண்முகம் அவர்கள் பேசுகின்றபோது, என்னைப் பெயரிட்டு அழைத்து, இந்த அவைக்கு சில தவறான தகவல்களை நான் தந்ததாக அவர்கள் சொன்னார்கள். "நிதி அமைச்சர்கள், வணிக வரித் துறை அமைச்சர்கள் கூட்டம் கூட்டப்படவில்லை. மத்திய அரசு கூட்டவில்லை" அதில்... (குறுக்கீடுகள்) நீங்கள் பேசும்போது நான் அமைதியாக இருந்தேனே? (குறுக்கீடுகள்) நீங்கள், Please listen to me. (குறுக்கீடுகள்) நான் எந்த விஷயத்தையும் சபையிலே ஆதாரம் இல்லாமல் பேசுவதில்லை. நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

"In the meeting of all Finance Ministers held on 18-6-2004, in the presence of Honourable Minister for Finance, Government of India, it was decided by all the States that Value Added Tax system would be introduced in all the States in the place of General Sales Tax system. The State of Tamil Nadu also participated in the meeting and agreed to implement V.A.T."

*18–6–2004* அன்று யார் அமைச்சர்களாக இருந்தார்கள் என்பது தெரியாது. ஏனென்றால், அவர்கள் மாற்றிக்கொண்டே இருந்தார்கள்; மூன்று நாட்களுக்கு ஓர் அமைச்சர், நான்கு நாட்களுக்கு ஓர் அமைச்சர் என்று. (மேசையைத் தட்டும் ஒலி) (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, நீங்கள் இடையூறு பண்ணாதீர்கள், என்ன? அமைதியாக உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** நான் வந்து ஏதோ.. (குறுக்கீடுகள்) நான் ஏதோ ஆதாரம் இல்லாமல்... (குறுக்கீடுகள்)



2006 டிசம்பர் 5]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பீட்டர், நீங்கள் பேசுங்கள், மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அவர் பேசிக்கொண்டு இருக்கிறார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். என்ன? (குறுக்கீடுகள்)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** அரை மணி நேரம் பேசினார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். பீட்டர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** அதாவது, அரசாங்கம் என்பது, (குறுக்கீடுகள்) அதாவது, வாதங்களிலே இரண்டு வாதங்கள் உண்டு. வாதம், விதண்டாவாதம். (குறுக்கீடுகள்) இந்த விதண்டாவாதத்திற்காகவே அவைக்கு வருகின்றவர்களிடம் வாதம் பண்ணுகிறவர்கள் தோற்றுத்தான் போவார்கள். (குறுக்கீடுகள்) ஓர் அரசாங்கம் என்பது இரகசியமாக நடத்தப்படக்கூடிய விஷயம் அல்ல. ஓர் அமைச்சருடைய நடவடிக்கைகளோ, அதிகாரிகளுடைய நடவடிக்கைகளோ, ஒவ்வொரு கூட்டமும், அந்தக் கூட்டம் நடக்கின்றபோதே பதிவு செய்யப்படுகின்றன, minutes.

**திரு. டி. ஜெயக்குமார்:** **

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** ** (குறுக்கீடுகள்) இரண்டு, அதாவது,..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக இருங்கள். திரு. பீட்டர், உங்கள் கருத்தை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *18–6–2004* அன்று மத்திய நிதி அமைச்சரால் கூட்டப்பட்ட கூட்டத்திலே, தமிழக அமைச்சரவையின் சார்பாகக் கலந்துகொண்ட அமைச்சர் யார்? அவர் ஒத்துக்கொண்ட விவரங்கள் இன்று அந்தக் கூட்டத்தினுடைய அறிக்கையிலே இருக்கின்றனவா என்கிற ஒரு கேள்வியை நான் கேட்க ஆசைப்படுகிறேன். (குறுக்கீடுகள்) இரண்டாவது, சிறிய வணிகர்களை ஏதோ அடிக்க வந்த ஒரு சட்டம்போல இதைச் சொல்லுகிறார்கள். அதனால்தான் இதை நிறைவேற்றவில்லை என்று சொல்கிறார்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இன்று இங்கே நடைமுறைப்படுத்தக்கூடிய இந்தச் சட்டத்திலே, சிறிய வணிகர்களைப் பாதுகாக்கின்ற அந்த ஷரத்து இணைக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டிலேயே பொருட்கள் வாங்கி, தமிழ்நாட்டிலேயே விற்பனை செய்யும் சிறு வியாபாரிகள், ரூபாய் 10 இலட்சம் வரை பதிவுச் சான்றும் பெறவேண்டாம்; வரியும் கட்ட வேண்டாம் என்று இந்தச் சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மற்ற வணிகர்கள், ரூபாய் 5 இலட்சம் வரை பதிவுச் சான்றும் பெற வேண்டாம்; வரியும் கட்டவேண்டாம். ஏன்? இந்த வரியை அமல்படுத்துகின்றபோது, சிறு வியாபாரிகள் பாதிக்கக்கூடாது என்கிற உணர்வு இருந்தால், அதை எப்படிச் செய்யமுடியும் என்கிற சாதுர்யம் இருந்தால், இந்தத் தமிழ்நாட்டைப்பற்றி அக்கறை இருந்தால், நீங்கள் அந்தச் சட்டத்தை நிறைவேற்றியிருக்க முடியும். இதைப்போல சிறு வியாபாரிகளைப் பாதுகாத்து இருக்கவும் முடியும். ஆனால், நீங்கள் விதண்டாவாதம் செய்வதையே வாடிக்கையாகக் கொண்டவர்கள்; எதிர்மறையாகச் சிந்திப்பதைப் பழக்கமாகக் கொண்டவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்று சொன்ன அந்த இரண்டு வார்த்தைகள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** அப்படியானல் ** எடுத்துவிடச் சொல்லுங்கள்; எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 12–50*

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** அதுபோல, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே சரியான புள்ளிவிவரங்களை இந்த அவைக்குத் தரவேண்டும். இந்த மதிப்புக் கூடுதல் வரிச் சட்டத்தை அமல்படுத்துவதன் காரணமாக, வரி இழப்பு ஏற்படும் என்று சொன்னார்கள். அதை மத்திய அரசே எதிர்பார்க்கிறது. அப்படி வரி இழப்பு ஏற்படுகின்றபோது, முதல் மூன்று வருடங்களுக்கு என்ன வரி இழப்பு ஏற்படுகிறதோ, அந்த வரி இழப்பு முழுவதையும் மத்திய அரசே தரும் என்று சொல்கிறது.

இந்தத் தென் மாநிலங்களிலே, நான் கேட்கிறேன்; தமிழ்நாட்டிலே இவர்கள் மட்டும்தான் புத்திசாலிகளா? ஆந்திரா அமல் செய்திருக்கிறது;

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



கர்நாடகா அமல் செய்திருக்கிறது; கேரளா அமல் செய்திருக்கிறது; குஜராத் அமல் செய்திருக்கிறது; மகாராஷ்டிரம் அமல் செய்திருக்கிறது; ஏன்? ஏழையெளிய மக்களைப்பற்றியே சதா பேசுகின்ற மேற்கு வங்க மாநிலம் அமல் செய்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மேற்கு வங்க மாநிலத்தினுடைய நிதியமைச்சருடைய தலைமையில்தான், Empowered Committee. Empowered Committee-க்குத் தலைவர் யார்? ஒரு காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற மாநிலத்தினுடைய முதலமைச்சர் அல்ல. இன்றைக்கு மேற்கு வங்க மாநிலத்தினுடைய நிதியமைச்சர்தான், அந்த Empowered Committee-யினுடைய தலைவர். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள்தான் இதில் ஒவ்வொரு ஷரத்தையும் வாதிட்டு, சிறிய வணிகர்களை எப்படிப் பாதுகாப்பது; ஏழைகளை எப்படிப் பாதுகாப்பது; நாட்டுக்கு எப்படி வரியைச் சேர்ப்பது என்று இந்தியா முழுவதும் சிந்திக்கின்றபோது, போகாத ஊருக்கு வழி சொல்கின்ற இவர்கள் மட்டும், அது முடியாது என்று சொல்வார்கள்; அதற்கு நம்மையே குற்றம் சாட்டுவார்கள்; காங்கிரஸ் கட்சியைப் பழி சொல்வார்கள். தமிழக மக்கள் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். எனவே, இந்த மாண்புமிகு முன்னாள் அமைச்சர் (குறுக்கீடுகள்) திரு. சண்முகம் அவர்கள் சொன்ன கருத்துகள் அத்தனையும் முழுக்க முழுக்கத் தவறானவை, உண்மைக்குப் புறம்பானவை, யதார்த்தம் இல்லாதவை என்று சொல்லி அமைகின்றேன், நன்றி. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) (குறுக்கீடுகள்) வாய்ப்புக் கொடுக்க முடியாது, உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், முடியாது. அமைச்சர், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? சண்முகம் எவ்வளவு நேரம் பேசினார்? அவ்வளவு கருத்தையும் சொல்லியிருக்கிறார்; போதும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் பேசுகிறார். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) Not allowed. நீங்கள் பேசுங்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** ஒரே நிமிடம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. சி.வி. சண்முகம் அவர்கள் இங்கே

பேசும்போது, இந்த வரி விதிப்பினால் வணிகர்கள் பாதிக்கப்படுவார்கள்; பொது மக்கள் பாதிக்கப்படுவார்கள்; யாருக்கும் இதனாலே பயனில்லை என்ற வாதத்தையெல்லாம் வைத்தார்கள். அது அவருடைய உரிமை; நான் அதிலே குறுக்கிட விரும்பவில்லை. ஆனால், 2003 ஆம் ஆண்டு, மார்ச் 21 ஆம் நாள், இதே சட்டசபையில், அன்றைய நிதியமைச்சராக இருந்த மாண்புமிகு பொன்னையன் அவர்கள் என்ன சொன்னார் என்பதைத் தெரிந்துகொண்டால், மாண்புமிகு உறுப்பினர் திரு. சண்முகம் சொல்வதற்கும், அவர் சொன்னதற்கும் ஒத்த கருத்து இருக்கிறதா என்பதை இந்த அவை தெரிந்துகொள்ள முடியும்.

அவர் அன்றையதினம் பேசியது: ''மதிப்புக் கூட்டு வரி அறிமுகம் செய்வது நீண்டகாலமாக தேசிய அளவில் கொள்கையாக இருந்து வருகிறது. பொருளாதாரச் சீர்திருத்த நடவடிக்கையின் ஒரு பகுதியாகவும், விற்பனை வரிக் கூட்டமைப்பினை எளிமைப்படுத்துவதன் அவசியத்திற்காகவும், மதிப்புக் கூட்டு வரி முறை பரிந்துரைக்கப்படுகிறது. உள்நாட்டில் சீரான ஒரு பொதுச் சந்தையை உருவாக்குவதும், அதன்மூலமாக, இந்திய உற்பத்தியாளர்கள் அவர்களின் உற்பத்திச் செலவினைக் குறைத்து, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் போட்டியிடுவதற்கு வகை செய்வதும், இதன் முடிவான குறிக்கோளாகும்.

மதிப்புக் கூட்டு வரித் திட்டத்தில், தொழில் துறையின் போட்டியிடும் தன்மை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வணிகர்கள், அவர்களின் விற்பனையில் மதிப்புக் கூட்டப்பட்ட பகுதியின்மீது மட்டுமே வரி செலுத்துவதால், அது அவர்களுக்கு நன்மை பயக்கும். பொது மக்கள் மற்றும் நுகர்வோர் நிலையில் பார்க்கும்போது, மதிப்புக் கூட்டு வரி முறையை நாட்டின் வரிக் கட்டமைப்பினை மேலும் ஒளிவு மறைவற்றதாக மாற்றும்'' என்று சொல்லியிருக்கிறார். இங்கே, எங்கே வணிகர்கள் பாதிக்கப்படுகிறார்கள், பொது மக்கள் பாதிக்கப்படுகிறார்கள்? தெரியவில்லை. அது, திரு. பொன்னையன் கருத்து. மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து எதுவோ, எனக்குத் தெரியாது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள், திரு. என். நன்மாறன். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டமுன்வடிவினை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) இதனால் மாநில அரசுக்கு





ஏற்படும் இழப்பை ஈடுசெய்ய மத்திய அரசிடம் பேசி, மாநில அரசு தனக்கு ஏற்படும் இழப்பை ஈடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12–55

அதேசமயம், வணிகர்கள் மத்தியில் புதிதாக சிலபேரிடம் உருவாக்கப்படுகிற அச்சத்தைப் போக்குவதற்கு விரிவான விளக்கம் அளிக்க வேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். Commercial Tax துறையில் பணியாற்றக்கூடிய வணிக வரித் துறை ஊழியர்களிடம், தங்களுடைய வேலைவாய்ப்புப் பறிபோகுமோ என்கிற அச்சம் உண்டு. இதனையும் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்றமுறை வெல்லத்திற்கு வரி விலக்கை சட்டமன்றத்தில் அறிவித்தோம். அதற்கு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று cess வரி போடப்படுகிறது. உற்பத்தியாகிற இடத்தில் பொருளுக்குப் போடுகிற cess வரியை உற்பத்தியாகாத இடத்திலும் போடப்படுகிற முறை இருக்கிறது. அதை ஒழுங்குபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்டாணி மாவு, பொரித்த பட்டாணி இரண்டிற்கும் முழு வரி விலக்கு அளிக்க வேண்டுமென்பதையும் கேட்டுக்கொண்டு, VAT வரிவிதிப்பை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. மாநில அரசுக்கு ஏற்படும் இழப்பை மத்திய அரசு ஈடு செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதைக் கேட்டு அமைகிறேன். (குறுக்கீடுகள்)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சிலர் கோஷமிட்டுக்கொண்டே அவையைவிட்டு வெளியேறினர். திரு. சி.வி. சண்முகம், தாள் ஒன்றினைக் காட்டி கோஷமிட்டுக்கொண்டே இருந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணியாகப் போகிறது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. (குறுக்கீடுகள்)

[2006 டிசம்பர் 5

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்ன சொன்னாலும் அவைக் குறிப்பிலே ஏறாது. (குறுக்கீடுகள்) கத்திக்கொண்டிருக்காதீர்கள், போங்கள். உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம் பேசுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மதிப்புக் கூட்டு வரிக்கான இந்தச் சட்டமுன்வடிவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன். இந்த மதிப்புக் கூட்டு வரி பற்றி இங்கே (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா தி.மு.க.-வினுடைய சட்டமன்றக் கட்சித் துணைத் தலைவர், அவர் வெளிநடப்பு செய்துவிட்டார், உறுப்பினர் இங்கே தனியே பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்)

(அவையில் எஞ்சி இருந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் கோஷமிட்டுக்கொண்டே வெளியேறினர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மதிப்புக் கூட்டு வரியின் மூலமாக புதிய நிலைமைகளைப் பற்றி இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். குறிப்பாக, கடந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், இந்த மதிப்புக் கூட்டு வரியைப்பற்றி பல்வேறு கருத்துகள் இந்த அவையிலே பதியப்பட்டன. அன்றையதினம் அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. சண்முகம் அவர்கள் இந்தக் கருத்தைப்பற்றி இன்றைக்கு விளக்கிச் சொல்லிக் கொண்டிருக்கிறார். இதை அன்றைக்கு ஏற்றுக்கொள்வதற்குரிய காரணம் சொன்னது வேறு, இன்றைக்கு மறுப்பதற்கான காரணம் சொல்வது வேறாக இருக்கிறது. இன்றைக்கு குறிப்பிட்ட நிலைமையில் அவர் பேசுகிறபோது, இந்த மதிப்புக் கூட்டு வரியைப் பொறுத்தவரையிலும் தேசிய அளவிலே ஒன்றாக இருக்க வேண்டுமென்ற கருத்தைச் சொல்கிறார். அப்படி இருக்க வேண்டுமென்பதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால், அதே நிலைமையில், ஒவ்வொரு மாநிலத்திலேயும் மக்களுக்கு ஏற்படுகிற பாதிப்புகள்மீது, சில பொருள்கள்மீது வரிகளைக் குறைப்பதற்குரிய முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. அப்படி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே பல வரிக் குறைப்பு என்பது சென்ற பட்ஜெட் கூட்டத்தொடரிலே நடைபெற்றிருக்கிறது. அதன்மூலமாக மக்கள் பயனடைந்திருக்கிறார்கள், வணிகர்கள் பயனடைந்திருக்கிறார்கள். இதே அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே அவர்கள் அப்படிச் செய்வதற்குரிய



2006 டிசம்பர் 5] [திரு. வை. சிவபுண்ணியம்]

முயற்சிகளை, ஒன்றிரண்டு காரியங்களைச் செய்வதற்காக அவர்கள் முயற்சி எடுத்தார்கள். இப்படி அவர்கள் ஆட்சி செய்கிறபோது அப்படிப்பட்ட காரியத்தைச் செய்வார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்து இதைச் செய்தால், இதை ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று இன்றைக்கு வாதம் செய்து கொண்டிருக்கிறார், முன்னாள் அமைச்சர் அவர்கள். இது என்னவென்றே புரியாத புதிராக இருக்கிறது.

இப்படி இந்த வரி விதிப்பைப் பொறுத்தவரையிலும் மட்டுமல்லாமல், எந்த ஒரு விஷயத்தை எடுத்துக்கொண்டால்கூட, அதிலே இருக்கிற சாதக பாதக நிலைமைகளைச் சொல்லி அதிலே பாதிப்பு ஏற்படுமானால், அதிலே இருக்கிற உண்மை நிலைமைகளை இந்த அவைக்குத் தெளிவுபடுத்துவதிலே எந்த மாறுபட்ட கருத்தும் இல்லை. ஆனால் அதற்கு மாறாக, எதை எடுத்தாலும் எதிர்க்க வேண்டுமென்ற நோக்கத்தோடு அ.தி.மு.க. செயல்படுவது என்பது இது அப்பட்டமாக அவர்களுடைய அரசியல் காழ்ப்புணர்ச்சியை இங்கே காட்டுகிறது என்பதைத் தவிர வேறு கருத்து இல்லை என்பதை இந்தச் சபையிலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதிலே குறிப்பாக இங்கே நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், முனனாள் நிதியமைச்சர் மரியாதைக்குரிய பொன்னையன் அவர்கள் சொன்னதைப்பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதிலே உலகமயமாக்கல் கொள்கைபற்றியும், அதிலே புதிய பொருளாதாரக் கொள்கையின்மூலமாக ஏற்படுகிற விளைவுகளைப்பற்றியும் சொல்லியிருக்கிறார். எங்களைப் பொறுத்தவரையிலும் அந்த அச்சம் இருக்கிறது என்பதை நான் பதிய விரும்புகிறேன். குறிப்பாக இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாக சிறு வியாபாரிகள் பாதித்துவிடக்கூடாது என்பதிலே நமது அரசு எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று நான் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். வர்த்தகத்திலே இப்போது சிறு வியாபாரிகள் தங்களுடைய தொழிலை நடத்திக்கொண்டிருப்பதற்கு மாறாக, பெரிய ஏகபோக முதலாளிகள், ஏகபோக கம்பெனிகள் சில்லரை வியாபாரத்திலும் தலையிடுவதற்குரிய முயற்சிகள் வந்து கொண்டிருக்கின்றன. இது தேசிய அளவிலே வருகிறது. நமது மாநில அளவிலேயும் வருவதற்கான வாய்ப்பு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படி வந்தால் சிறு வியாபாரிகள் பாதிக்கப்படுவார்கள். அப்படி பாதிக்கப்படாதவகையிலே இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வை. சிவபுண்ணியம்] [2006 டிசம்பர் 5

*பிற்பகல் 1–00*

இந்த வரிவிதிப்பின் மூலமாக உள்ள சில செய்திகளிலே ஒன்று. குறிப்பாக, ஓர் உதாரணத்திற்காகச் சொல்ல விரும்புவது, நமது வர்த்தகத்திலே இருக்கக்கூடிய, குறிப்பாக மருந்து வியாபாரம். நமது உயிர்க்ாக்கும் மருந்துகளை விற்கக்கூடிய அந்தச் சில்லரை வியாபாரிகளுக்குரிய சில பிரச்சினைகளைப்பற்றி என்னிடத்திலே குறிப்பிட்டுச் சொன்னார்கள். இந்த வரிவிதிப்பின் மூலமாக அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற பிரச்சினை என்பது, ஏற்கெனவே சில்லரை வியாபாரிகள் வாங்கிச் சேமித்து வைத்திருக்கிற அந்த மருந்துப் பொருட்களுக்கும் இந்த வரிவிதிப்பு பொருந்துகிற காரணத்தினாலே, அவர்களை இந்த வரிவிதிப்பிலிருந்து மீளச் செய்கிற வாய்ப்பு ஏற்கெனவே இருந்து வந்தது. அது இப்பொழுது கிடைக்காமல் போகிறது என்ற ஓர் அச்சத்தை அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். சிறு வியாபாரிகள் பாதிக்கப்படுவோம் என்ற அந்தக் காரணத்தைச் சொல்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு ஏற்கெனவே இருக்கிற, வாங்கிச் சேமித்து வைக்கப்பட்டிருக்கிற அந்த மருந்துப் பொருட்களை விற்பதற்குரிய ஓர் அவகாசம், மூன்று மாதங்கள் என்ற அளவிலேயாவது சொல்லி, அதற்குப் பிறகு இவர்களுக்கு, இதை அமல்படுத்துவதற்குரிய முயற்சிகள் எடுத்தால், அவர்களுக்குரிய பாதிப்பிலிருந்து மீளலாம் என்ற கருத்து இருக்கிறது. இப்படிப் பல்வேறு துறைகளுக்கும் இருக்கலாம் என்று கருதுகிறேன். இதில் எது சரியாக இருக்கும் என்பதை அரசு ஆய்ந்து அதற்குரிய தீர்வினைக் காணவேண்டுமென்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. மு. அப்பாவு.

***திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.தி.மு.க. உறுப்பினர்கள், வணிகர்களுக்கு உதவி செய்வதைப்போன்று, நீலிக் கண்ணீர் வடித்தார்கள். ஓர் உண்மைச் சம்பவம், சென்னையிலே பழைய பேப்பர் கடை வைத்திருந்த ஒருவர், பழைய பேப்பர் கடையிலே காலி பாட்டில்களை வாங்கி வைத்ததற்கு, அரசு, காவல் துறையை அனுப்பி அவரை அடித்து, அவருடைய பொருட்களையெல்லாம் அள்ளி, வெளியே வீசி, அவரைக் கைது செய்து, சிறையிலே அடைத்தார்கள். அந்த இடத்தை, தமிழக வணிகர் சங்கத் தலைவர் வெள்ளையன் அவர்கள் பார்வையிடச் சென்றபோது, அவரும், அவரோடு சேர்ந்தவர்களும் கைது செய்யப்பட்டு, 13 நாட்கள் சிறையில் இருந்ததை இந்த நாடு அறியும், நாட்டு மக்கள் அறிவார்கள். ஆகவே, வணிகர்களுக்கு யார் உதவி செய்தார்கள் என்பதை நாடு அறியும்.



2006 டிசம்பர் 5] [திரு. மு. அப்பாவு]

வணிகர்களைக் கலந்தாலோசிக்க வேண்டும் என்று அ.தி.மு.க. மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். முதன்முதலாக தமிழகத்தில் பட்ஜெட்டுக்கு முன்னால், வணிகர்களை அழைத்து, கலந்துபேசி, அதன்பின்பு பட்ஜெட் தயாரித்து வெளியிடுகின்ற பழக்கத்தை முதன்முதலில் இந்தியாவிலேயே நடைமுறைப்படுத்திய தலைவர்தான், தலைவர் கலைஞர் என்பதை இந்த நேரத்திலே நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னொன்றும் சொல்கின்றேன், பொது விற்பனை வரிமூலம் தமிழ்நாட்டில் பல முனை வரியை ஒரு முனை வரியாக்கிய பெருமை, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களைச் சாரும் என்பதையும் இந்த நேரத்திலே நான் நினைவுபடுத்த விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, 1996 ஆம் ஆண்டு நான்காவது முறையாகப் பொறுப்பேற்ற தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், ஏழையெளிய மக்கள் பயன்படுத்துகின்ற சமையல் எண்ணெய், பருப்பு வகைகளுக்கு இருந்த நான்கு சதவிகித வரியை அறவே இரத்துச் செய்தவர். ஆனால், 2002 ஆம் ஆண்டு, மீண்டும் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த அ.தி.மு.க. அரசு, அதை மீண்டும் நான்கு சதவிகிதமாக உயர்த்தி, ஏழையெளிய மக்களுக்குத் துரோகம் செய்ததை இந்த நாடு ஒருபோதும் மறக்காது. ஆனால், இப்போது நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பின்பு, 22–7–2006–லே நிதியமைச்சர் அவர்கள், இந்த அறிக்கையிலே சொன்னபோது, மீண்டும் சமையல் எண்ணெய்க்கும், பயறு வகைகளுக்கும் அந்த நான்கு சதவிகித வரியை இரத்துச் செய்தவர், டாக்டர் கலைஞர் அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுபடுத்துகின்றேன்.

நம்முடைய உறுப்பினர் சொன்னார்கள்; டெல்லியிலே, நிதியமைச்சர் அவர்களுடைய மாநாட்டிலே நாங்கள் ஒத்துக்கொள்ளவில்லை என்று சொன்னார்கள். 18–6–2004–லே ஒத்துக்கொண்டு, அதை நடைமுறைப்படுத்துவோம் என்று சொன்ன பின்புதான், தமிழக வணிகர் சங்கத் தலைவர் அவர்கள், தமிழகம் முழுவதும் போராட்டத்தை நடத்தி, சிரணி அரங்கில்கூட மிகப்பெரிய அளவில், கடற்கரையில், அனைத்துக் கட்சிகளையும் அழைத்து, கண்டனப் போராட்டத்தை நடத்தியதை நாடு அறியும். ஆகவே டெல்லியிலே, 1–4–2005 முதல் நாங்கள் நடைமுறைப்படுத்துவோம் என்று சொன்னார்கள். ஆனால், இங்கு வந்தபின்புதான், இந்தியாவில் இருக்கின்ற பல பி.ஜே.பி. மாநிலங்களிலும், தமிழ்நாடு, உ.பி., புதுவை தவிர, மற்ற அனைத்து மாநிலங்களும் அதை ஏற்றுக்கொண்டன. பி.ஜே.பி. அரசுகூட, கடந்த 1–4–2006–ல் இருந்து, அவர்களும் அதை ஏற்றுக்கொண்டார்கள். அதி.மு.க. உறுப்பினர் திருத்தம்

கேட்டோம் என்று சொன்னார். திருத்துவதற்கு தமிழகத்தில் அல்ல, இந்தியாவில் இந்த வணிகர்களைப் பற்றிச் சிந்தித்து, திருத்துகின்ற ஆற்றலும், தகுதியும் படைத்த ஒரே தலைவர், தலைவர் கலைஞர் ஒருவர்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைத்தான் நிதியமைச்சர் அவர்கள் சொல்லும்போதுகூடச் சொன்னார்கள், இப்போது மதிப்புக் கூட்டு வரியிலே, ஓராண்டின் turn over மூன்று இலட்சம் ரூபாய் என்றிருக்கிறது என்றால், மூன்று இலட்சத்திற்கு மேல் turn over உள்ளவர்கள், அதற்குச் சான்றும் பெறவேண்டும், வரியும் கட்டவேண்டுமென்று இருக்கின்றது. ஆனால், பத்து இலட்சம் ரூபாய் வரை ஓராண்டிற்கு turn over இருந்தால், அதற்குச் சான்றும் பெறத் தேவையில்லை, வரி கட்டவும் தேவையில்லை என்பதை, நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் இப்போது அறிமுகப்படுத்தியிருக்கின்றார்கள்.

*பிற்பகல் 1–05*

இது ஏதோ ஏழை வியாபாரிகளை, வணிகர்களைப் பாதிக்கும் என்று சொல்லுகின்றார்கள். நான் கேட்கின்றேன், இப்பொழுது இருக்கின்ற பொது விற்பனை வரிச் சட்டத்தின்மூலம் ஆண்டுக்கு ஒரு முறை கணக்கு கொண்டுசென்றால் 50,000/– ரூபாய் வரி என்று சொன்னால், அங்கு இருக்கின்ற அதிகாரிகள் 50,000/– அல்ல, ஒரு இலட்சம் கட்டு என்பார்கள். கட்டப் பஞ்சாயத்து பேசுவார்கள். தவறினால், அந்தக் கடைக்குச் சென்று ஆய்வு செய்வார்கள். ஏதோ ஒரு துண்டுச் சீட்டை எடுத்துக் கொண்டுவந்து ஏதோ மிகப் பெரிய குற்றத்தைக் கண்டுபிடித்தது போல் செய்து, ஒரு இலட்சம் ரூபாய் penalty என்று சொல்லி, அதற்குத் தண்டமாக ஒன்றரை மடங்கு கட்டச் சொல்வார்கள்.

அவ்வாறு விதிக்கப்பட்ட, கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் நிலுவையில் இருக்கின்ற தொகை மட்டும் 4,000 கோடி ரூபாய். திரு. சண்முகம் அவர்கள், நாங்கள் மிக அதிகமான வரியை வசூலித்தோம் என்று சொன்னார். ஆனால், கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் மட்டும் நிலுவையில் இருக்கின்ற—20 ஆண்டு காலம் நிலுவையில் இருக்கின்ற, வணிக வரித் துறையில் நிலுவையில் இருக்கின்ற பணம் 4,000 கோடி—பணம் 4,000 கோடி ரூபாய். நிலுவையில் இருக்கின்ற இந்த வரியை யாராவது வசூலிக்க வேண்டுமென்ற எண்ணம் ஒருபோதும் தோன்றியது இல்லை. அது முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் 1996 ஆம் ஆண்டு முதல்வராக இருந்தபோது, ஒரு சமாதானத் திட்டத்தை அறிவித்து, அதன்படி 50 கோடி ரூபாய் வரியை கஜானாவுக்குக்



கொண்டுவந்த பெருமை நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களைச் சாரும் என்பதை நான் இந்த நேரத்திலே நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல, இப்பொழுது நம்முடைய தமிழக முதல்வர் 1–1–2007–லே VAT–ஐ நடைமுறைப் படுத்துகின்றார்கள் என்றால், உடனடியாக எடுத்த எடுப்பிலே அதைச் செய்யமாட்டார். உலக அளவிலே எந்த நாடெல்லாம் இதை ஏற்றுக்கொண்டது என்று பார்க்கின்றார். பிரேசிலிலே நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது; ஐரோப்பியா கண்டத்திலே நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது; சீனாவிலே நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது; இலங்கையிலே நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது. அவற்றை எல்லாம் ஆராய்ந்து பார்த்து அந்த VAT-ஐ அப்படியே நம்முடைய தலைவர் கலைஞர் ஏற்றுக்கொள்ளவில்லை. இதுவரை எந்தெந்தப் பொருட்களுக்கு வரி விலக்கு அளிக்கப் பட்டிருக்கின்றனவோ அவை அனைத்திற்கும் இங்கே மதிப்புக் கூடுதல் வரியை அமல்படுத்தினாலும் அதையும் நடைமுறைப்படுத்துவோம் என்று அறிவித்திருக்கின்றார்கள்.

நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதி அவர்கள்கூட மயிலாப்பூரிலே இருக்கின்ற வணிகர்கள் சங்க 38 ஆம் ஆண்டு விழா கொண்டாடியபோது கலந்துகொண்டார்கள். பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட வணிகர்களை அழைத்து மயிலை பெரியசாமி அவர்கள் மிகப் பெரிய அளவில் வணிகர்களைக் கூட்டிய கூட்டத்தில் VAT-ஐ ஆதரித்து, அங்குள்ள வணிகர்கள் அந்தக் கூட்டத்திலே பேசினார்கள். ஒரு கோரிக்கை மட்டும்தான் வணிகர்கள் வைத்தார்கள், நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சரிடம். ஆண்டு turn over 10 இலட்சம் ரூபாய்க்கு வரி இல்லை என்று இருப்பதை 20 இலட்சமாக உயர்த்தித் தாருங்கள் என்று கோரிக்கை வைத்துள்ளனர்.

அதேபோல, 50 இலட்சம் வரை turn over இருந்தால் ஆண்டுக்கு ஒரு சதவிகிதம் வரிதான் உண்டு. அதை ஒரு கோடியாக உயர்த்தித் தாருங்கள் என்ற கோரிக்கையை மட்டும்தான் வைத்திருக்கின்றார்களே தவிர, வேறு ஒன்றும் அல்ல. இன்றைய முதல்வர் அவர்கள் மருத்துவ உபகரணங்கள் வாங்குவதற்கு ஏற்கெனவே 10 சதவிகிதம் வரி இருக்கிறது. அதை 4 சதவிகிதமாகக் குறைத்திருக்கின்றார். இது வணிகர்களையும், மக்களையும் பாதிக்கக்கூடியதா? அதுமட்டுமல்ல, அரசு Tea ஏலம் விடும்போது 4 சதவிகிதம் வரியை ஒரு சதவிகிதமாகக் குறைத்து இருக்கின்றார் தலைவர். அதைப்போல, தனியார் Tea ஏலம் விட்டால், 8 சதவிகிதத்தை,

4 சதவிகிதமாகக் குறைத்திருக்கின்றார். சிட்டா நூலுக்கும், சாம்பிராணிக்கும் அறவே இரத்து செய்திருக்கின்றார் தலைவர் கலைஞர்.

அன்று மூதறிஞர் இராஜாஜி அவர்கள் இந்த நாட்டிலே பொது விற்பனை வரித் திட்டத்தைக் கொண்டுவந்தார். அதைப்போல நம்முடைய தமிழக முதல்வர், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர்தான் இந்த மதிப்புக் கூட்டு வரியை தமிழகத்திலே அறிமுகப்படுத்தி, வணிகர்களையும், ஏழை மக்களையும் காப்பாற்றி, சரித்திரத்தில் நீங்காத இடத்தைப் பெறுவார். முத்தமிழ் அறிஞர் கலைஞருடைய ஆட்சிக் காலத்தில் வந்திருக்கின்ற இந்த VAT வரியை வரவேற்று அமர்கின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அப்பாவு பேசிவிட்டாரல்லவா! உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி, பேசுங்கள். சொல்லுங்கள், சொல்லுங்கள். திரு. வசந்தகுமார்.

***திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்புக் கூட்டு வரி என்பது இந்தியாவில் மட்டுமல்ல, உலகம் எங்கும் அந்த மதிப்புக் கூட்டு வரி இருக்கிறது. உதாரணமாக, நீங்கள் வெளி நாடு சென்றால் அந்த நாட்டில் நீங்கள் வாங்குகின்ற பொருளுக்கு மதிப்புக் கூட்டு வரியைப் போடுவார்கள். அந்த மதிப்புக் கூட்டு வரியையும் நீங்கள் விமான நிலையத்திற்கு வருகின்ற நேரத்தில் அதை உங்களிடமே திருப்பிக் கொடுப்பார்கள். அதை இந்தியாவில் செய்வதற்கு வாய்ப்பிருந்தால் அதைச் செய்யலாம். அதோடு மட்டுமல்ல, இந்த வரி விதிப்பில் ஏழைகள் பயன்படுத்துகின்ற, சாதாரண மக்கள் பயன்படுத்துகின்ற bun, rusk இவற்றிற்கு 4 சதவிகித வரியை நீங்கள் விதித்திருக்கிறீர்கள். பருத்தி அல்லது இலவம் பஞ்சால் ஆன மெத்தைகள் இவையெல்லாம் குடிசையில் வாழுகின்ற மக்கள், சாதாரண மக்கள் வாங்கி உபயோகப்படுத்துகின்ற அந்த மெத்தைகளுக்கு வரியை நீக்கவேண்டும்.

பிற்பகல் 1–10

கற்பூரம். ஆண்டவனை வழிபடுகின்ற நேரத்தில் பயன்படுத்துகின்ற கற்பூரத்திற்கு வரி விதித்திருக்கின்றீர்கள். அதை நீக்க வேண்டும்.

பஞ்சுக் கழிவு. வேஸ்ட் பஞ்சுக்கு நீங்கள் 4 சதவிகிதம் வ போட்டிருக்கிறீர்கள். வேஸ்ட் காட்டனுக்கும் நீங்கள் வரி விலக்கு அளிக் வேண்டும். சாதாரணமாக தேங்காய் பால், மாவு போன்றவற்றிற்கு நீங்கள் வரி விதித்திருக்கின்றீர்கள். அதையும் நீங்கள் நீக்க வேண்டும்.





அதோடுமட்டுமல்லாமல் தானியங்கள், பருப்புகள், பயறுகள் ஆகியவற்றிலிருந்து எடுக்கப்படுகின்ற உமி, தவிடு போன்றவற்றிற்கும் 4 சதவிகிதம் வரி போட்டிருக்கின்றீர்கள். அதையும் நீங்கள் வாபஸ் பெற வேண்டும்.

மீனவர்கள் பயன்படுத்தும் இயந்திரமற்ற படகுகள். ஏழை மீனவர்கள் தங்கள் உயிரைப் பணயம் வைத்து கடலில் மீன்பிடிக்கச் செல்கிறார்கள் அவர்களுக்கு எத்தனையோ பிரச்சினைகள் இருக்கும். எனவே, மீனவர்கள் பயன்படுத்தும் அந்த இயந்திரமற்ற படகுகளுக்கு நீங்கள் வரி விலக்களிக்க வேண்டும்.

பனைக்கொழுப்பு அமிலம் மற்றும் ஏழையெளிய மக்கள் பயன்படுத்தும் சர்பத். நெல்லை, குமரி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் பார்த்தால் சர்பத் என்று வெயில் காலத்தில் ஏழை மக்கள் குடிக்கின்ற அந்த சர்பத்திற்கும் நீங்கள் வரி போட்டிருக்கிறீர்கள்.

நிலக்கடலை, எள், அரிசிப்பொரி, வறுத்தகடலை மற்றும் பட்டாணி பருப்பு போன்றவற்றால் செய்யப்பட்ட இனிப்புகள்; இவையெல்லாம் சாதாரண மக்கள் பயன்படுத்துகின்ற உண்கின்ற உணவு. அவற்றிற்கும் அந்த வரியை நீக்க வேண்டும். மரவள்ளிக் கிழங்கு மாவுக்கும் நீங்கள் வரி விலக்களிக்க வேண்டும். அதோடுமட்டுமல்ல...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மத்திய அரசு மொத்தமாக உள்ள பட்டியலிலே உள்ள செய்திகளை, பல செய்திகளை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நம்முடைய மதிப்புக் கூட்டு வரிக்காக கொண்டுவரப்படுகிற சட்டத்திலுள்ள ஷரத்துகள் அடிப்படையில் அதற்காக தயாரிக்கப்படுகிற விதிமுறைகள் அடிப்படையில் இவற்றில் பல பொருட்களுக்கு வரி இருக்காது என்ற கருத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எச். வசந்தகுமார்:** மேலும், இப்போது நாம் பயன்படுத்துகின்ற குளிர்சாதன பெட்டி, ஏர்–கண்டிஷனர் (குறுக்கீடுகள்) 23 சதவிகித இருக்கிறது. அதை 12½ சதவிகிதமாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வசந்தகுமார், உறுப்பின வசந்தகுமார் (குறுக்கீடுகள்) எந்தெந்தப் பொருள்களுக்கு என்ன பின்னால்தான் முடிவு எடுப்பார்கள். நீங்கள் ஜெனரலாகப் பேசுங்க (குறுக்கீடுகள்)

**திரு. எச். வசந்தகுமார்:** ஒரேயொரு நிமிடம், 23 சதவிகிதம் உள்ளது. அதை 12½ சதவிகிதமாக மாற்றியிருக்கிறோம். அது இந்த மக்களுக்கு கிடைக்கின்றவகையில் சட்டம் இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மதிப்புக் கூட்டு வரி எங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. காங்கிரஸ் கட்சியால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பொதுமக்களால், வியாபாரிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று என்று நான் இந்த வரியை வாழ்த்தி வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிகர்களின் பாதுகாவலராக இருக்கின்ற நம்முடைய முதலமைச்சர் அவர்கள், அவசரம் அவசரமாக முடிவு எடுக்காமல் 6 மாதம் கழித்துத்தான் இந்த முடிவை எடுத்திருக்கிறார்கள். ஆறு மாதத்திற்குப் பிறகு இந்த முடிவை எடுத்திருக்கிறார் என்றால், நல்லது–கெட்டதையெல்லாம் ஆலோசித்துத்தான் இந்த முடிவை எடுத்து, ஜனவரி மாதம் அமலுக்கு வரும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இருந்தபோதிலும், உலகச் சந்தையிலே, அன்னியச்செலாவணி ஏறிவிட்ட காரணத்தினால் மத்திய அரசு பெட்ரோல் விலையை, டீசல் விலையை உயர்த்தியது. அப்போது தமிழகத்தினுடைய மக்கள் அந்தச் சுமையைத் தாங்கமுடியாது என்று நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டின் வரியைக் குறைத்துக்கொள்ள முன்வந்தவர். அதேபோன்று சிறிய வியாபாரிகளுக்கு எந்தவிதத் துன்பங்களும், பாதகங்களும் வராமல் பாதுகாப்பார் என்று தமிழக மக்களுக்கு நம்பிக்கையிருக்கிறது. குறிப்பாக, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, வெளிநாட்டில் விமான நிலையத்திற்கு வரும்பொழுது அந்த வரியைத் திருப்பிக் கொடுப்பார்கள் என்று சொன்னார். அந்த வரியை சுற்றுலாப் பயணிகளுக்கு மட்டும்தான் திருப்பிக் கொடுக்கிறார்களே தவிர, அனைத்து நபர்களுக்கும் அவர்கள் திருப்பிக் கொடுப்பதில்லை. நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். அது என்னவென்றால், அனைத்து வியாபாரப் பெருங்குடி மக்களும், வியாபார சங்கத் தலைவர்களும் இதை வரவேற்றாலும், அவர்களுக்கு உள்ளுக்குள் ஓர் அச்சம் இருக்கிறது. இதனால் ஏதாவது பாதகம் வந்துவிடுமோ என்று சிறிய வியாபாரிகளுக்கு ஓர் அச்சம் நிலவிக் கொண்டிருக்கிறது. நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கலந்துகொண்ட ஒரு நிகழ்ச்சியிலேகூட அந்த வியாபாரிகள் சங்கத் தலைவர்கள் எல்லாம் சில்லறை வியாபாரிகளுக்கு 10 இலட்சம் ரூபாய் நீங்கள் விலக்கு அளித்திருக்கிறீர்கள். அதை இன்னும்





கொஞ்சம் உயர்த்த வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். விடுதலைச் சிறுத்தைகளும் அந்தக் கோரிக்கையை ஆதரிக்கிறது. அந்த ரூ.10 இலட்சத்தை ரூ.50 இலட்சமாக உயர்த்தினால் ஏழை எளிய மக்களுடைய வாழ்விலே ஒளி ஏற்ற முடியும். ஆக, இந்த வரி விதிப்பு, வருகின்ற 1 ஆம் தேதி முதல் அமலுக்கு வருவதை விடுதலைச் சிறுத்தைகள் ஆதரிக்கிறது என்று கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 1–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்புக் கூட்டு வரியின்மீது பல்வேறு கட்சித் தலைவர்களும் இங்கே தங்களுடைய கருத்துகளைக் கூறி இருக்கிறார்கள். இங்கே வெளிநடப்புச் செய்திருக்கிறவர்கள், அவர்களுடைய முன்னாள் நிதி அமைச்சர் பேசியதை நம்முடைய மின் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துக் காட்டியவுடனே, அது பொறுக்காமல் வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். வள்ளுவன் சொல்லுவான்:

> "கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
> சொல்வேறு பட்டார் தொடர்பு."

என்று சொல்லுவான். இப்படி அவர்களது சொல்லுக்கும், செயலுக்கும் தொடர்பு இல்லாதவர்கள் என்பதைத்தான் இங்கே காட்டிச் சென்றிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர் திருமிகு பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசுகிறபோது, இந்த வரியினைப் பற்றி வரவேற்றுக் குறிப்பிட்டார்கள். வள்ளுவப் பேராசான் சொல்லுவான்:

> "எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
> அவ்வது உறைவது அறிவு."

என்று சொல்லுவான். உலகம் எப்படிப் போய்க்கொண்டிருக்கிறதோ, அதற்கு ஏற்றவாறு நாமும் நம்மைத் தயார்படுத்திக் கொள்ளவேண்டும். அதை பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்வார்கள்: "காலத்திற்கேற்ப நாம் நம்மை மாற்றிக்கொண்டாக வேண்டும். அப்படி மாற்றிக்கொள்ளாத சமுதாயம் வீழ்ந்துவிடும்" என்று சொல்வார்கள். அந்த வகையிலே இன்றைக்கு இந்தியா முழுவதும் உள்ள நிலையிலே நாம் மதிப்புக் கூட்டு வரியைக் கொண்டுவந்திருக்கிறோம். நாமும் 1–1–2007 முதல் கொண்டுவந்திருக்கிறோம். இதிலே, இப்பொழுதுகூட இந்த 3 மாத காலத்திற்கு நமக்கு 75 சதவிகிதம்தான் மத்திய அரசினுடைய மானியம்

கிடைக்கும். அதன்மூலமாகவே நமக்கு சுமார் 375 கோடி ரூபாய் இழப்பு இதைக் காலம் தாழ்த்திக் கொண்டுவருகிற காரணத்தினாலே ஏற்படுகிறது.

பொதுவாக சிறு வணிகர்களைப்பற்றிச் சொன்னார்கள். ஏற்கெனவே 3 இலட்சம் ரூபாய்தான் வரிவிலக்கு இருந்தது. ஆனால், இன்றைக்கு ரூபாய் 10 இலட்சமாக உயர்த்தி இருக்கிறோம். 3 பங்குக்கு மேலே உயர்த்தி இருக்கிறோம். இதை இப்பொழுது 20 இலட்சம் ரூபாய் என்று நீங்கள் குறிப்பிட்டது எல்லாம், பொதுவாக வணிகர்கள் நன்றாக இந்த நிலைகளை உணர்ந்தவர்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்ட உடனே, வணிக வரித் துறை எனக்குக் கொடுக்கப்பட்ட உடனே, முதலாவதாக, தமிழகத்திலே உள்ள அனைத்து வணிகர்களும் எல்லோரும், அந்த மதிப்புக் கூட்டு வரி எப்பொழுது வரும், என்கிற ஒரு நிலையை எல்லோரும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். என்ன காரணம் என்றால், அதிலே அவர்களுக்கு கூட்டிய வரியைத் திரும்ப பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதாவது set-off. ஒருவர் ஒரு பொருளுக்கு 40 காசு வரி செலுத்தி இருந்தால், மீண்டும் அவர் விற்கிறபோது, எந்த அளவுக்கு அவர் என்ன இலாபம் வைத்து விற்கிறாரோ அதற்கு மட்டும்தான் அவர் வரி கட்ட வேண்டும். எனவேதான், இதற்கு நாடு முழுவதும் நல்ல வரவேற்பு இருக்கிறது. சிறிய வணிகர்களுக்கு ஓர் அச்சம் இருந்தது. ஆனால், ரூபாய் 3 இலட்சத்திலிருந்து ரூபாய் 10 இலட்சமாக நாம் உயர்த்திய உடனே, அவர்களுக்கு அந்த அச்சம் போய்விட்டது. ஒரு நாளைக்கு 3 ஆயிரம் ரூபாய், 3,200 ரூபாய்க்கு வியாபாரம் செய்யக்கூடியவர்கள் இந்த 10 இலட்சம் ரூபாயிலே அவர்கள் வந்துவிடுகிறார்கள். அதற்கு அடுத்தாற்போல நாம் compounding tax என்று ஒரு சதவிகிதத்திற்கு மிகாமல் என்று வைத்திருக்கிறோம். அதற்கெல்லாம் பின்னாலே கருத்துருக்கள் கேட்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இது எல்லாவற்றிலுமே பொதுவாக கருத்துருக்கள் வரவேற்கப்படுகின்றன.

அந்த வகையிலே 50 இலட்சம் ரூபாய் வரையிலே வியாபாரம் செய்பவர்கள் 1 சதவிகிதத்திற்கு மிகாத வரி செலுத்துகிறார்கள். ரூபாய் 10 இலட்சம் வரை வியாபாரம் உள்ளவர்கள் R.C. எடுக்க வேண்டியதில்லை; பதிவுச் சான்றிதழ், எந்த வேலையும் அவர்களுக்குக் கிடையாது. 50 இலட்சம் ரூபாய் உள்ளவர்கள் compounding tax 1 சதவிகிதத்திற்கு மிகாமல் அவர்கள் தங்களுடைய வரியை கட்டிக்கொள்ளப் போகிறார்கள். இப்பொழுது உள்ள நடைமுறைக்கும் மதிப்புக் கூட்டு வரிக்கும் நடைமுறையிலே உள்ள முக்கியமான வித்தியாசம். இனிமேல் சிறிய வணிகர்கள் அலுவலகத்திற்குச் செல்ல



வேண்டியதில்லை. ரூபாய் 10 இலட்சத்திற்கு உள்ளே வணிகம் செய்பவர்கள், அதற்கு மேலே எந்த நிலையிலே வணிகம் செய்பவர்களுக்கும், அவர்களுடைய சுய வரி விதிப்பு முறைதான். ஏற்கெனவே அரசு அலுவலர்கள், அந்த வணிக வரித் துறை அதிகாரிகள் அதை நிர்ணயம் செய்தார்கள். இப்போது இவர்களுடைய self assessment, சுய வரிவிதிப்பு முறைதான் இப்போது இந்த VAT முறையிலே. எனவே, இது வணிகர்களுக்கு மிகுந்த பயனைத் தரக்கூடியது.

நம்முடைய திருமிகு சிவபுண்ணியம் அவர்கள் குறிப்பிட்டார்கள், மருந்து வணிகத்தைப் பற்றி. பொதுவாக, எல்லோருக்கும் இந்த உள்ளீட்டு வரி, 31–12–2006–ல் எந்தச் சரக்கு வைத்திருந்தாலும், அந்தச் சரக்குகளுக்கு அவர்கள் என்ன வரி செலுத்தியிருக்கிறார்களோ, அந்த bill வைத்திருந்தால், அந்த வரி அவர்களுக்குத் திரும்பக் கொடுக்கப்படும். Bill இல்லை என்று சொன்னால், அதற்கு வரி கொடுப்பதற்கு இடம் இல்லை; அப்படிக் கொடுத்தால், எப்படிக் கொடுக்க முடியும் என்பதை நீங்கள் சற்று சிந்தித்துப் பாருங்கள்; அதற்கு வழி இல்லை. 31–12–2006–ல் அவர்களுடைய சரக்குகளுக்கு, கையிலே இருக்கிற சரக்குகளுக்கு, வரி கட்டி bill வைத்திருக்கிறார்களோ அதற்கு உரிய வரியை அவர்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் என்கிற நிலை இருக்கிறது. (குறுக்கீடு) வாங்கும்போது உள்ள bill; அவர்கள் வாங்கியபோது உள்ள bill – purchase bill – அதிலே கட்டி இருக்கிற வரி, அவர்களுக்குத் திரும்பக் கிடைக்கும்.

பிற்பகல் 1–20

அடுத்து, C.S.T. 4 சதவிகிதம். அதிலே பேச்சுவார்த்தை பொதுவாக நடந்து கொண்டே இருக்கிறது. பணப் பயனாகக் கொடுக்க வேண்டும் என்பதைத்தான் எல்லா மாநில அரசுகளும் வற்புறுத்திக் கொண்டிருக்கின்றன. அவர்கள் இந்த சதவிகிதத்தை எல்லாம் குறைக்கிறார்கள், இப்போதைக்கு அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. இப்போதைக்கு, 4 சதவிகிதம், மாநில அரசுகளுக்கு உள்ள முறையிலே இருக்கிறது என்பதுதான், CST–ஆக இருந்து கொண்டிருக்கிறது.

On-line–ஐப் பற்றிச் சொன்னார்கள், அது உலகம் முழுவதும் இருக்கிற நிலை. அதற்குக் கருத்துருக்கள் இருக்கின்றன, அதற்கு என்ன பண்ணலாம், எப்படித் தவிர்க்க முடியும்; இதனாலே விலைவாசி ஏறுகிறதா, இறங்குகிறதா என்று பார்க்க வேண்டும். பொதுவாக, விலைவாசியைப் பற்றி நாங்களும் வணிகர்களிடம் பேசினோம்; ஏன் இப்படி என்று. நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் இன்றைக்கு, "பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப் பரிந்துநீ..." என்று உங்கள் எல்லோருக்கும் வரி விலக்கு எல்லா வகையிலும் கொடுத்திருக்கிறார்கள்.

[திரு. சி.நா.மீ. உபயதுல்லா] [2006 டிசம்பர் 5

ஆனால், விலைவாசி ஏறிக் கொண்டிருக்கிறதே எப்படி என்று கூபபிட்டுக் கேட்கும்போது, அவர்கள் அங்குள்ள நிலைமைகளைச் சொன்னார்கள். பொதுவாக, இது சில மாதங்களிலே இப்படி வரி கூடும்; அந்த நிலை சில மாதங்கள் இருக்கும், அதுபோல, குஜராத் மழையிலே, குஜராத்திலிருந்து பருப்பு வரவில்லை; ஆந்திராவிலே உற்பத்தி, அங்கே மானியங்கள் கொடுக்கிறார்கள் என்று அதுபோன்ற கருத்துகளை வணிகர்கள் சொல்கிறார்கள். ஆக, இதற்கும் நாம் இந்த விலைகளைக் குறைத்திருப்பதற்கும், விலைவாசிகள் இந்த இடைக்காலத்திலே ஏறி இருப்பதற்கும் அதிகமான தொடர்பு என்பது இல்லை.

பொதுவாக, நம்முடைய மக்கள் நலனைக் கருதி, இந்த VAT–லே நாம் ஏற்கெனவே எந்தெந்தப் பொருள்களுக்கெல்லாம், வரிவிலக்கு கொடுத்திருக்கிறோமோ, அவை அத்தனைக்கும் நமக்கு மீண்டும் VAT–லேயும் வரிவிலக்கு உண்டு. நாம் எதை எதையெல்லாம்— ஏற்கெனவே இருக்கிற பட்டியல், இப்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கடந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருப்பது எல்லாம், மீண்டும் அந்த வரிவிலக்கு என்பதில் அப்படியே வருகிறது. இது இல்லாமல் 12½ சதவிகிதம் வரி என்று சில பொருள்களையெல்லாம் மத்திய அரசு குறிப்பிட்டுக் காட்டி இருக்கிறது. நம்முடைய மாநில, State Empowered Committee, அதில் நம்முடைய நிதி அமைச்சர் அவர்களோடு அன்றைக்குக் கலந்து, கிட்டத்தட்ட 30 பொருள்களை மீண்டும் 4 சதவிகிதத்திற்கே கொண்டு வந்திருக்கிறோம். ஏனென்றால், மக்களுக்கோ அல்லது வணிகர்களுக்கோ அது இடையூறாக இருக்கக்கூடாது என்று. அதிலே variation-கூட இருக்கிறது. அந்த variation-கூட நமக்குக் கிடைக்காது. அந்த நிதிகூட, நமக்கு அந்த மானியத் தொகையிலே அவர்கள் அதைக் கழித்துக்கொள்வார்கள், அந்த variation இருந்தாலும்கூட, மக்கள் நலனையும், வணிகர்களுடைய நலனையும் கருதி, அந்தப் பொருள்களையெல்லாம் 4 சதவிகிதத்திற்கே—12½ சதவிகிதம் என்று அந்த அட்டவணையிலே இருக்கிறது.—ஆனால், நாம் 4 சதவிகிதத்திற்கே கொண்டு வந்திருக்கிறோம். எனவே, இது, வணிகர்களுக்கும், மக்களுக்கும் ஏற்படக்கூடிய ஒரு நன்மையான வரி விகிதம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதிலே re-sales tax இல்லை; additional tax இல்லை; surcharge இல்லை; இவை எல்லாமே பொது மக்களுக்கும், வணிகர்களுக்கும் பயன்தரக்கூடியவை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கோருகிறேன்.



2006 டிசம்பர் 5]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 88 வரை மற்றும் இணைப்புப் பட்டியல்கள் திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 88 வரை மற்றும் இணைப்புப் பட்டியல்கள் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1–25

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2006) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (6–12–2006) புதன்கிழமை காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–25 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (கிராம ஊராட்சிக் குழுக்கள் அமைப்பு மற்றும் அதற்குக் கடமைகள் பகிர்வு) விதிகள் இயற்றுவது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 12–7–2005 ஆம் நாளிட்ட அரசாணை எண் 102–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

2. மின்னணுப் பொருட்களின் பாகங்களின் விற்பனை மீது வணிகர்கள் செலுத்த வேண்டிய வரித் தொகையினை 17–7–1996 ஆம் நாள் முதல் 16–9–1996 ஆம் நாள் வரையிலான கால அளவிற்கு தள்ளுபடி செய்துள்ளது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் 20–7–2006 ஆம் நாளிட்ட அரசாணை (2டி) எண் 90–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]



3. ஏதேனும் வணிகர், சங்குகள் விற்பனைமீது செலுத்த வேண்டிய 1 சதவீத வரி வேறுபாட்டுத் தொகை (ஐந்து சதவீதம் வரி மற்றும் நான்கு சதவீதம் வரி இடையிலான வேறுபாட்டுத் தொகை) மற்றும் மேல்வரியினை 1982 முதல் 1984 வரையிலான கால அளவிற்கு தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் 26–7–2006 ஆம் நாளிட்ட அரசாணை (2டி) எண் 96–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) மற்றும் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல்வரி) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 24/1971) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

4. திருவாளர்கள் மேப்ஸ் அண்ட் ஏஜென்சீஸ், திருவாளர்கள் ஸ்கூல் நீட்ஸ், திருவாளர்கள் ஜெய்சங்கர் அண்ட் கம்பெனி மற்றும் திருவாளர்கள் குளோபல் ஏஜென்சீஸ் ஆகியோர் 18–7–1986 முதல் 5-5-1991 வரையிலான கால அளவிற்கு விற்பனை செய்துள்ள வரைபடங்களுக்கு செலுத்தத்தக்க வரித் தொகையை தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் 26–7–2006 ஆம் நாளிட்ட அரசாணை (2டி) எண் 97–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

5. வேலூர், திருவாளர்கள் வாசுதேவ முதலியார் அண்டு சன்ஸ் வறுகடலை விற்பனை செய்ததின்மீது செலுத்தத்தக்க வரி மற்றும் மேல்வரியை 1995–1996 ஆம் ஆண்டுக் கால அளவிற்கு தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் 23–8–2006 ஆம் நாளிட்ட அரசாணை (2டி) எண் 123–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) மற்றும் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல்வரி) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7(3) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

6. சென்னை, பழவந்தாங்கல், எண் 72, காந்தி சாலை என்ற முகவரியிலுள்ள திருவாளர் வி. சீனிவாசன், 1993–1994 ஆம் ஆண்டிலிருந்து

1997–1998 ஆம் ஆண்டு வரையிலான கால அளவிற்கு, தமிழ்நாடு மின்வாரியத்திற்கு விற்பனை செய்த மீண்டும் வலுவூட்டப்பட்ட சிமிட்டிக் கற்கலவைத் தொட்டியின் மீது செலுத்தத்தக்க 8 சதவீதம் முதல் 12 சதவீதத்திற்கும் மற்றும் 11 சதவீதம் முதல் 16 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வரி மற்றும் மேல்வரி வகையிலான வேறுபாட்டுத் தொகையினை தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் 4–9–2006 ஆம் நாளிட்ட அரசாணை எண் 134–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) மற்றும் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல்வரி) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7 (3) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

7. 1921 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகர வாடகைக்கு குடியிருப்போர் பாதுகாப்புச் சட்டத்தின் வழிவகையினை மதுரை மாவட்டம், மதுரை தெற்கு வட்டம், விரகனூர் கிராமத்திற்கும் விரிவுபடுத்தும் அறிவிக்கை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும் வகையில் வருவாய்த் துறையின் 28–8–2006 ஆம் நாளிட்ட அரசாணை எண் 556–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1921 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகர வாடகைக்கு குடியிருப்போர் பாதுகாப்புச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 3/1922) 1 (6) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

8. 2005–2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 6/2006).

2. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாவது திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 7/2006).

227429
Chennai-600 008

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the
Special Commissioner and Commissioner of Stationery and Printing, Chennai-600 002.